REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 13 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 11 | Friday 13, January, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## செயலாளரை வரவழைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் அவரது சுயவிருப்பின் பேரில் சமுகமளிக்கலாமே தவிர, அவரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வரவழைப்பதற்கான எத்தகைய அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடையாதென சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேர்தல் ஆணைக் 06

### உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதல் சம்பவம்

# புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்தும் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை













## பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குமாறு மைத்திரி, பூஜித், ஹேமசிறி, நிலந்த, சிசிர ஆகியோருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

### 07 பேர் அடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்று தீர்ப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத குற்றம் தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சொந்த நிதியிலிருந்து 10 கோடி ரூபாவை நட்டஈடாக வழங்கவேண்டுமென அத்தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரசாங்க புலனாய்வுப் பிரிவு தலைவர் நிலந்த ஜயவர்த்தன ஆகிய இருவரும் தலா 07 கோடியே 50 இலட்சம் ரூபாவையும் நட்டஈடாக வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன். ஜனாதிபதி மைத்திரி – ரூ. 10 கோடி
பூஜித் – ரூ. 07 கோடியே 50 இலட்சம்
நிலந்த – ரூ. 07 கோடியே 50 இலட்சம்
ஹேமசிறி – ரூ. 05 கோடி
சிசிர – ரூ. 01 கோடி
அரசாங்கம் – ரூ. 10 இலட்சம்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 05 கோடி ரூபாவையும் முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி சிசிர மெண்டிஸ் 01 கோடி ரூபாவையும் தனிப்பட்ட நிதியிலிருந்து நட்டஈடாக வழங்கவும் தீர்ப்பளித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக அரசாங்கமும் 01 மில்லியன் ரூபாவையும் நட்டஈடாக வழங்க வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாங்க புலனாய்வு பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி நிலந்த ஜயவர்த்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத்தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதமை அடிப்படை உரிமையை மீறிய 06

### ஊழியர் பற்றாக்குறையை காரணம் காட்டி

## ரயில் சேவைகளை இரத்து செய்யும் தீர்மானத்தை விலக்கிக்கொள்ளவும்

### அமைச்சர் பந்துல அதிகாரிகளுக்கு ஆலோசனை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அன்றாட ரயில் சேவைகளில் 42 சேவைகளை இன்று (13) முதல் இரத்து செய்வதற்கு ரயில்வே திணைக்கள உயரதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இந்நிலையில், போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய அந்தத் தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 06



### அரசின் தடை நீக்கத்தின் பின்னர்

## கட்டார் செரிட்டி நிறுவனத்தின் அலுவலகம் மீண்டும் திறப்பு



அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட பயங்கரவாத தடை நீக்கப்பட்டதையடுத்து, "கட்டார் செரிட்டி" என்ற தொண்டு நிறுவனம் இலங்கையில் தனது அலுவலகத்தை மீண்டும் திறந்துள்ளது.

கட்டார் செரிட்டி நிறுவனம், அந்நாட்டு அரசாங்கத்தின் முக்கிய தொண்டு நிறுவனமாகும். இது 06

## உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதானால் நிதியை கட்டம் கட்டமாகவே வழங்க முடியும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

### திறைசேரியின் அதிகாரிகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் தெரிவிப்பு

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதானால், இதற்கென தேர்தல் ஆணைக்குழு கோரும் நிதியை கட்டம், கட்டமாகவே வழங்க முடியும் என திறைசேரியின் அதிகாரிகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு தேவையான நிதி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் திறைசேரியின் அதிகாரிகளுக்குமிடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே அந்த அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழு விடுத்திருந்த வேண்டுகோளுக்கிணங்க திறைசேரியின் அதிகாரிகள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா உள்ளிட்ட 06

## சுதந்திர தின கொண்டாட்டத்தின் செலவுக்கு ரூ. 200 மில். ஒதுக்கீடு

### பிரதமரின் வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி



கொழும்பு, காலி முகத்திடலில் எதிர்வரும் பெப்ரவரி (04) நடைபெறவுள்ள 75ஆவது சுதந்திர தின வைபவங்களுக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன உறுதிப்படுத்தியுள்ளார். 06

## தமிழரசுக் கட்சியை சிதைக்க முயற்சியா?

### ரெலோ, புளொட் மீது சம்பந்தன் சாடல்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று பங்காளிக் கட்சிகளும் தனித்தனியாகப் போட்டியிட்டால், கூடுதலான ஆசனங்களை கைப்பற்ற முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் 06



## அத்தியாவசிய பொருட்கள் நான்கின் விலை குறைப்பு

### சதொச நிறுவனத்தில் கொள்வனவு செய்யலாம்

ஸ்ரீலங்கா சதொச நிறுவனம் 04 உணவு பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது. இதன்படி, உள்ளூர் சம்பா அரிசியின் விலை 05 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 220 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உள்ளூர் வெள்ளை பச்சை அரிசி விலை 16 ரூபாவினால் குறைக்கப்பட்டு 189 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

உள்ளூர் நாட்டரிசி விலை 02 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 198 ரூபாவுக்கு 06

## இந்திய நிதி அமைச்சருடன் இ.தொ.கா தலைவர் சந்திப்பு

### இலங்கை பொருளாதார நிலைமை குறித்து கலந்துரையாடல்





இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் மத்திய பிரதேசம், இன்டோரில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இச்சந்திப்பில் இலங்கையின் பொருளாதார விவகாரங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த தருணத்தில், இந்தியா வழங்கிய உதவிகளுக்கு இதன்போது செந்தில் தொண்டமான் நன்றிகளை தெரிவித்தார்.

எதிர்கால பொருளாதார சவால்கள் மற்றும் அதனை எதிர்கொள்வது குறித்தும், தொடர்ந்தும் 06

## ஐந்து தமிழ் கட்சிகளுடன் புதிய கூட்டணி உதயம்

### யாழ்ப்பாணத்தில் இன்று கைச்சாத்து

பிரதான 05 தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை கூட்டணியாக எதிர்கொள்வதென முடிவு செய்துள்ளன.

இது தொடர்பான கூட்டு ஒப்பந்தம் இன்று (13) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை தனித்துச் சந்திக்கவுள்ளதாக 06

## தூத்துக்குடியிலிருந்து 785 பேருடன் சொகுசுக் கப்பல் இலங்கை வருகை

785 வெளிநாட்டு பயணிகளுடன் சொகுசு கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. நேற்று (12) காலை இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து வந்த இந்தக் கப்பல், இரண்டு நாட்கள் இலங்கையில் நங்கூரமிட்டிருக்கும்.

எம்,எஸ், அமேரா என்று அழைக்கப்படும் பயணிகள் கப்பலே இவ்வாறு இலங்கை வந்துள்ளது.



## தங்கத்துக்கு பதிலாக பித்தளையில் தாலி

### யாழில் CID யால் ஒருவர் கைது

தங்கத்துக்கு பதிலாக பித்தளையில் தாலி, மற்றும் கொடி செய்து கொடுத்து மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, கடந்த

தாலி மற்றும் அதற்கான 06



## பேருவளை மாளிகாச்சேனை

# விமரிசையாக நடைபெற்ற அஸ்ஸஃதியதுல் இஸ்லாமியா மகளிர் அரபுக் கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை மண்ணில் இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட அஸ்ஸஃதியதுல் இஸ்லாமியா மகளிர் அரபுக் கல்லூரி பல சாதனைகளை நிலைநாட்டி அல்லாஹ்வின் அருளால் முன்னேற்றப் பாதையில் வெற்றிகரமாக கால்பதித்து வருகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் கண்ணியத்திற்குரிய செய்ஹ் நாயகம் அல் ஆலிமுல் பாழில் அஷ் செய்ஹ் காமில் அஹ்மத் இப்னு அஷ் செய்ஹ் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி ஹபிழஹுல்லாஹ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் சிறந்ததொரு நிர்வாக

சபையின் கீழ் இம்மகளிர் கல்லூரி இயங்கி வருகிறது.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் அகீதாவுக்கமைய பேருவளை மாளிகாச்சேனை,பெலஸ்பாத் பகுதியில் சிறந்ததொரு இஸ்லாமியச் சூழலில் மௌலவி எம்.ஆர்.எம். ஸரூக் ஆலிம் (முஸ்தபவி)யை அதிபராகவும் அல் ஆலிமா பாத்திமா றிஸ்வானா (அஸ்ஸலாமிய்யா) வை உப அதிபராகவும் கொண்டு இயங்குவதுடன் 9 போதனாசிரியர்களும்

சேவையாற்றி வருகின்றனர். ஹிதாபுப் பிரிவில் 30 பேரும் குர்ஆன் மத்ரஸா பிரிவில் 140 பேரும் கற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி அஸ் ஸஅதியதுல் இஸ்லாமிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் ஐந்தாவது மௌலவியா பட்டமளிப்பு விழாவும் 10வது வருட பூர்த்தி வைபவமும் கடந்த 8ம் திகதி (08.01.2023) நூன் கல்வி நிறுவக மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் 11 பேர் பட்டம் பெற்றதோடு அவர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களின் தந்தைமார்களிடம் வைபவத்தில் கையளிக்கப்பட்டது.

கலாபீட நிர்வாக சபைத் தலைவரும் நௌபல் ஜெம்ஸ் சாமிலா ஜுவலர்ஸ் உரிமையாளருமான நௌபர் ஹாஜியார் வரவேற்புரை நிகழ்த்தியதோடு அல் மத்ரஸதுல் நபவிய்யா, அல் மத்ரஸதுல் முஸ்தபவிய்யா மாணவர்களின் கஸீதாக்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மௌலவி முஹம்மத் பாஹிம் (முஸ்தபவி), மௌலவி முஹம்மத் நஸ்மி (முஸ்தபவி) ஆகியோர் பட்டமளிப்பு விழாவில் விசேட சொற்பொழிவாற்றினர்.

கலாபீட கௌரவத் தலைவர் அப்துல் பாரி, பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத், நூன் கல்வி நிலைய நிறுவன பொறுப்பாளர் ஏ.எச்.எம்.முபாரக் (ஆசிரியர்), பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை பிரதி அதிபர் அப்துல் காதர் உட்பட உலமாக்கள், புத்திஜீவிகள், காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் முக்கியஸ்தர்கள், பெற்றோர்கள், குர்ஆன் மத்ரஸா சிறார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

டொக்டர் முஹம்மத் ஹுஸைன், டொக்டர் அஹ்மத் அதீக், டொக்டர் முஹம்மத் நிப்லான், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத், மௌலவி முஹம்மத் நஸ்மி (முஸ்தபவி) ஆகியோர் பட்டமளிப்பு சான்றிதழை கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

பட்டமளிப்பு விழா இரண்டாம் அமர்வு பெண்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

### கலாபீட நிர்வாக சபைத் தலைவர் தேசமான்ய கலாநிதி ஏ.எச்.எம். நௌபர் ஹாஜியார் தனது வரவேற்புரையில்;

எங்கள் கண்ணியத்திற்குரிய ஷெய்கு நாயகம் அவர்களின் அரிய முயற்சியால் 2012ஆம் ஆண்டில் வேர்விலை மாளிகாசேனையில் அஸ் ஸஃதிய்யதுல் இஸ்லாமிய்யா மகளிர் அரபுக் கல்லூரியை ஸ்தாபித்து வைத்தார்கள். இது தான் வேர்விலையின் சட்டபூர்வமான முதலாவது பெண்கள் அரபுக் கல்லூரி ஆகும்.

இன்று, அஸ்ஸஃதிய்யதுல் இஸ்லாமிய்யா மகளிர் அரபுக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இந்த 10 ஆண்டுக்குள் 31 ஆலிமாக்களை உருவாக்கி தந்துள்ளது என்றார்.

பெண்களின் மார்க்கக் கல்வி முன்னேற்றத்தினால் கடந்த 10 வருடங்களுக்குள் ஒரு பெரும் முன்னேற்றத்தை எமது கல்லூரி கண்டுள்ளது. தற்போது 11 ஆலிமாக்கள் பூரணமாக கல்வி கற்று வெளியேறுகிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்!

**கலாபீட நிருவாக சபை உறுப்பினர்கள்**

**கௌரவ தலைவர் :** எம்.எல்.அப்துல் பாரி
**தலைவர் :** தேசமான்ய கலாநிதி ஏ.எச்.எம்.நௌபர் ஹாஜியார்
**செயலாளர் :** எம்.எச். பஹ்மி ஹுஸைன்
**பொருளாளர் :** அல்ஹாஜ் எம்.ஐ.எம்.ராமிஸ்

**உறுப்பினர்கள்**

அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.மூசீன்
அல்ஹாஜ் எம்.எம்.எம்.லாபிர்
ஜனாப் ஏ.எச்.எம்.அன்ஸார்
திருமதி எம்.ரி.எப்.தஹ்ரா (பீ.ஏ.)
திருமதி ஏ.எஸ்.எப்.பஹ்மியா (பீ.ஏ.)
திருமதி எம்.எஸ்.எப்.ஹலீமா (ஆரம்ப பிரிவு ஆசிரியை)
திருமதி எம்.எம்.எப்.மர்ஸியா (மனையியல் பயிற்சி ஆசிரியை)

**பட்டம் பெற்ற ஆலிமாக்களின் பெயர் விபரம்**

1. அல்ஆலிமா பாத்திமா அஷ்பா (அஸ்ஸஹ்திய்யா)
2. அல்ஆலிமா பாத்திமா ரய்ஸா (அஸ்ஸஹ்திய்யா)
3. அல்ஆலிமா பாத்திமா ஸபீயா (அஸ்ஸஹ்திய்யா)
4. அல்ஆலிமா பாத்திமா ஹாஜரா (அஸ்ஸஹ்திய்யா)
5. அல்ஆலிமா ஸித்தி ருகையா (அஸ்ஸஹ்திய்யா)
6. அல்ஆலிமா பாத்திமா றிஸ்னா (அஸ்ஸஹ்திய்யா)
7. அல்ஆலிமா பாத்திமா மர்லியா (அஸ்ஸஹ்திய்யா)
8. அல்ஆலிமா பாத்திமா பர்ஹானா (அஸ்ஸஹ்திய்யா)
9. அல்ஆலிமா பாத்திமா நுஸ்ஹா (அஸ்ஸஹ்திய்யா)
10. அல்ஆலிமா பாத்திமா ரமீஸா (அஸ்ஸஹ்திய்யா)
11. அல்ஆலிமா பாத்திமா ரைஹானா (அஸ்ஸஹ்திய்யா)

அஜ்வாத் பாஸி
தயாரிப்பு உதவி




























பீ.எம்.முக்தார்
பேருவளை விசேட நிருபர்









தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 13 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.06
லுஹர் - 12.20
அஸர் - 03.42
மஃரிப் - 06.12
இஷா - 07.27

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 29
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



### வர்த்தக சமூகத்தைப் பாதுகாக்க

# கடனை திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைப்பது குறித்து ஆராய்வு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டின் வர்த்தக சமூகத்தை பாதுகாக்கும் வகையில் கடனை திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயவுள்ளதாக ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வர்த்தகர்களுக்கு அவசியமான சலுகைகளைப் பெறக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, மத்திய வங்கி ஆளுநருக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் பெண் தொழில் முனைவோரை கௌரவப்படுத்தும் வகையில் (11) மாலை கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற "பிரதிபா அபிஷேக 2022" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாகாண, தேசிய, சார்க் பிராந்தியம் மற்றும் சிறப்பு ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன. இதன்போது, தேசிய

06



# தினேஷ் சாப்டர் படுகொலை சம்பவம்; தகவல்கள் எதுவும் மறைக்கப்படவில்லை

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பிரபல தொழிலதிபர் தினேஷ் சாப்டர் மரணம் தொடர்பில் உண்மையான தகவல்களை மறைப்பதற்கு பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகிறதா ? என்ற சந்தேகம் நிலவி வருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர் அவ்வாறு அழுத்தம் பிரயோகிப்போர் இனங்காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்டம் பிரயோகிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் கேள்வியெழுப்பிய போது, தினேஷ் சாப்டர் படுகொலை அல்லது மரணம் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் ஏதாவது விடயங்கள் மறைக்கப்படுகின்றதா, பெருமளவு பணம் புழங்கப்படுகிறது. தகவல்களை மறைப்பதற்காக பொலிஸார் அல்லது வேறு விசாரணை குழுக்களுக்கு பணம் அல்லது பரிசுகள் வழங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்கள் சமூகத்திலிருந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன ?என கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்துள்ள பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸார் சிறந்த வகையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த விசாரணைகளை பொலிஸார் தனித்து மேற்கொள்ளவில்லை.

06

# இந்திய இருமல் மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும்

### உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தல்



இந்திய பயோடெக் நிறுவனத்தின் இருமல் மருந்துகளான AMBRONOL, DOK1 Max ஆகியவற்றை பயன்படுத்த வேண்டாமென உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. இந்த நிறுவனத் தயாரிப்புகள் தர நிர்ணயக் கட்டுப்பாடுகளை கடைபிடிக்கவில்லையென அந்நிறுவனம் கூறியுள்ளது.

இன்றைய தினம் வரை மரியான் பயோடெக் நிறுவனம் தங்கள் இருமல் மருந்துகளின் பாதுகாப்பு, தரம் குறித்து எவ்வித உத்தரவாதத்தையும் உலக சுகாதார அமைப்புக்கு வழங்காததாலே, இந்த எச்சரிக்கையை விடுப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாதிப்புக்குள்ளான உஸ்பெகிஸ்தான் நாட்டின் சுகாதார அமைச்சு மேற்கொண்ட ஆய்வில், இந்த இரு மருந்துகளிலும் ஏற்றுக் கொள்ள முடியாத அளவிலான டைஎத்திலின் க்ளைக்கால்,

06

# இரு நாட்களுக்கு மேல் காய்ச்சல் தொடர்கிறதா?

### மருத்துவ ஆலோசனை பெறுமாறு அறிவுரை

நாட்டில் தற்போது இன்புளுவன்சா மற்றும் டெங்கு நோய் வேகமாகப் பரவி வருவதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் ஆலோசகர் மருத்துவர் நந்தன திக்மதுகொட தெரிவித்துள்ளார். சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலே அவர் இதனை தெரிவித்துள்ளார்.மேலும் இதுபற்றித் தெரிவித்த அவர், இந்நோய் தாக்கம் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முதியவர்களுக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்துகிறது. எனவே அறிகுறியுள்ளவர்கள் தாமதமின்றி மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும்.

தற்போது பரவி வரும்

06

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 03/09/2022 | 03/10/2022 | 30 /01/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

தாமரை கோபுரத்தில் Future Zone ஐ அறிமுகப்படுத்துகின்றது டயலொக்

## எதிர்காலத்தினை இன்றே அனுபவிப்பதற்கு இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, அண்மையில் தாமரை கோபுரத்தில் முதல் தளத்தில் திறந்துவைத்த அதிநவீன, புத்தாக்கங்களை மையமாகக் கொண்ட - Dialog Future Zone இல் (டயலொக் எதிர்கால வலயம்) அதிநவீன தொழில்நுட்பங்களை கண்டு அனுபவிப்பதற்கு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பை விடுத்துள்ளது. திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மேற்படி Dialog Future Zone திறந்திருக்கும். நுழைவு அனுமதி இலவசம்.

மேற்படி Dialog Future Zone பார்வையாளர்களுக்கு 5G, இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (IoT) செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) மற்றும் மெய்நிகர் ரியாலிட்டி (Virtual Reality - VR) போன்ற துறைகளில் சமீபத்திய முன்னேற்றங்களை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகின்றது. டயலொக்கின் தற்போதைய திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஸ்மார்ட் நகரங்களின் வளர்ச்சி மற்றும் நிலையான ஆற்றல் தீர்வுகளை செயல்படுத்துதல் போன்ற முன்முயற்சிகள் பற்றியும் பார்வையாளர்கள் இங்கு அறிந்து கொள்ள முடியும்.

"Dialog Future Zone இனை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம் மற்றும் தொழில்நுட்பத்தின் எதிர்காலம் பற்றிய ஒரு பார்வையும் அவர்களுக்கு நாம் வழங்குகின்றோம்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "டயலொக்கின் சாத்தியமானவற்றின் எல்லைகளை நோக்கியவாறு தொடர்ந்தும் நாம் முன்நோக்கி கொண்டு செல்கின்றோம், மேலும் இதையடுப்ப குறைவாக உள்ளதே என்பது புதுமை மற்றும் முன்னேற்றத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகும். இந்தக் கண்காட்சி அதை பார்வையிடும் அனைவருக்கும் ஆர்வம், படைப்பாற்றல் மற்றும் கற்றலை ஊக்குவிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றார்.

மேலும், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பிற பங்காளர்களுடன் இணைந்து பயிற்சிகள், விரிவுரைகள் மற்றும் கல்விச் செயல்பாடுகளையும் இந்த Dialog Future Zone வழங்கும். இது மாணவர்களுக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் ஏற்றது. இதன் நடவடிக்கைகள் அடுத்த தலைமுறை தொழில்நுட்பத் தலைவர்கள் மற்றும் புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் நோக்கிலானதாக அமைந்திருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"Future Zone பொதுமக்களுக்கு உத்வேகம் மற்றும் கல்விக்கான ஆதாரமாக மட்டுமல்லாமல், தொழில் வல்லுநர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான தளமாகவும் இருக்கும் எனவும் நாங்கள் நம்புகின்றோம்," என வீரசிங்க மேலும் தெரிவித்தார்.

Dialog Future Zone ஆனது, சமீபத்திய ஸ்மார்ட் ஹோம் மற்றும் இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (IoT) தீர்வுகள், முன்னணி பல்கலைக்கழகங்களின் டயலொக் '5G Innovation Centre' சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் நிறுவனத்தின் புத்தாக்கப் பிரிவான 'Innovation Foundry' ஆகியவற்றினால் இயக்கப்படும் புதுமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் ஆகியவற்றை கொண்டிருக்கும்.



Dialog Future Zone திறப்பு விழா:
படத்தில் இடமிருந்து வலமாக டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் தயாரிப்பு மற்றும் சேவை கண்டுபிடிப்பு பிரிவு தலைவர் சதுர பீரிஸ், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் இயக்குனர் டத்தோ டாக்டர் நிக் ரம்லா நிக் மஹ்மூத், ஆசிஆட்டா குழும பெர்ஹாட் இன் கூட்டு செயல் குழு தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் குழுமத்தின் தலைமை நிதி அதிகாரி விவேக் சூட், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் இயக்குனர் அஸ்வான் கான், கொழும்பு தாமரைக் கோபுரத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க, கொழும்பு தாமரைக் கோபுரத்தின் தலைவர் பிரியந்த ரத்நாயக்க, ICTA இன் பணிப்பாளர் மென்பொருள் வடிவமைப்பாளர் தசுன் ஹெகொட



Humanoid Robot greeting visitors



AI powered Digital Twin demonstration

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 சனவரி 18ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 95,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123D219 | LKA18223G219 | LKA36424A198 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 55,000 | 20,000 | 20,000 | 95,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 சனவரி 18
தீர்ப்பனவுத் திகதி : 2023 சனவரி 20
வழங்கப்படும் திகதி : 2023 சனவரி 20
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 சனவரி 18, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 29ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 19

## குறள் தரும் சிந்தனை



சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு

மனதார இல்லாமல் வெளியுலகிற்கு நண்பரைப்போல் நடிப்பவரின் நட்பானது, ஒரு கேடு செய்வதற்குச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்போது இரும்பைத் துண்டாக்கத் தாங்கு பலகை போல் இருக்கும் பட்டடைக் கல்லுக்கு ஒப்பாகும்.

# இனப்பிரச்சினைத் தீர்வில் நம்பிக்கை தரும் நகர்வுகள்

நாட்டில் பல தசாப்தங்களாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட கவனம் செலுத்தியுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளையும் அவர் முன்னெடுத்துள்ளார். இந்த நிலையில் ஜனாதிபதியின் முயற்சிகளை அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்துத் தரப்பினரும் வரவேற்று இருக்கின்றனர்.

இந்நாட்டில் காணப்படும் இனப்பிரச்சினை இனியும் நீடிக்கக் கூடாது என்பதுதான் இப்பிரச்சினைக்கு உண்மையாகத் தீர்வு காணப்பட வேண்டும் என விரும்பும் அனைத்து தரப்பினரதும் விருப்பமாக உள்ளது.

அந்த வகையில்தான் கடந்த வருட இறுதிப்பகுதியில் ஜனாதிபதி, இனப்பிரச்சினைக்கு 75வது சுதந்திர தின விழாவுக்கு முன்னர் தீர்வு காண இணக்கப்பாட்டு வருமாறு அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பின் அடிப்படையில் டிசம்பர் மாத நடுப்பகுதியில் முதலாவது அனைத்துக் கட்சிகள் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்குபற்றிய பெரும்பாலான அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்னெடுக்கும் முயற்சிகளை வரவேற்றதோடு, இம்முயற்சிகள் தொடர்பில் தமது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்வைத்தனர். சாதகமான நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தினர்.

இப்பின்னணியில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கான கலந்துரையாடல்களை ஜனவரி நடுப்பகுதி முதல் தொடராக முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டு இருக்கின்றது. இந்நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஆதரவு நல்குவதாக அறிவித்திருக்கிறது.

இவ்வாறான சூழலில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துகளுக்கு அமைய தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் விடயத்தில் ஜனாதிபதி தலையீடுகளை மேற்கொண்டுள்ளார். இதனை ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அந்த அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுவதைத் தொடர்ந்து மலையக மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதில் ஜனாதிபதி அக்கறை கொண்டிருப்பதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனபதிபதியின் இந்த முயற்சிகள் நாட்டின் அனைத்து மக்கள் மத்தியிலும் புதிய நம்பிக்கைகளை உருவாக்கியுள்ளன. அதன் காரணத்தினால் ஜனாதிபதியின் முயற்சிகளை இனப்பிரச்சினைக்கு உண்மையாகவே தீர்வு காணப்பட வேண்டும் என விரும்பும் அனைத்துத் தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

இந்நாட்டில் இனப்பிரச்சினை நீடிப்பதை பெரும்பாலான மக்கள் விரும்புவதாக இல்லை. இப்பிரச்சினை நீடித்து வருவதன் விளைவாக நாடும் மக்களும் பலவிதமான அசௌகரியங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நாடு பல துறைகளில் பின்னடைவுக்கு உள்ளாகி இருக்கவும் இப்பிரச்சினை பெரிதும் பங்களித்து உள்ளது.

அதேநேரம், இந்நாடு அபிவிருத்தியில் பின்னடைவுக்கு உள்ளாகி இருக்கவும் கூட இனப்பிரச்சினை பங்களித்திருக்கிறது. மேலும், இந்நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் முகம்கொடுத்த மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மாத்திரமல்லாமல் அந்நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதைத் தாமதப்படுத்துவதிலும் இனப்பிரச்சினை தாக்கம் செலுத்தக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு இந்நாட்டின் பல்துறைகளிலும் தாக்கங்களையும் அழுத்தங்களையும் செலுத்தி வரும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது மிகவும் முக்கியமான விடயமாகும். அதுவே அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் வேணவாவாக உள்ளது.

இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் போது இன, மத ரீதியிலான வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். அதுவே இப்போதைய தேவையாகும்.

ஆகவே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதி எடுத்துவரும் அக்கறைகளுக்கும் முயற்சிகளுக்கும் நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து அனைத்துத் தரப்பினரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். கட்சி அரசியலின் அற்ப நலன்களுக்கு அப்பால் சிந்தித்து செயற்படும் போது நாட்டில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். அவை வளமான தேசத்திற்கான அடித்தளமாக அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# இராமர் பாலம் மீது உலகவாழ் இந்துக்கள் வைத்திருந்த நம்பிக்கையில் விழுந்த அடி!

## சேது சமுத்திரத் திட்டத்தை உடனடியாக செயற்படுத்துமாறு மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

சேது சமுத்திரத் திட்டத்தை உடனடியாக செயற்படுத்துமாறு இந்திய மத்திய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு சட்டசபையில் நேற்று அதிரடியாக தீர்மானத்தைத் தாக்கல் செய்துள்ளார். இந்தத் தீர்மானத்தை பாஜக, அ.தி.மு.க ஆதரித்த நிலையில், ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் சமீபத்தில் பாராளுமன்றத்தில் இது குறித்து விளக்கம் அளித்திருந்தார்.

"இராமர் பாலம் குறித்து 'இஸ்ரோ' உதவியுடன் பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பாலம் அமைந்திருந்ததாகச் சொல்லப்பட்ட இடம் துல்லியமாக புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இதை ஆய்வு செய்தபோது இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் வரை உள்ள இந்தத் திட்டுக்கள் சுண்ணாம்பு கற்களால் உருவாக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது.

சுமார் 18,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான வரலாறு கொண்டது இந்த இராமர் பாலம் என்பதால் இது குறித்து ஒரு இறுதி முடிவுக்கு எங்களால் வர இயலவில்லை. இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையே 56 கி.மீ இருக்கிறது. ஏற்கெனவே கட்டப்பட்டதாக நம்பப்படும் பாலத்தின் சில எச்சங்கள் மட்டுமே தற்போது மீதமிருக்கின்றன. மிகச்சரியாகச் சொல்வதெனில் இங்குள்ள கட்டுமானம் எந்த மாதிரியான கட்டுமானம் என்பது தெரியவில்லை. எனவே இங்கு இருந்தது இராமர் பாலம்தான் என்பதை சரியாகக் கூற முடியாது."



இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பாக்குநீரிணையில் இராமர் பாலம் என நம்பப்படுகின்ற பகுதி இதுவாகும். இப்படம் செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்டது.

இவ்வாறு அவர் விளக்கமளித்திருந்தார்.

ஒருபுறம் பா.ஜ.க மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்ரமணிய சுவாமி, இராமர் பாலத்தை பாரம்பரிய சின்னமாக அறிவிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்க, நாடாளுமன்றத்தில் மத்திய அரசு இவ்வாறு விளக்கமளித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இராமர் பாலம் காரணமாகவே 'சேது சமுத்திர திட்டம்' நீண்ட காலமாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும், இலங்கையின் தலைமன்னார் பகுதிக்கும் இடையே சுமார் 56 கி.மீ தொலைவு வெறும் கடல்பரப்பு மட்டுமே இருக்கிறது. இந்த கடல் பரப்பில் ஒரு குறிப்பிட்ட தொலைவுக்கு சுண்ணாம்புப் பாறைகள் இருக்கின்றன. இந்தப் பாறைகள் தொடர்ச்சியாக இல்லாமல் கொஞ்சத் தூரத்திற்கு தொடர்ச்சியாகவும், கொஞ்சத் தூரத்திற்கு இடைவெளி விட்டும் இருக்கின்றன.

இந்த பாறைகளே இராமர் பாலம் என்று அடையாளப்படுத்தப்படுகின்றன. இந்த 56 கி.மீ தொலைவில் உள்ள சுண்ணாம்புக் கற்களை அகற்றி கடலை ஆழப்படுத்துவதன் மூலம் இந்த வழியில் சரக்குக் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க முடியும். இதுதான் சேது சமுத்திரத் திட்டமாகும்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக முடிந்தால் இந்தியாவில் தூத்துக்குடி, சென்னை, விசாகப்பட்டினம் என வங்கக் கடல் ஓரத்தில் இருக்கும் துறைமுகங்கள் சிறப்பான வளர்ச்சி பெறும். தற்போதுவரை அரபு நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் சென்னைக்கு வரவேண்டும் எனில் இலங்கையை சுற்றிக்கொண்டுதான் வருகின்றன. ஆனால் சேது சமுத்திரத் திட்டம் நிறைவு பெற்றால் இவ்வாறு இலங்கையை சுற்றிவர வேண்டிய அவசியமில்லை. பயண நேரமும் சுமார் 30 மணி நேரம் குறையும். எரிபொருளும் மிச்சமாகும்.

இந்தப் பாதையை சர்வதேச அளவில் பயன்படுத்தும்போது இந்தியாவின் அந்நிய செலாவணியும் அதிகரிக்கும். இந்தத் திட்டத்தைதான் உடனடியாக செயல்படுத்தக் கோரி மத்திய அரசை தமிழ்நாடு அரசு தற்போது வலியுறுத்தியுள்ளது. இதற்கான தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்திருந்தார். இந்தத் தீர்மானத்தை பா.ஜ.க, அ.தி.மு.க ஆதரித்த நிலையில் நேற்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மழைக்காலம் ஆரம்பித்ததால் தலைதூக்கிய டெங்கு வியாதி!



பொதுவாக மழைக்காலம் ஆரம்பித்து விட்டால் மக்கள் மத்தியில் டெங்கு நோய் பற்றிய அச்சம் தலைதூக்குவதுண்டு. இன்று இலங்கையின் பல மாவட்டங்களில் பெய்து வரும் மழை காரணமாக நுளம்புகள் பெருகி நோய்கள் ஏற்பட்டு வருகின்றன.

நுளம்புகளால் பரப்பப்படும் டெங்கு நோயானது முதன் முதலில் 1960 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டில் அடையாளம் காணப்பட்டது. 1965 ஆம் ஆண்டு இலங்கையின் மேல்மாகாணத்தில் பரவியதன் மூலம் இருவர் இனம் காணப்பட்டனர்.

டெங்கு நுளம்புகள் மாரி காலத்தில் மனிதனின் அலட்சியப்போக்கினால் பெருகி மக்களை அச்சுறுத்தி அபாயத்தையும் மரணத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. இந்த அபாயகரமான டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கு மனிதர்களே உதவியாக இருந்து வருகின்றனர் என்றே கூற வேண்டும்.

டெங்கு நுளம்புகளின் பெருக்கத்திற்கு வீட்டுச்சூழலில் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கி நிற்றல், சுற்றுச்சூழல் அசுத்தமாக இருத்தல், நுளம்புகள் தங்கி பெருகக்கூடிய உடைந்த சட்டி பானைகள், வெற்றுப் போத்தல்கள், ரின்கள், சிரட்டைகள், இளநீர் கோம்பைகள், பழைய டயர்கள், யோக்கட் கப்கள் போன்றவற்றை கண்ட கண்ட இடங்களில் வீசுதல், பாழ் வளவுகளில் குப்பைகளை கொட்டி வருதல் போன்ற செயற்பாடுகள் காரணமாகும்.

மக்கள் நுளம்புகளின் பெருக்கத்துக்கு உதவி வருகின்றனர் என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். ஆகையால் நுளம்பு பெருக்கத்திற்கும் டெங்கு நோய் பரவலுக்கும் மக்களின் அறியாமையும் அசிரத்தை போக்குமே காரணமாகும்.

நம்மில் பலர் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதில் அதிக கவனம் செலுத்துவதில்லை. பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் அன்றாடம் சுத்திகரிப்புப் பணிகளை சரியாக செய்து வருகின்ற போதிலும் சில படித்தவர்கள் கூட வீட்டில் சேரும் குப்பை கூழங்களை முறைப்படி அகற்றுவதில்லை. குப்பைகளை இரவு வேளைகளில் வீதி ஒரங்களில் கண்ட கண்ட இடங்களில் வீசி வருகின்றனர். இக்கழிவுகளில் மழைநீர் தேங்கி நின்று நுளம்பு பெருக்கம் அதிகரித்து வருவதை அவர்கள் கவனத்தில் கொள்வதில்லை.

மேலும் டெங்கு நோயினால் ஏற்படும் அபாயங்கள் குறித்து சுகாதாரப்பகுதியினர் விழிப்பூட்டல்கள் கருத்தரங்குகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் ஆலோசனைகள் வழங்கி வருகின்ற போதிலும், இவற்றை மக்கள் பூரணமாக கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உயிர் ஆபத்துக்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

டெங்கு நோய்க்கு இதுவரை நேரடி மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தபோதிலும் அதனை ஆரம்பத்தில் இனம்கண்டு உரிய முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்வதன் மூலம் முழுமையாக குணப்படுத்தலாம். டெங்கு நுளம்புகள் பெரும்பாலும் காலை மாலை நேரங்களில் மட்டுமே கடிக்கும் என்ற நிலை மாறி தற்போது எந்த நேரத்திலும் அவற்றின் ஆபத்து உள்ளது. பொதுவாக நுளம்புகளின் ஆயுட்காலம் 21 நாட்கள் மட்டுமே என்று கூறப்பட்ட போதிலும், தற்போது 40 நாட்கள் வரை உயிர் வாழக்கூடியது எனவும் அறிய முடிகின்றது.

## மக்கள் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் ஆபத்திலிருந்து பாதுகாப்புப் பெறலாம்



பெண் நுளம்புகளே டெங்கு நோயை பரப்புகின்றன. காலையில் மாலையிலும் இதன் நடமாட்டம் அதிகமாக காணப்படும். வீட்டின் இருட்டான பகுதிகள் மற்றும் தொங்கவிடப்பட்டிருக்கும் நமது உடுதுணிகளிலும் மறைந்திருக்கும். சுத்தமான நீரில் மூன்று தடவைகள் முட்டையிடும். ஒவ்வொரு முறையும் 100 தொடக்கம் 200 வரையிலான முட்டைகள் காணப்படும். இந்த முட்டைகள் ஒட்டும் தன்மை கொண்டவை. வரட்சியான காலத்திலும் 12 மாதங்கள் வரை ஏதோ ஒன்றில் ஒட்டிக் கொண்டிருக்கும். நீர்பட்டதும் உயிர் பெறும்.

இந்நுளம்புகள் பெருகும் இடத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தூரம் வரை பறந்து செல்லக் கூடியவை.

டெங்கு நோயை பரப்புகின்ற நுளம்புகளுக்கு அதிக நீர் தேவையில்லை, சிறிதளவு நீர் காணப்பட்டாலும் அதில் தங்கி முட்டையிட்டு பெருகும்.இவ்வாறான வசதிகளும் வாய்ப்புகளும் பெரும்பாலும் நகரப்புறங்களில் காணப்படுகின்றன. இதனால் பொதுவாக நகரப்பிரதேசங்களில் வாழும் மக்கள் டெங்கு நோய்க்கு பெரும்பாலும் ஆளாகி வருகின்றனர்.

டெங்கில் இருந்து நம்மையும் நமது எதிர்கால சந்ததியினரையும் பாதுகாத்துக் கொள்ள சில நடவடிக்கைகளை நாம் அவசியமாகவும் அவசரமாகவும் மேற்கொள்ள வேண்டியது இன்றைய தேவையாக உள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருக சாதகமாக காணப்படும் இடங்களை சுத்தமாக வைத்திருத்தல், நீர் தேங்கி நிற்காதவாறு தரையை உலர்ந்த நிலையில் வைத்திருத்தல், நுளம்புகள் குத்தாத வண்ணம் உடலை பாதுகாத்தல் மற்றும் நீர் தேங்கி நிற்கக்கூடிய உடைந்த சட்டி பானைகள் வெற்றுப்போத்தல்கள் ர்ன்கள் யோகட்கப்புகள் இளநீர் மட்டைகள் தேங்காய் சிரட்டைகள் போன்றவற்றை உடனடியாக எரித்தும் புதைத்தும் அழித்தும் விடல்.

இவ்வாறான நடவடிக்கைகளை நாம் ஒவ்வொருவரும் சமுதாய நலன் கருதி மேற்கொண்டோமேயானால் டெங்கு நோய் என்ற பேச்சுக்கே இடமில்லை, இந்த அறிவுரைகளும் ஆக்கங்களும் தேவையேயில்லை.

ஒருவருக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதா? என சந்தேகிக்கப்பட்டால் கீழ்வரும் வழிமுறைகளை கடைப்பிடிப்பது நன்மையாகும்

உடலை களைப்படையாமல் ஓய்வாக வைத்திருத்தல், அதிகமாக நீர் மற்றும் நீர்பானங்களை அருந்தக் கொடுத்தல், ஜீவனீ,சூப்,கஞ்சி போன்றவற்றை குடிக்க கொடுத்தல், குறித்த நபரை நுளம்பு வலையினுள் படுக்கச் செய்தல், வைத்தியசாலைக்கு சென்று இரத்தப் பரிசோதனை செய்து நிலைமையை கண்டறிதல் என்பன வருமுன் காத்தல் நடவடிக்கைகள் ஆகும்.

டெங்கு நோயின் சாதாரண அறிகுறிகளில் சில பின்வருமாறு:

கடுமையான காய்ச்சல் தொடர்ந்து இருக்கும், கண்களின் பின் பகுதிகளில் வலி ஏற்படும், உடல் சோர்வு நிலை, மூட்டுகளில் வலி உண்டாகுதல், பசியின்மை

மேலே கூறப்பட்ட டெங்கு நோயினால் அடையாளங்களோடு மூக்கினால் இரத்தம் வடிதல், தோலில் சிவப்பு அடையாளம் காணப்படல், மலத்துடன் இரத்தம் வெளியாதல், மலம் கறுப்பு நிறமாக கழிதல், கண் சிவத்தல் போன்ற அடையாளங்கள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்வதே பாதுகாப்பானது.

கலாபூசணம் **எம்.ரீ.ஏ. கபூர்...**
நிந்தவூர்

# மாளிகைக்காடு பிரதேச முதலாவது புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் அஜ்வத் அரச சேவையிலிருந்து ஓய்வு

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலய (தேசிய பாடசாலை) ஸ்தாபக அதிபர் மர்ஹும் ஏ.ஸி.எம்.இப்றாஹிம், மர்ஹுமா ஹாஜியானி கதீஜா உம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரான சிரேஷ்ட புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் அல்ஹாஜ் எம்.ஐ.எம். அஜ்வத் (Bsc)நாளை 14.01.2023 அன்று தனது 60 ஆவது வயதில் அரசசேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.



இவர் தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியிலும், பேராதனை பல்கலைக் கழகத்தில் கணிதத்துறையில் பட்டப்படிப்பையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சனத்தொகை கல்வி பட்டப்படிப்பையும் மேற்கொண்டார். இவர் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் புலமைப்பரிசில் மூலம் தாய்லாந்து சென்று அங்கு விசேட கணினி கற்கைநெறியை மேற்கொண்டார்.

இவர் தனது 36 வருட அரசசேவையை திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பித்து கொழும்பு புள்ளிவிபரவியல் திணைக்கள கணக்காய்வுப் பிரிவு, சம்மாந்துறை பிரதேச செயலகம், உகன பிரதேச செயலகம், ஏறாவூர் பிரதேச செயலகம், நிந்தவூர் பிரதேச செயலகம், அக்கரைப்பற்று பிரதேச செயலகம், கொழும்பு பதிவாளர் நாயகம் அலுவலகம் ஆகியவற்றில் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

கணினித்துறையில் இவரது இணையத்தளமான www.jobloog.com வெளிநாடுகளில் தொழில் தேடுவோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதுடன் , கணிதத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு www.mathswikipedia.com இணையத்தளமும் பிரயோசனமுள்ளதாக அமைந்துள்ளது.

ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் மர்ஹும் அல்ஹாஜ் எம்.ஐ.எம்.அஷ்ரப் , ஓய்வுபெற்ற ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.ஐ.எம்.அஸ்ஹர் ஆகியோரின் இளைய சகோதரரான இவர், விளையாட்டுத் துறையிலும் சமூகசேவையிலும் மிகவும் ஈடுபாடுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சமூக வாழ்வுக்கு இஸ்லாமிய வழிகாட்டல்

இஸ்லாம் மார்க்கம் என்பது ஒரு சம்பூரண வாழ்க்கை திட்டம். ஆரோக்கியமானதொரு சமூகத்தை உருவாக்குவதே அதன் நோக்கங்களில் பிரதானமானது. சிறந்த தனிமனிதனை உருவாக்குதல், அதனடியாக சிறப்பான குடும்பங்கள், அதன் விளைவாக ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புதல் என்பது தான் இஸ்லாத்தின் இலக்கு. இதனையே நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்வில் செய்து காட்டினார்கள்.

ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கான பரிபூரண வழிகாட்டல்களை இஸ்லாம் வழங்கியுள்ளது. அவற்றில் ஈமான், அகீதா, வணக்க வழிபாடுகள், சிந்தனை, உணர்வுகள், பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், மானுட பெறுமானங்கள், சட்டங்கள், பொருளாதாரம் ஆகியவற்றுக்கான வழிகாட்டல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

அந்த வகையில் இஸ்லாமானது நம்பிக்கைக்கு முக்கியத்துவம் அளித்திருக்கும் ஓர் மார்க்கமாக விளங்குகிறது. அதுவே ஈமான் அல்லது அகீதா எனப்படுகிறது. நம்பிக்கைதான் வாழ்க்கை. மனிதன் எதனை நம்புகிறானோ அதன் வழியே அவன் செயல்படுவான்.

இஸ்லாமானது அல்லாஹ், மலக்குகள், வேதங்கள், நபிமார்கள், மறுமை நாள், இறை நியதி போன்ற நம்பிக்கைகள் குறித்து போதிக்கின்றது. இந்த நம்பிக்கைகள் செயலாக பரிணமிக்க வேண்டுமென்பது இஸ்லாமிய வழிகாட்டலாகும்.

'ஈமான் என்பது நப்பாஷை வைப்பதல்ல, ஒருசில விடயங்களை செய்து விடுவதுமல்ல. மாற்றமாக உள்ளத்தில் ஆழமாக பதிவதும் செயல்படுவதும் ஆகும்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அல்லாஹ், தன்னை அவதானித்துக் கொண்டிருக்கிறான், மறுமையில் ஒரு பாரிய விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடும், அதனை தொடர்ந்து வெகுமதியோ தண்டனையோ காத்திருக்கிறது என நம்பிக்கை கொள்ளும் ஒருவரது செயல்பாடுகள் தரம் வாய்ந்ததாக அமைந்திருக்கும். அவனது வழிபாடுகளும், கொடுக்கல் வாங்கல்களும், பண்பாடுகளும், நடத்தைகளும் சிறந்ததாகவும் தரம் மிக்கதாகவும் காணப்படும். இவ்வகையில் ஆரோக்கியமான சமூகம் நம்பிக்கையின் அடிப்படையில்தான் உருவாகும்.

அதேநேரம் வணக்க வழிபாடுகள் தான் இபாதத் எனப்படுகிறது. ஆரோக்கியமான ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதில் வணக்கங்களும் வழிபாடுகளும் பெரும் பங்காற்றுகிறது.

**'இஸ்லாம் ஐந்து தூண்களின்மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. 'லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்று சான்று பகர்தல், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் கொடுத்தல், நோன்பு நோற்றல், ஹஜ் செய்தல்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.** (அல் ஹதீஸ்)

தொழுகை கூட்டாக நிறைவேற்றப்படும்போது சமூக வாழ்வில் தேவைகள், பிரச்சினைகள் இனங்காணப்படவும் தீர்க்கப்படவும் வாய்ப்பாக அமைகிறது. ஸகாத், ஒரு மனிதனின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஏற்பாடு. நோன்பு, சமூகத்தின் அடிமட்ட மக்களின் உணர்வுகளை உணர்ந்து கொள்வதற்கான சிறந்த முறைமையாகும். ஹஜ் என்பது இன, நிற, மொழி, பிரதேச வேற்றுமைகளை கடந்த ஒற்றுமை பிரகடனம். இவை எத்தகைய சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது மிகவும் தெளிவான விடயங்களாக உள்ளது.

இஸ்லாம் என்பது அறிவு, சிந்தனைக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறது. 'அறிவு', 'வாசிப்பு', 'கல்வி' போன்ற சொற்களைக் கொண்டு தொடங்கிய மார்க்கம் இது. 'வாசிப்பீராக', 'சிந்திப்பீராக', 'சிந்திக்க கூடாதா', 'ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் நுணுக்கமாக பார்க்கக் கூடாதா'...... என்று சிந்தனையைத் தூண்டிக்கொண்டிருக்கிறது இம்மார்க்கம்.

தனி மனிதன் மாத்திரமல்லாமல் சமூகமும் சிந்திக்காமல் இருக்க முடியாது. முஸ்லிம் சமூகம் எவ்வாறு சிந்தனை செய்ய வேண்டும்? விடயங்கள், நிகழ்வுகள், ஆட்கள், சந்தர்ப்பங்கள், தொடர்புகள் போன்றவற்றை எப்படி பார்க்க வேண்டும் என்று வழிகாட்டியுள்ளது. சமூக வாழ்வின் பெரும்பாலான விடயங்களை மனித சிந்தனையே வழிநடாத்துகிறது. அவனது சிந்தனைகள் சீரானால் அவனது கண்ணோட்டங்கள் சீராகும். கண்ணோட்டங்கள் சீராகும்போது நிலைப்பாடுகள் சரியாக அமையும். இப்படிப் பலர் நடந்துகொள்ளும்போது ஆரோக்கியமான சமூகம் உருவாகும்.

மனிதர்களிடம் பலவகையான உணர்வுகள் காணப்படுகின்றன. அது சமூகத்திலும் பிரதிபலிக்கிறது. சில சமூகங்களில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற சாதி உணர்வினால் உந்தப்பட்டு செயல்படுவார்கள். வேறு சிலர் இன உணர்வினை மையப்படுத்தி இயங்குவார்கள். சில சமூகங்கள் தேசிய உணர்வினை மையப்படுத்துவார்கள். ஆனால் இஸ்லாம் அன்பு, சகோதரத்துவம், விசுவாசம், நீதி போன்ற உணர்வுகளை மையப்படுத்துகிறது.

இஸ்லாம் குறிப்பிடும் அன்புணர்வு மனிதன், மிருகம், தாவரம், சூழல் போன்ற அனைத்துடனும் தொடர்புபடுகிறது. 'படைப்புகள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பத்தவர்கள்' (ஹதீஸ்) என்ற பிரபஞ்ச சகோதரத்துவத்தை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

அதேநேரம் இஸ்லாம் பண்பாட்டின் மார்க்கமும் கூட. பண்பாடற்ற சமூகம் வீழ்ச்சியடைந்துவிடும். ஆரோக்கியமான ஒரு சமூகம் பண்பாட்டின் மூலம் தான் உருவாகும்.

இவ்வகையில் இஸ்லாம் பல்வகைப் பண்பாடுகள் பற்றி பேசுகிறது. நீதி, நேர்மை, உண்மை, அன்பு, பொறுமை, வாக்கு மீறாமை, வெட்கம், கண்ணியம், கொடை, தியாகம், சுத்தம், நன்மையை ஏவுதல், தீமையை தடுத்தல்....

இஸ்லாம் குறிப்பிடும் சில பண்பாடுகள் பிரபஞ்சத்தை படைத்து நிர்வகிக்கும் அல்லாஹ்வுடன் தொடர்பானதாகும். இன்னும் சில பண்புகள் மனிதர்களுடன் தொடர்புபடுகிறது. மிருகங்கள், தாவரங்கள், சுற்றுச்சூழல் தொடர்பான பண்பாடுகளும் காணப்படுகின்றன.

பிழையான பண்புகளைக் களைந்து சரியான பண்புகளின்பால் வழிகாட்டி அவற்றை உறுதிப்படுத்தி பாதுகாக்கும் போதுதான் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கலாம். இதனைத்தான் நபி (ஸல்) அவர்கள்,

**'நிச்சயமாக நான் பண்பாட்டை பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்'** (ஹதீஸ்) என்றார்கள்.

ஆரோக்கியமான சமூகத்தின் பழக்க வழக்கங்களும் முக்கியமானது என்ற வகையில் இஸ்லாம் இது தொடர்பாகவும் வழிகாட்டல்கள் வழங்கியுள்ளது. உண்பது, குடிப்பது, ஆடை அணிவது, தூங்குவது, எழும்புவது, பயணம் செய்வது, குடும்பம் நடத்துவது, விளையாடுவது, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, திருமணம் முடிப்பது, ஆண் பெண் உறவுகள், அயலவர் உறவினர் உறவுகள், பெற்றோர் பிள்ளை உறவுகள், தலைவன் குடிமக்கள் உறவுகள்...இப்படி இதனை நோக்கலாம்.

இத்தகைய பழக்க வழக்கங்கள் காரணமாக முஸ்லிம் சமூகம் தனித்துவமானதாக விளங்குகிறது. அங்கு ஒரேவிதமான ஒன்றுபட்ட செயல்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு நடுநிலை போக்கு கொண்ட சமூகமாக மிளிர்கிறது.

மனிதன் இயல்பாக சில விடயங்களுக்கு பெறுமானம் கொடுப்பான். ஒரு ஆரோக்கியமான சமூகத்தில் இவ்விடயங்கள் உயர் நிலையில் காணப்படும். இஸ்லாமும் இத்தகைய விடயங்களுக்கு பாரிய முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

இதற்கு உதாரணமாக 'அறிவு' என்ற விடயத்தை குறிப்பிடலாம். மனிதன் அறிவுக்கு இயல்பாக பெறுமானம் வழங்குவான். இஸ்லாம் அறிவு என்ற விடயத்துக்கு எவ்வாறு பெறுமானம் வழங்கியுள்ளது என்பதனை நோக்கினால் இதனை நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

இஸ்லாம் அறிவை சொல்லி தொடங்கியதுடன் அதனை உயர்ந்தபட்ச நிலையில் தூண்டியுமுள்ளது. **'அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா'? (அல் குர்ஆன்)** என்று வினாத் தொடுக்கிறது. அறிவை ஒளியாகவும் அறிவீனத்தை இருளாகவும் கருதுகிறது. அறிவை வளர்த்துக்கொள்வதற்கு இன்றியமையாத வாசிப்பு, பேனா பற்றி குறிப்பிடுகிறது. அல்லாஹ் தன்னை மனித குலத்துக்கான முதல் ஆசிரியனாக அறிமுகப்படுத்திக்கொள்கிறான். இறுதித்தூதின் ஆரம்ப போதனைகளிலும் இருமுறை தன்னை ஆசிரியன், கற்பித்தவன் என்று அறிமுகம் செய்து கொள்கிறான். அறிவின் படித்தரங்கள், வகைகள் பற்றியெல்லாம் விரிவாக விளக்குகின்றான். 'அறிவு முஃமினின் காணாமல்போன சொத்து, அதனை கண்ட இடத்தில் அடைந்துகொள்ளுங்கள்' நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்

ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டுமானால் இவற்றுடன் சட்ட ஏற்பாடுகளும் தேவைப்படும். மனித வாழ்வுக்கு தேவையான சட்டங்களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது.

இஸ்லாத்தில் சட்டம் என்பது குற்றமும் அதற்கான தண்டனைகளும் மாத்திரமன்று. மாறாக முழு வாழ்க்கைக்குமான சட்டங்களை அது வழங்கியுள்ளது. அவற்றில் வணக்கம், வழிபாடு, கொடுக்கல் வாங்கல், திருமணம், விவாகரத்து, பால்குடி, சொத்துப் பங்கீடு, அரசியல், பொருளாதாரம், சர்வதேச உறவுகள் தொடர்பான சட்டங்கள் குறிப்பிடத்தக்கன.

ஒரு ஆரோக்கியமான சமூகத்தில் பொருளாதாரமும் உயர் நிலையில் காணப்பட வேண்டும். இவ்வகையில் இஸ்லாம் ஒரு அழகான பொருளாதாரத் திட்டத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

வறுமையை ஒழித்து பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கும் செல்வம் ஒரு சிலரிடம் மாத்திரம் சுற்றிச் சுழலாது. பலரிடம் பரவலாக செல்ல வேண்டும் என்பதற்காகவும் ஸகாத், ஸதகா, கொடை, குற்றப்பரிகாரம் போன்ற பல முறைமைகளை அறிமுகம் செய்துள்ளது.

பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு முதலீட்டுடன் தொடர்பான திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. உழைப்பும், தொழிலும், வியாபாரமும் தூண்டப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் ஒரு வியாபாரியாகவும் இருபதுக்கு மேற்பட்ட வெளிநாட்டு வர்த்தக பயணங்களை மேற்கொண்ட ஒருவராகவும் காணப்படுகிறார்.

ஆக நபி (ஸல்) அவர்களின் வாழ்வை ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கினால் இவற்றை எம்மால் நன்றாகப் புரிந்துகொள்ளலாம். மக்காவிலே நாடோடி வாழ்கையினை அனுபவித்துக்கொண்டு, பெண் பிள்ளைகளை உயிரோடு புதைத்துக்கொண்டு, அற்ப விடயங்களுக்காக பல வருடங்கள் யுத்தம் செய்துகொண்டிருந்த தனிமனிதர்களைக் கொண்ட சமூகத்தை இஸ்லாம் வழிகாட்டல்கள் மூலம் உன்னதமான சமூகமாக மாற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# அல்லாஹ் கடுமையாக வெறுத்துள்ள விடயம் வட்டி

இஸ்லாம் ஒரு புனிதமான இறை வழிகாட்டல். அது எல்லா துறைகளுக்கும் வழிகாட்டும் மார்க்கம். கொடுக்கல் வாங்கல்களுக்கு இஸ்லாமிய ஷரீஆ அனுமதியளித்துள்ளது. வியாபாரம், குத்தகை, ஈடு வைத்தல் போன்ற கொடுக்கல் வாங்கல்களை இஸ்லாமிய வழிகாட்டல்களின் அடிப்படையில் மேற்கொள்ளலாம். எனினும் வட்டியை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. பெரும் பாவங்கள் என பட்டியலிட்டிருக்கும் விடயங்களுள் இஸ்லாம் வட்டியையும் உள்ளடக்கியுள்ளது.

வட்டி என்பது பணத்தின் அசலுக்கு அதிகமாக வாங்கும் தொகையைக் குறிக்கும். இதனை அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது.

**'ஆயினும் நீங்கள் (வட்டி வாங்குபனைப் பற்றி) மனம் திருந்தி மீண்டு விட்டால், உங்கள் பொருளின் அசல் தொகை உங்களுக்கு உண்டு' (அல் பகரா 279)**

வட்டி வாங்குவதையும் வட்டி கொடுப்பதையும் இஸ்லாம் வன்மையாக கண்டிக்கின்றது. எந்த குற்றத்துக்கும் இல்லாத அளவுக்கு வட்டியைக் கண்டித்துள்ள இஸ்லாம், அல்லாஹ்வுடன் போர் செய்யும் ஒரு செயலாக அதனை அல் குர்ஆன் எச்சரித்திருக்கிறது.

**'ஈமான் கொண்டவர்களே! நீங்கள் முஃமீன்களாக இருந்தால் அல்லாஹ்வுக்குப் பயந்து எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டு விடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யவில்லையானால் அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் போர் அறிவிக்கப் பட்டுவிட்டது. (என்பதை அறிந்து கொள்ளுங்கள்).**

**(அல்பகரா – 279)**

**ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், பேரழிலை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அப்போது மக்கள், 'இறைத்தூதர் அவர்களே! அவை யாவை? எனக் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, சூனியம் செய்வது, அல்லாஹ் புனிதப்படுத்தியுள்ள உயிரை அநியாயமான முறையில் கொலை செய்வது, வட்டியைப் புசிப்பது, அநாதைகளின் செல்வத்தை உண்பது, போரின் போது புறமுதுகு காட்டி ஓடுவது, இறை நம்பிக்கை கொண்ட அப்பாவிகளான பத்தினிப் பெண்களின் மீது அவதூறு கூறுவது ஆகியனவே (அத்தகைய பெரும் பாவங்கள்) என்று கூறினார்கள்.**

(ஆதாரம் புஹாரி)

அல்குர்ஆனும், நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களும் வட்டி வாங்கியோர் மறுமையில் கடும் வேதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதைத் தெளிவாக எச்சரித்து இருக்கின்றன.

யார் வட்டி (வாங்கி) உண்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் வேறு விதமாய் எழ மாட்டார்கள். ஏனெனில் அவர்கள், 'நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே' என்று கூறியதனாலேயேயாகும்.

மேலும் **அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி, வட்டியை ஹராமாக்கி தடுத்து விட்டான். அதனால் உங்களில் யாருக்கு தன் இறைவனிடமிருந்து வட்டியைக் கண்டித்து உபதேசம் செய்த பின்னரும் அதை விட்டு விலகிக்கொண்டாரோ (அவர் அதற்கு) முன் (வாங்கி) சென்று போனது அவருக்குரியதே. இன்னும் அவருடைய காரியம் அல்லாஹ்விடம் இருக்கின்றது. யார் நற்போதனை பெற்ற பின்னரும் இப்பாவத்தின் பால் திரும்புகின்றார்களோ அவர்கள் நரகவாசிகள். அவர்கள் அதில் என்றென்றும் தங்கி விடுபவார்கள்.**

**(ஸூரா பகரா 275)**

மேலும், **வட்டி வாங்குவது அவர்களுக்கு தடை செய்யப்பட்டிருந்தும், அவர்கள் அதனை வாங்கி வந்ததன் காரணமாகவும் தவறான முறையில் அவர்கள் மக்களின் சொத்துக்களை விழுங்கி கொண்டிருந்ததன் காரணமாகவும் இவ்வாறு தண்டனை வழங்கினோம். இத்தகைய நிராகரிப்போருக்கு மறுமையில் நோவினை செய்யும் வேதனையையும் நாம் தயார் செய்துள்ளோம்.**

**(ஸூரா அந்நிஸா 161)**

இறைத்தூதர் (ஸல்) அவர்கள், **'இன்றிரவு (கனவில்) இரண்டு மனிதர்களைக் கண்டேன். அவர்கள் என்னிடம் வந்து தூய்மையான ஒரு நிலப்பகுதிக்கு என்னை அழைத்துச் சென்றார்கள். நாங்கள் நடந்து வந்த போது இரத்த ஆறு ஒன்றை அடைந்தோம். ஆற்றினுள் ஒருவன் இருந்தான். ஆற்றின் கரையில் இன்னொருவர் தனக்கு முன்னே கற்களை வைத்து நின்றிருந்தார். ஆற்றிலே உள்ளவர் வெளியேற முனையும் போது, அவரது வாயில் ஆற்றின் கரையில் இருந்தவர் கல்லை எறிந்து அவர் முன்பு இருந்த இடத்திலேயே அவரைக் கொண்டு போய் நிறுத்தினார். அவர் வெளியேற வரும் போதெல்லாம் இவர் அவரின் வாயில் கல்லை எறிய, அதனால் அவர் முன்பிருந்த இடத்துக்கே திரும்பிச் சென்று கொண்டிருந்தார். அவர் யார்? என்று என்னை அழைத்து சென்றவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள் ஆற்றில் நீர் பார்த்தவர் வட்டி உண்பவரா வார்' எனக் கூறினார்கள்.** (ஆதாரம் புஹாரி)

வட்டி இலாபத்தை தருவது போன்று தோன்றினாலும் அது எமக்கு நட்டத்தையும் கைசேதத்தையும் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. **'அல்லாஹ் வட்டியை அதில் எந்த பரக்கத்தும் இல்லாமல் அழித்து விடுவான். இன்னும் தான தர்மங்களில் பரக்கத்தைக் கொண்டு பெருகச் செய்வான். தன் கட்டளையை நிராகரித்துக் கொண்டிருக்கும் பாவிகள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.' (அல் பகரா 278)**

வட்டி எடுப்பவன், கொடுப்பவன், அதற்கு சாட்சியாக இருப்பவர், எழுதுபவர் அனைவரும் வட்டியை புசித்தவர் போலாவர் என்பதும் நபி மொழியாகும்.

எனவே வட்டியை விட்டு விலகி, இஸ்லாம் கூறிய பிரகாரம் எமது செல்வத்தை தேட முயற்சிப்போம். மறுமையில் வெற்றி பெறுவதையே இலக்காகக் கொள்வோம்.

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்...
(அல் அஸ்ஹரி), வெலிகம

# சோதனை இன்றி சாதனையா...?

'அல்லாஹ்வின் மீதும் இறைத்தூதர்கள் மீதும் நம்பிக்கை கொண்டோருக்கு நிச்சயம் சோதனைகள் வரும்' என அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது. இது தொடர்பில் நபி (ஸல்) அவர்களும் எடுத்தியம்பியுள்ளார்கள்.

**'நாங்கள் நம்பிக்கை கொண்டோம் என்று மட்டும் கூறுவதால் விட்டுவிடப்படுவார்கள். அவர்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட மாட்டார்கள் என்று மக்கள் எண்ணிக் கொண்டார்களா என்ன? உண்மையில் இவர்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் அனைவரையும் நாம் சோதித்திருக்கிறோம். உண்மையாளர்கள் யார்? பொய்யர்கள் யார்? என்பதை அல்லாஹ் அவசியம் கண்டறிய வேண்டியுள்ளது. (அல் குர்ஆன் 29:2,3)**

அல்லாஹ் யாரை நேசிக்கின்றானோ அவருக்கு சோதனைகள் அதிகமாக ஏற்படும். இதன் மூலம் ஈமானிய உணர்வு அதிகரிக்கும். இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு எத்தனை கஷ்டமான சோதனைகள் வந்தன. இறுதியில் அவருக்கு கிடைத்த உயர்வும் மதிப்பும் தான் 'அல்லாஹ்வின் நண்பர்' என்ற பொருள்படும் 'கலீலுல்லாஹ்' என்பதாகும்.

அல் குர்ஆனில் அல்லாஹ், **'உங்களுக்கு முன் சென்றுவிட்ட நம்பிக்கையாளர்களுக்கு ஏற்பட்டது போன்ற நிலை உங்களுக்கும் வராமலேயே நீங்கள் சுவனத்தில் நுழைந்து விடலாமென்று எண்ணிக்கொண்டீர்களா? இன்னல்களும் இடுக்கண்களும் அவர்களை அலைக்கழித்தன. (அன்றைய) இறைத்தூதரும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களும் அல்லாஹ்வின் உதவி எப்போது வரும் என்று (புலம்பி) கேட்கும் வரை அவர்கள் அலைக்கழிக்கப்பட்டார்கள். (அப்போது அவர்களுக்கு இவ்வாறு ஆறுதல் கூறப்பட்டது) இதோ அல்லாஹ்வின் உதவி அண்மையில் இருக்கிறது. (2:214)**

சோதனைகளானது அல்லாஹ்வின் நாட்டமின்றி ஏற்படுவதில்லை. அது அல்லாஹ்வின் விருப்பமாக இருக்கலாம். அதனால் அவனது நாட்டத்தின் மீது நம்பிக்கை கொள்வது இறைநம்பிக்கையாளரின் அடிப்படையாகும். நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். 'நோயாளிக்கு தீங்கு ஏற்பட்டுவிடும் என்பதால் உணவு, பானத்தில் எவ்வாறு பத்தியத்தைக் கடைப்பிடிக்கிறீர்களோ அவ்வாறே இறை நம்பிக்கையாளரின் மீது அல்லாஹ் அன்பு இருந்தும் அடியானை உலகின் (வசதி வரம்புகளிலிருந்து) விலக்கி வைக்கிறான் (ஆதாரம் முஸ்னத் அஹ்மத்)

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், **அல்லாஹ் எவருக்கு நன்மை நாடுகிறானோ அவரை துன்பத்தில் ஆழ்த்துகிறான்' என்றுள்ளார்கள்.** (ஆதாரம் புஹாரி)

அதேவேளை **சோதனைகளும் வேதனைகளும் எந்தளவுக்கு கடினமாக இருக்குமோ அந்தளவுக்கு நன்மையும் அதிகமாக இருக்கும். மேலும் அல்லாஹ் ஒரு குழுவை நேசிக்கிறான் எனில், அவர்களுக்கு (மேலும் ஜொலிக்கவும் தூய்மைப்படுத்தவும்) சோதனைகளை வழங்குகிறான். அல்லாஹ்வின் விருப்பத்தில் எவர்கள் திருப்தியுறுகிறார்களோ அவர்கள் குறித்து அல்லாஹ்வும் திருப்தியுறுகிறான். சோதனைகளில் எவர்கள் வெறுப்படைகிறார்களோ அல்லாஹ்வும் அவர்கள் மீது கோபமடைகிறான்.** (ஆதாரம் திர்மிதி)

இதேவேளை அல்குர்ஆன், **ஈமான் கொண்டவர்களே.... பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் அல்லாஹ்விடம் நீங்கள் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான். மேலும் அத்தகையோர் தாம் நேர்வழி பெற்றவர்கள் ஆவார்கள் (2:153,54)**

நபி (ஸல்) அவர்கள் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, **அல்லாஹ்விடம் இருந்து இறைநம்பிக்கையாளர்களுக்கு ஒரு உயர்ந்த அந்தஸ்து விதிக்கப்படுகிறது. அவனுக்கு தன் செயல்படுகளால் அந்த அந்தஸ்த்தைப் பெற இயலாமல் போகும் பட்சத்தில், அல்லாஹ் அவர்களை உடல் ரீதியில் அல்லது பொருளாதார ரீதியில் அல்லது வாரிசுகளால் சோதிக்கிறான். பிறகு அவனுக்கு பொறுமையை அருளுகறான். எதுவரையெனில் (அவனுக்கு அல்லாஹ்வினால் முன்பு எழுதப்பட்டுவிட்ட) அந்த குறிக்கப்பட்ட அந்தஸ்து கிடைக்கப்பெறும் வரை என்றுள்ளார்கள்.**

(ஆதாரம் அபூதாவூத்)

ஆகவே துஆவையும் திக்ருகளையும் அதிகமாக்கிக் கொள்வோம். எங்களுக்கு அல்லாஹ் போதுமானவன். அவனே சிறந்த பாதுகாவலன் அவன் மீது நாம் ஈமான் கொள்வோம்.

தொகுப்பு:
பாத்திமா அஸ்கா...

## ஐந்து தமிழ் கட்சிகளுடன்...

அறிவித்துள்ளது. இதனைத்தொடர்ந்து, ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரத்தின் கொழும்பு இல்லத்தில் கட்சித் தலைவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பில் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கூட்டணியின் பெயர், சின்னம் என்பன தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளருடன் 05 கட்சியினரும் கலந்துரையாடவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## தங்கத்துக்கு பதிலாக...

கொடி என்பவற்றை ஐந்தரை பவுணில் செய்தவற்கு, 2016ஆம் ஆண்டு பணம் கொடுத்து, அவற்றைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இது போலியென

07 வருடங்களின் பின்னர், தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதால், குறித்த சந்தேக நபர் தலைமறைவானார்.

இந்நிலையில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் தலைமறைவாகி இருந்த சந்தேக நபரை கைது செய்து, மேலதிக விசாரணைக்காக தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## தமிழரசுக் கட்சியை...

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்தே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஆமோதித்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வகையிலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஒரு கட்டத்தில் பங்காளிக் கட்சிகளான புளொட் மற்றும் ரெலோவை நோக்கி, நீங்கள் தமிழரசுக் கட்சியை சிதைக்கப் பார்க்கின்றீர்களா? என, சற்றுக் கோபத்துடன் சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், "நீங்கள் கூட்டமைப்பின் தலைவர். ஒரு கட்சி சார்பாக நடக்காதீர்கள்" என்று பதில் வழங்கியுள்ளார்.

## கட்டார் செரிட்டி நிறுவனத்தின்...

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளது. எனினும், 2019 ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் இது பல்வேறு குற்றச்சாட்டுக்களால் தடைசெய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2022 ஜூன் (30) மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, கட்டார் செரிட்டி நிறுவன அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியதன் பின்னர் இத்தடை நீக்கப்பட்டது.

கட்டார் செரிட்டி 2023 ஆம் ஆண்டில் 11.7 மில்லியன் அமெரிக்க டெலர் பெறுமதியிலான மனிதாபிமான உதவிகளை அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். தேவைக்கேற்ப அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்கு நன்கொடை ஒதுக்கப்படுமென அமைச்சர் தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தலை...

ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும், ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது, திறைசேரியின் அதிகாரிகள் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக நிதியை ஒதுக்கக் கூடிய முறைமை தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளனர். அத்துடன், திறைசேரியின் அதிகாரிகள், நிதியமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களிடம் விரிவாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

## அத்தியாவசிய பொருட்கள்...

விற்பனை செய்யப்படவுள்ளது.

கோதுமை மா விலை 05 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 240 ரூபாவாகுமென லங்கா சதொச அறிவித்துள்ளது.

## கடனை திருப்பிச்... (03 ஆம் பக்கத் தொடர்)

மட்டத்துக்கான விருதுகளையும் சிறப்பு விருதுகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி கௌரவித்தார்.

நாடு மிகவும் நெருக்கடியான சூழலை எதிர்கொண்டுள்ள போதும், சவால்களை முறியடித்து பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் இவ்வருடத்தில் கிடைத்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டுள்ளது. எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் கடனுதவி கிடைக்கவுள்ளது.

இதேவேளை, இலாப நோக்கற்ற அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்காகவே இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நிலையான பொருளாதாரத்தில் புதிய வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கி உலகத்துடன் போட்டியிடக் கூடியவாறு, நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்றார்.

## தினேஷ் சாப்டர் படுகொலை... (03 ஆம் பக்கத் தொடர்)

அதில் நீதிமன்ற மருத்துவர் நேரடியாக சம்பந்தப்படுகிறார். அரசாங்க இரசாயன பகுப்பாய்வு அதிகாரிகளும் நேரடியாக சம்பந்தப்படுகின்றனர். பல்வேறு பொலிஸ் குழுக்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இந்த விசாரணை நடவடிக்கைகளை பிரதேச ரீதியாக செயற்படும் பொலிஸ் பிரிவுகள், குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் அதிகாரிகள் மட்டுமன்றி சட்டமாஅதிபர் மற்றும் நீதிமன்றம் ஆகியன இணைந்தே மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் இது பொலிஸார் மாத்திரம் தனித்து மேற்கொள்ளும் நடவடிக்கையல்ல. இதில், எதனையும் மறைப்பதற்கு பணம் வழங்கப்படுகிறதென்பதை முற்றாக நிராகரிக்கிறோம். எனினும் அவ்வாறான தகவல்கள் இருந்தால், ஆதாரத்துடன் ஒப்படைக்கவும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்திய இருமல்... (03 ஆம் பக்கத் தொடர்)

எத்திலீன் க்ளைக்கால் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த மருந்துகள் வேறு நாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் உஸ்பெகிஸ்தான் ஆய்வக அறிக்கையின்படி அந்நாடும் இந்த மருந்துகளுக்கு தடைவிதித்துள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இருமல் மருந்தை அருந்தியதால், 18 குழந்தைகள் பலியானதாக உஸ்பெகிஸ்தான் அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

உள்ளூர் மருந்துக்கடைக்காரர்கள் பரிந்துரையின்படி பெற்றோர் இந்த மருந்தை குழந்தைகளுக்குக் கொடுத்துள்ளனர். இதனையடுத்து நாட்டில் அனைத்து மருந்துக் கடைகளிலும் இருந்து Doc1 Max மருந்தை அரசு திரும்பப்பெற்றுள்ளது.

## இரு நாட்களுக்கு மேல்... (03 ஆம் பக்கத் தொடர்)

இன்புளூவன்ஸா சுவாச மண்டலத்தை பாதிக்கின்றது. இது ஆபத்தானது. வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இருமல், தொண்டை வலி மற்றும் சில சமயங்களில் தலைச்சுற்றல் போன்ற அறிகுறிகள் ஏற்படுகிறது. சிலருக்கு சில நாட்களில் குணமடைந்தாலும், சிலருக்கு நீடித்த இருமல் மற்றும் மூச்சுத்திணறல் கூட ஏற்படலாம்.

கர்ப்பிணித் தாய், 70 அல்லது 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டால், அது உயிருக்கு ஆபத்தானதாக அமையும். அத்தகையவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்வதை அவர்கள் தவிர்க்க வேண்டும்.

அதிக காய்ச்சல் இரண்டு நாட்களுக்கு மேல் சோர்வுடன் இருந்தால், பரசிட்டமோல் தவிர வேறு மருந்துகளை உட்கொள்வதை மக்கள் தவிர்க்க வேண்டும். டெங்கு காய்ச்சலும் இந்த நாட்களில் வேகமாக பரவி வருவதால்,

இந்த ஆலோசனையை கட்டாயம் கடைப்பிடிக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுவாக எலிக்காய்ச்சல் எனப்படும் லெப்டோஸ்பிரோசிஸ் நோய் பரவி வருவதாகவும், நெல் வயல்களில் வேலை செய்பவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும், எச்சரிக்கப்பட்டுள்ளது.

### அதிகாரிகளின் தொழிற்சங்க நடவடிக்கை

# சமுர்த்தி பயனாளிகளின் பட்டியலை இன்னமும் தயாரிக்க முடியவில்லை



சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறும் பயனாளிகளை வெளிப்படைத் தன்மையுடன் அடையாளம் காணும் பட்டியலைத் தயாரிக்கும் தகவல்களைச் சேகரிக்கும் பணியை சமுர்தி அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். இதனால்,சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமை (10) அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரிய வந்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் கலாநிதி ஹர்ஷ.த சில்வா தலைமையில் கூடியபோதே இவ்விடயம் தெரியவந்தது.

சமுர்த்தி உள்ளிட்ட நலன்புரி கொடுப்பனவுகள் ஊழலின்றி வெளிப்படைத்தன்மையுடன் வழங்கப்பட வேண்டும்.சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுக ளில் இதுவும் ஒன்றாக உள்ளமை பற்றியும் இக்குழு கவனம் செலுத்தியுள்ளது.இதற்கமையவே,பயனாளிக ளின் தகவல்களைச் சேகரிக்கும் பணிகள் இடம்பெறவிருந்தன.இதற்கென,ஒழுங்கு விதிகளடங்கிள

விதிமுறைகளையும் வர்த்தமானி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி.விஜேரத்ன, பதிவு செய்யப்பட்ட பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று விண்ணப்பதாரிகள் வழங்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் போது,சட்டத்தின் 21 மற்றும் 22வது பிரிவுகளுக்கமைய தனது வேலையை இழக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

எனவே, இந்தப் பிரிவைத் திருத்தும் வரையில் இது தொடர்பான களப்பணிகளிலிருந்து விலகுவதாக சமுர்த்தி, கிராமசேவகர், பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகளின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இந்த 21ஆம் 22ஆம் பிரிவுகளின் ஊடாக பிழையான தகவல்களை உள்ளீடு செய்யும் அதிகாரிகள் தண்டனைக்கு உட்படுவார்களென்ற, இந்தப் பிரிவு திருத்தப்படும்வரை தகவல்கள் சேகரிப்பதை நிராகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, இது தொடர்பில் அவசரமாக கலந்துரையாடி ஒரு தீர்வை எட்டுமாறும் குழு அறிவுறுத்தியது.

அரசாங்க நலன்களைப் பெறுவதற்கான பயனாளிகள்/அதற்குத் தகுதியான குடும்பங்களின் ஆரம்ப விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது அண்மையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அத்துடன், நலத்திட்ட உதவிகள் கோரி விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் வீடுகளுக்குச் சென்று இரண்டாம் நிலைத் தகவல்களை சேகரிக்க கையடக்கத் தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் தெரிவித்தார்.

சமுர்த்தி பயனாளிகளில் 40 வீதமானோர் தகுதியற்றவர்களென உலக வங்கியின் கணக்கெடுப்பில் வெளிப்பட்டிருப்பதாகவும் குழுவில் கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய தகுதியில்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்கி, அதில் ஒரு சதவீதத்தைத் தமக்காகப் பெற்றுக்கொள்ளும் ஊழல் அதிகாரிகள் இருப்பதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, இந்த நலன்புரித் திட்டத்தை உரிய வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதற்கு சரியான தரவுகளைக் கொண்ட ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதன் அவசியம் குறித்து குழுவில் வலியுறுத்தப்பட்டது.

நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கும்போது தேசிய அடையாள அட்டையைக் கட்டாயப்படுத்துவது அவசியமென்றும் குழு பரிந்துரைத்தது. தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்திருக்கும் பின்னணியில் தேசிய அடையாள அட்டையை சகல குடிமக்களுக்கும் பெற்றுக் கொடுக்க முடியாதெனக் கூறுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லையென்றும், மோசடிகளைத் தடுப்பதற்கு இது முக்கியமான முடிவாக இருக்கும் என்றும் குழு சுட்டிக்காட்டியது.

இந்த ஆவணத்தை தயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதிலும் தாமதம் ஏற்படலாம். இதனால், ஊழல் மற்றும் மோசடி இல்லாத கலாசாரத்தை உருவாக்க இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டியதன் அவசியத்தையும் குழு வலியுறுத்தியது.

இதன்படி, இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி வழங்கிய குழு, நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் நலன்புரி நன்மைகள் சபையின் ஆகியோர் இது தொடர்பில் அவசரமாக கலந்துரையாடி தீர்வொன்றை எட்டுமாறும் குழு அறிவுறுத்தியது.

# பிரிகேடியர் விபுல சந்திரசிறிக்கு அம்பாறையில் பாராட்டு



அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

24ஆவது காலாட்படைப் பிரிவின் 14ஆவது இராணுவக் கட்டளைத் தளபதி பொது உத்தியோகத்தராகப் பதவியேற்றுள்ள பிரிகேடியர் விபுல சந்திரசிறியை, அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தையிலுள்ள பிரமுகர்கள் அண்மையில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

அத்துடன், அக்கரைப்பற்று சமாதான அமைப்பைச் சேர்ந்தவர்களும் மல்வத்தை இராணுவ முகாமுக்குச் சென்று பிரிகேடியர் விபுல சந்திரசிறிக்கு வாழ்த்துத் தெரிவித்ததுடன், பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

அக்கரைப்பற்று இராணுவத்தின் 241ஆவது பிரிவின் கட்டளைத் தளபதியாக கடந்த 2017ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பணியாற்றியிருந்ததுடன், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வந்த மூவினத்தைச் சேர்ந்த மக்களுக்காக பல்வேறுபட்ட மனிதாபிமான உதவிகளையும் செய்து, பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.



வலம்புரிக் கவிதா வட்டத்தால் உருவாக்கப்பட்ட வகவப்பணிமனையை, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தின் தமிழ் பிரிவு ஆலோசகரும் இலக்கியப் புரவலருமான ஹாஸிம் உமர் நேற்று (12) திறந்து வைத்தார். இந்நிகழ்வில், தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், பணிமனையின் ஸ்தாபகத் தலைவர் டொக்டர் தாஸிம் அஹமது, பொதுச் செயலாளர் கலைக்கமல், பொருளாளர் டாக்டர் எம்.எச். நூர்தீன் மற்றும் பிரதம ஆலோசகர் மேமன்கவி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்தும்...

செயலெனத் தெரிவித்து பல்வேறு தரப்பினராலும் தாக்கல் செய்யப்பட்ட 12 மனுக்கள் தொடர்பிலான தீர்ப்பே நேற்று வழங்கப்பட்டது. இதன் போதே நீதிமன்றம் மேற்படி உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதிபதிகளான புவனேக அலுவிகாரே, எல்.டி.பி.தெஹிதெனிய, முருது பெர்னாண்டோ, எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ், சிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய 07 பேர் கொண்ட நீதிபதிகள் குழாம் நேற்று இந்த தீர்ப்பை வழங்கியது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயம், மட்டக்களப்பு சியோன் தேவாலயம் உட்பட பல்வேறு பகுதிகளில் தொடர் குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றன. இது தொடர்பில் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காதமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மாத அதிபர் பூஜித் ஜயசுந்தர, அரசாங்கப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி நிலந்த ஜயசுந்தர, முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி சிசிர மெண்டிஸ் ஆகியோர் அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக இந்த வழக்கின் தீர்ப்பில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்படி பயங்கரவாத குண்டுத்தாக்குதலில் தமது இரு பிள்ளைகளை இழந்துள்ள தந்தையான நந்தன சிறிமான்ன, சுற்றுலா வர்த்தகரான ஜனத் விதானகே மற்றும் சரத் இத்தமல்கொட, கத்தோலிக்க அருட்தந்தையர்கள் மூவர், சங்ரில்லா ஹோட்டல் குண்டுத்தாக்குதலில் காயமடைந்த சட்டத்தரணி மோதித்த ஏக்கநாயக்க உள்ளிட்ட 12 பேர்,இந்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டிருந்த மேற்படி நீதிமன்றத் தீர்ப்பை பார்வையிடுவதற்காக நேற்று பெருமளவு கத்தோலிக்க அருட் தந்தையர்கள், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிப்படைந்த குடும்பங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் நீதிமன்ற வளாகத்தில் நேற்று திரண்டிருந்தனர்.

## செயலாளரை வரவழைக்கும் அதிகாரம்...

குழுவின் தலைவரோ அல்லது பணிப்பாளர் நாயகமோ பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரை ஆணைக்குழுவுக்கு அழைப்பது சட்ட விரோதமான செயல் என்றும் அந்த அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு கட்டுப்பணத்தை பொறுப்பேற்க வேண்டாமென மாவட்டச் செயலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள கடிதங்கள் தொடர்பில், பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரை அழைத்து விளக்கம் கோருவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ள நிலையிலேயே மேற்படி சிரேஷ்ட அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் சட்டமா அதிபரை தவிர்த்து வேறு சிரேஷ்ட சட்டத்தரணிகளின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டுள்ளமையும் பெரும் குற்றமாகுமென்றும் அதுசம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கத்தினால் முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது சம்பந்தமாக ஜனாதிபதியோ அலலது அரசாங்கமோ தேர்தல் ஆணைக்குழுவுக்கு எத்தகைய அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரயில் சேவைகளை இரத்து...

ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக இவ்வாறு 42 ரயில் சேவைகளை ரத்து செய்வதற்கு, அதிகாரிகள் தீர்மானம் மேற்கொள்ளனர். ஊடகங்களும் இதுபற்றித் தெரிவித்தன.இதனைக் கவனத்திற் கொண்டுள்ள அமைச்சர் பந்துல குணவர்தன, ரயில் சேவைகளை ரத்துச் செய்ய வேண்டாமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

60 வயதை பூர்த்தி செய்த அரசாங்க ஊழியர்கள் பெரும்பாலானோர் கடந்த டிசம்பர் மாதத்துடன் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர். இந்நிலையில் ரயில்வே துறையிலும் பெருமளவிலானோர் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர். இதனால்,கடந்த 11 தினங்களில் ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக சுமார் 300 ரயில் சேவைகளை ரத்துச் செய்ய நேர்ந்துள்ளதாக ரயில்வே தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சுதந்திர தின கொண்டாட்டத்தின்...

இந்த விழாவுக்குத் தேவையான ஒதுக்கீடுகளை திறைசேரி ஏற்கனவே செய்துள்ளது. இந்நிகழ்வை ஒழுங்கமைப்பதற்கான செலவினங்களைக் குறைக்க அமைச்சு தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் .

இந்நிகழ்வு தொடர்பகாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன முன்வைத்த வேலைத்திட்டத்துக்கு திங்கட்கிழமை (09) அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்காக நிறுவனங்கள் செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புகள் இதில் உள்ளடங்கியுள்ளன.

தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு கடந்த (03) திகதி அமைச்சு வளாகத்தில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது “நமோ நமோ மாதா, நூற்றாண்டுக்கு ஒரு படி” என்ற தொனிப்பொருளில் சுதந்திர தினத்தை கொண்டாட அரசாங்கம் தீர்மானித்திருந்தது. மேலும் விழாவை முன்னிட்டு நான்கு நாள் ஒத்திகை நடத்தப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய நிதி அமைச்சருடன்...

இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்க வேண்டும் எனவும் இதன் போது இந்திய நிதி அமைச்சரிடம், செந்தில் தொண்டமான் வேண்டுகோள் விடுத்தார்.

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இலங்கைக்கு இந்தியா அனைத்து சந்தர்ப்பங்களிலும் தனது முழுமையான உதவிகளை வழங்கும் எனவும் பங்களாதேஷிற்கு இந்தியா வழங்கிய முழுமையான உதவியால் இன்று அந்தநாடு முன்னேற்றம் அடைந்து வருவது போல் இலங்கையும் முன்னேற்றமடைய வேண்டுமெனவும் இந்திய நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது, அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தகம் ஒன்றையும் செந்தில் தொண்டமான் இந்திய நிதி அமைச்சருக்கு அன்பளிப்பு செய்தார்.



# இலங்கை தேசத்தில்

## இறைபணியில் எழுப்புதல் பாசறை



இலங்கை தேசியத்திற்காக ஒன்றிணைந்த பிரார்த்தனை

### முகத்துவாரம் மிஷ்பா ஜெபமிஷனரி ஆலயத்தில் அருட்தந்தை எஸ்.ஜே.பெர்க்மான்ஸ்

# தேவனால் உருவாக்கப்படும் பாத்திரம்

## மாபெரும் கருத்தரங்கு

இந்தியாவில் இறைபணிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற பிரபல போதகர்கள் உள்ளடங்கலாக, இலங்கையில் மக்கள் வாழ்வில் ஆன்மீக ரீதியாக ஒரு எழுப்புதலும் மறுமலர்ச்சியும் உருவாக வேண்டும் என்பதிலும் தேவனால் உருவாக்கப்படும் பாத்திரங்களாக அமைய பெற வேண்டும் என்பதை இறைவன் விரும்புகிறார்.

ஆகவே, இதன் அடிப்படையில் இந்த தை மாதத்தில் தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள்.

அதன்படி உலக நாடுகளில் எல்லாம் தனது பாடல்கள் மூலமாக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி வரும் பிரபல கிறிஸ்த்துவ பாடகர் அருட்தந்தை எஸ்.ஜே.பெர்க்மான்ஸ் அவர்களின் அருட் செய்திகளும், பாடல்களும் நிறைந்த ஒரு பெரு விழாவை, இந்தியாவிலிருந்து பிரபலம் வாய்ந்த போதகர்களுடன் இலங்கையில் எதிர்வரும் 20ம் திகதி தொடக்கம் பெப்ரவரி 02ம் திகதி வரை இவர்கள் பங்கேற்கிறார்கள்.

முகத்துவாரம் மிஷ்பா ஜெப மிசனரி தலைமை போதகர் வண.ஜே.ஜே சாரங்கபாணி தலைமையில் மிஸ்பா ஆலயத்தில் 20ஆம், 21ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 2 மணிவரை குறித்த கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. இதன் முறையே 22 ஆம் திகதி நீர்கொழும்பு மற்றும் முள்ளியாவலையில் மாலை 5 மணிக்கு சுவிஷேச கூட்டங்கள் நடைபெறவுள்ளன. சகோதரர் மகேஸ்டி மெல்லும், போதகர் சுரேஸ் பெர்னாண்டோவும், போதகர் வண.ஜே.ஜே சாரங்கபாணியும் ஏற்பாட்டாளர்களாக செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமை (14.01.2023) காலை 9 மணிக்கு தலைமை போதகர் வண.ஜே.ஜே சாரங்கபாணி தலைமையில் இலங்கை தேசிய ஐக்கியத்தை பிரார்த்தனை மூலம் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் விசேட பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது. இதில் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து போதகர்களும் சபையின் விசுவாசிகளும் இதில் கலந்துக் கொள்ள உள்ளனர்.

உங்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்து நிறைவாக ஆசிர்வதிப்பாராக!

**சவரிமுத்து தேவதாஸ்**
சிரேஷ்ட ஊடகப் பணிப்பாளர்












# எழுத்துமூல உறுதியுடன் முடிவுக்கு வந்த உண்ணாவிரத போராட்டம்




மாங்குளம் நிருபர்

தமிழ் தேசியபரப்பில் பயணிக்கும் அனைத்து கட்சிகளையும், அமைப்புகளையும், தனிநபர்களையும் ஓரணியில் திரள வலியுறுத்தி, புதுக்குடியிருப்பில் முன்னாள் போராளியான வேலுப்பிள்ளை மாதவமேஜர் கடந்த நான்கு நாட்களாக முன்னெடுத்த சாகும் வரையான உண்ணாவிரத போராட்டம் அரசியல் கட்சி தலைவர்களின் எழுத்துமூல உறுதிமொழியை அடுத்து நேற்று (12) கைவிடப்பட்டது.

கடந்த 9 ஆம் திகதி (09/01/2022) காலை இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றைய தினம் (12) நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டம் இடம்பெறும் இடத்தில் ஒன்றுகூடியிருந்ததோடு தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளும் தமக்கிடையிலான ஆசன பங்கீட்டு பிரச்சினைகளை கைவிட்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை வென்றெடுப்பதற்காக ஓரணியில் திரள வேண்டும் என வலியுறுத்தி இப்போராட்டத்தை ஆரம்பித்து முன்னெடுத்து வந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் உண்ணாவிரத போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகைதந்த தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி வி. விக்னேஸ்வரன், மற்றும் டெலோ கட்சி தலைவர் நாடாளுமனற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் புளொட் அமைப்பின் உறுப்பினரும் முன்னாள் மாகாணசபை அமைச்சருமான கந்தையா சிவநேசன் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் ஆகியோர் எழுத்துமூல ஆவணத்தில் தாம் அனைவரும் ஒன்றுச் சேர்ந்து கூட்டாக செயற்படுவோம் என கையொப்பமிட்டு வழங்கிய உறுதிமொழியையடுத்து நீராகாரம் வழங்கி உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தை முன்னெடுத்த வேலுப்பிள்ளை மாதவமேஜர் தற்போது புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

# ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையான குடும்பஸ்தர் புனர்வாழ்வு நிலையத்தில் மரணம்

வவுனியா விசேட நிருபர்



போதைப் பொருளுக்கு அடிமையாகி வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பகுதியில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளார். அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரிக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி அவர் புனர்வாழ்வுக்காக வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரது உடல் நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார். சட்ட வைத்திய அதிகாரி அவரது சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்திய போது ஐஸ் போதைப் பொருள் உட்கொண்டமையால் நுரையீரல் மற்றும் உடற்பாகங்களில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக மரணமேற்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தாக பொலிஸார் தெரிவித்தனர். சடலம் அவரது குடும்பஸ்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மாடுகளை திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் இருபாலை பகுதிகளில் மாடுகளை திருடி விற்பனை செய்துவந்த ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்வியங்காட்டு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இருபாலை பகுதியிலுள்ள வீடொன்றினுள் கட்டி வைக்கப்பட்டிருந்த மாடுகள் திருடப்பட்டிருந்தன. அதுதொடர்பில் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் திருடப்பட்ட மாடுகளை வேறு ஒரு நபருக்கு விற்க முயன்ற போது உரிமையாளரால் மாடுகள் அடையாளம் காணப்பட்டு, அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், மாடுகளை திருடிய குற்றத்தில் இளைஞனை கைது செய்ததுடன், மாடுகளையும் மீட்டுள்ளனர். கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு பகுதிகளில் இடம்பெற்ற மாட்டு திருட்டு சம்பவங்களுடன் சந்தேக நபருக்கு தொடர்புகள் இருப்பதாகவும், அதுதொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.01.11
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

| | | | |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 4997 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,126,630.00 | ஆங்கில எழுத்து F; வெற்றி இலக்கங்கள் 1 5 6 8 0 8 |
| ஜாதிக சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 1452 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,251,933.60 | வெற்றி இலக்கினம் மீனம்; வெற்றி இலக்கங்கள் 7 3 6 8 8 8 |
| ராசி சுப பலன் (Handahana) | சீட்டிழுப்பு இலக்கம் 306 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,611,929.80 | வெற்றி இலக்கினம் கன்னி; வெற்றி இலக்கங்கள் 08 11 17 57; விசேட இலக்கினம் கன்னி |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1027 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 141,571,098.00 | ஆங்கில எழுத்து O; வெற்றி இலக்கங்கள் 23 28 49 74 |
| கொவிசெத (Govisetha) | சீட்டிழுப்பு இலக்கம் 3239 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,086,830.80 | ஆங்கில எழுத்து W; வெற்றி இலக்கங்கள் 11 16 43 57 |
| மெகா பவர் | சீட்டிழுப்பு இலக்கம் 1345 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 292,202,726.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | ஆங்கில எழுத்து M; சுப்பர் இலக்கம் 14; வெற்றி இலக்கங்கள் 15 16 42 80 |

# சிறுநீரக மாற்று சிகிச்சை நிதி உதவி கோரல்



மஹரகம, நாவின்ன, சுசரித மாவத்தை, இல 07 ஐ வசிப்பிடமாக கொண்ட 39 வயதுடைய திரு.எச்.பி.எல்.சுபசிங்க, கடுமையான சிறுநீரக செயலிழப்பால் அவதியுறுகிறார், அவரது உயிரைக் காப்பாற்ற உடனடியாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிறுநீரகவியல் பேராசிரியர் எரங்க விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்காக 50 இலட்சம் ரூபா செலவாகும் எனவும் மேலும் அந்த தொகையை திரட்டுவதில் உள்ள சிரமம் காரணமாக உங்களிடமிருந்து நிதி நன்கொடைகளை எதிர்பார்க்கின்றோம். இதற்காக, பி.டீ.எல். சுபசிங்க எனும் பெயரில் உள்ள கங்கொடவில சம்பத் வங்கியின்113557808782 இலக்கம் கொண்ட கணக்கிற்கு உங்களது நிதி உதவிகளை அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். இது பற்றிய மேலதிகத் தகவல்களுக்காக 0769 322660/0759 322602 என்ற தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்

# முப்பெரும் விழாக் காணும் பாலமுனை

# ஸஹ்வா அரபுக் கல்லூரி

## கல்லூரியின் 3 ஆவது பட்டமளிப்பு விழா, கௌரவிப்பு விழா மற்றும் 30 வருட நிறைவையொட்டிய முத்து விழா ஆகிய முப்பெரு விழா தொடர்பான சிறப்புப் பார்வை



கல்லூரி முகப்பு



அதிபர் அஷ்ஷெய்க் கலாநிதி றிசாத் சலீம் (றியாதி)



தலைவர் அஷ்ஷெய்க் இத்ரீஸ் ஹஸன் (ஸஹ்வி) BA.(Hons) MA



ஸ்தாபக அதிபர் (அபூஸஹ்வா ) அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாசிம் ஸூரி (மதனி)

**கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் இயற்கை அழகும் வனப்பும் கொண்ட கடற்கரையை அண்டிய, பாலமுனை 2, சின்னப்பாலமுனை எனும் கிராமத்தில் ஸஹ்வா அரபுக் கல்லூரி அமைந்துள்ளது.**

**ஷரீஆக் கற்கைகளுக்கான ஸஹ்வா நிறுவனத்தின் (Sahwa Institute For Sharee'a Studies) கீழ் நிருவகிக்கப்படுகின்ற ஸஹ்வா அரபுக் கல்லூரி தூய மார்க்கக் கல்வியை வழங்கும் பணியை அல்லாஹ்வின் அருளால் மூன்று தசாப்தத்திற்கு மேலாக செய்து வருகின்றது.**



விரிவுரையாளர் குழாம்

இக்கல்லூரி இன்று கல்வித் துறையில் கலாநிதிகளையும், முதுமாணிகளையும், பல கலைமாணிகளையும் உருவாக்கியுள்ளதுடன், இலங்கையினதும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினதும் சமய, சமூக முன்னேற்றத்திற்காக பல துறைகளிலும் பணியாற்றும் பல பெறுமதியானவர்களை உருவாக்கி ஓங்கி வளர்ந்து நிற்கின்றது. ஸஹ்வாவின் தோற்ற வரலாற்றினைத் தெரிந்தவர்களுக்கு அதன் வளர்ச்சி நிச்சயம் ஒரு இமாலயச் சாதனை போன்றே தெரியும். இது அல்லாஹ்வின் அருளேயன்றி வேறொன்றுமில்லை என்பதும் புரியும்.

முன்கூட்டிய எந்தத் திட்டமிடலுமின்றி எதேற்சையாக தோன்றிய அரபுக்கல்லூரி. ஸஹ்வா என்றால் எழுச்சி என்று பொருள். மாணவர்கள் சேர்ந்த பின் ஒரு கல்லூரி உருவான புதிய வரலாற்று மரபையும் இலங்கையில் தொடங்கிவைத்த கல்லூரி இது. எவ்வித வளமும் வசதியும் பின்புலமாகக் கொண்டிராத சாமான்யமான மனிதர்கள் சேர்ந்து இக்கல்விக் கோட்டைகளைக் கட்டியெழுப்பும் சவால்களைப் பொறுப்பேற்று அதனைச் சாதித்துக் காட்டினர். அந்த ஸ்தாபகர்களினதும் ஆரம்பகால அதன் உறுதுணையாளர்களினதும் வரலாறு சரித்திரத்தில் பாதுகாக்கப்பட வேண்டியவைகளாகும். மிகக் கடின உழைப்பில் கட்டியெழுப்பப்பட்ட சோதனையும், சுவாரஸ்யமும் நிறைந்த ஸஹ்வா அரபுக் கல்லூரியின் வரலாற்றை ஸஹ்வாவின் நேசர்கள் அறிந்திருக்க வேண்டியது கடமையாகும்.

### கல்லூரி ஆரம்பிக்கப்படல்

ஒரு ஆசான் அவமதிக்கப்பட்ட போது நீதி கேட்டு எழுச்சி கொண்டெழுந்த சுமார் 44 மாணவர்கள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்ட வேளை, பாதிக்கப்பட்ட மாணவர்களை பாதுகாத்துக் கரை சேர்க்கும் நோக்குடனும் சமூகத்துக்கு வழிகாட்டும் நல்ல தலைவர்களை உருவாக்கக்கூடிய முன்மாதிரிமிக்க கல்லூரி ஒன்றை உருவாக்கும் எண்ணத்துடனும் ஸஹ்வா அரபுக் கல்லூரி 1991.11.08 ம் திகதி பழைமை வாய்ந்த சின்னப்பாலமுனை றியாளுல் ஜன்னா ஜும்ஆ பள்ளிவாசலில் ஆரம்பிக்கப்பட்டது.

அல்லாஹ்வின் உதவியால் பாலமுனையைச் சேர்ந்த ஐ.எல்.எம். ஹாஷிம் சூரி (மதனி), அட்டாளைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்ட மர்ஹூம் எம்.எஸ். அப்துல் ஹபீழ் (ஷர்க்கி, M.A) அவர்களும், அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஓ.எல்.எம். இல்யாஸ் (ஷர்க்கி), மர்ஹூம் வி.ரீ.எம். ஹனீபா (ஷர்க்கி) மற்றும் எச்.எல்.எம். பஷீர் (ஷர்க்கி) ஆகிய ஸ்தாபக முன்னோடிகளினதும், ஸ்தாபக மாணவர்கள் மற்றும் ஆரம்ப கால மாணவர்களினதும் கடின உடல் உழைப்பு, சகிப்புத் தன்மை, தியாகம், மன உறுதி மற்றும் விடாமுயற்சியினால் செழித்து வளரத் தொடங்கியது எனலாம். சின்னப்பாலமுனை மற்றும் ஒலுவிலூர் மக்களினதும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் கல்லூரியின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டியது. தாங்களும் உருவாகிக் கொண்டு ஒரு கல்லூரியையும் உருவாக்கும் பாரிய பணியை மாணவர்கள் ஸ்தாபகர்களுடன் இணைந்து மேற்கொண்டதன் விளைவாக 'ஸஹ்வா' தனது முகவரியை முத்திரை பதித்துள்ளது.

சின்னப்பாலமுனை றியாழுல் ஜன்னாஹ் ஜும்ஆ பள்ளிவாயல்தான் அன்று ஸஹ்வா அரபுக் கல்லூரி. மாணவர்கள், ஆசான்கள் அனைவரினதும் விடுதியும், விரிவுரை மண்டபமும் மழைக் காலத்தில் பள்ளி மண்டபத்தில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும், குளிரில் நடுங்கியும் மாணவர்களும் ஆசான்களும் தம் கல்விப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தனர். பற்றைக் காடுபோல் படர்ந்திருந்த பள்ளிவாசல் காணியை மாணவர்கள் உடலை வருத்தி செம்மைப் படுத்தி பசுந்தரைபோல் ஆக்கினர். வேப்பமர நிழல்கள் வகுப்பறைகளாக ஆக்கப்பட்டு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடங்கின. அல்லாஹ்வின் உதவியால், ஸ்தாபகர்களின் அயராத முயற்சியால், மாணவர்களின் தியாகத்தினால் ஸஹ்வா சின்னப்பாலமுனை மண்ணில் வேரூன்றத் தொடங்கியது.

கல்லூரியின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சின்னப்பாலமுனை மக்கள் தன் வறுமையிலும் கல்லூரி மாணவர்களின் வறுமையைப் போக்கப் பாடுபட்டனர். ஸ்தாபகர்களுக்கு பக்க பலமாக இரவு பகலாக கல்லூரியின் ஆரம்பகட்ட வளர்ச்சியில் இவர்கள் முன்னின்று உழைத்தார்கள். அதேபோல் ஏராளமான ஒலுவில் சகோதரர்களும் கல்லூரி வளர்ச்சியில் பாரிய பங்களிப்புச் செய்தவர்கள் என்பதும் மறக்கமுடியாததாகும்.

இதில் ஸஹ்வாவின் தோற்றத்தின் கருவாயிருந்த கல்லூரியின் ஸ்தாபகத் தந்தை (அபுஸ் ஸஹ்வா) ஹாஷிம் சூரி மதனி அவர்களது ஈடிணையற்ற உழைப்புக்கு ஏற்ற அறுவடையை கல்லூரி கண்டு வருகிறது. ஸஹ்வா தனது கால் நூற்றாண்டைக் கடந்த போது, அதன் ஸ்தாபக முன்னோடிகளில் முக்கியமானவர்கள் தேக ஆரோக்கியத்துடன் உயிர் வாழும் போதே, நிருவாக செயற்பாடுகளை அவர்களினால் மனமுவந்து, இரண்டாம் தலைமுறையினருக்கு கௌரவமாக கைமாற்றிக் கொடுத்து கல்லூரியை முன்கொண்டு செல்ல வழிவிடப்பட்டமை இலங்கை அரபுக் கல்லூரிகளின் வரலாற்றில் நடந்த அரிதான நிகழ்வுகளில் ஒன்றாகும்.

வனம் போல் இருந்த நிலங்களில் தொடங்கப்பட்ட ஸஹ்வா கல்லூரி இன்று பெரும் சோலைவனம் போல் பார்ப்பவர்களைக் கவரும் விதத்தில், மாணவர்களுக்கு கற்பதற்கேற்ற சிறந்த சூழல் கொண்டதாக அதன் பௌதிக வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. வகுப்பறை, விடுதி போன்ற அடிப்படை வசதிகள் முடியுமானவரை பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

தற்போது கல்லூரியில் சுமார் 250 மாணவர்கள் கல்வி கற்பதோடு, போதியளவு முழுநேர விரிவுரையாளர்கள், வருகை தரு விரிவுரையாளர்கள், ஆரம்ப நிலை உத்தியோகத்தர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், க.பொ.த (உ/த) கற்கைகளுக்கான விஷேட விரிவுரையாளர்கள் என பல ஆளணிகளுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

### நிருவாகக் கட்டமைப்பு



மாணவர்கள்

தனிநபர் ஆதிக்கம் இல்லாத படித்த, பண்பட்ட, நிருவாகத் திறனும் உலக அறிவும் கொண்ட ஒரு பணிப்பாளர் சபையினால் முறைமைப்படுத்தப்பட்ட அடிப்படையில் எழுத்தில் வடிவமைக்கப்பட்ட பல திட்டமிடல்களுடன் கல்லூரி நிருவகிக்கப்படுகிறது. பல்துறை சார்ந்தவர்களையும் உள்வாங்கி ஸஹ்வா தனது நிருவாகக் கட்டமைப்பை வடிவமைத்துள்ளது. குறிப்பாக ஸஹ்வாவின் நிருவாகத்தில் கூடுதல் ஸஹ்விகள் பங்காற்றுகின்றனர். இதன் தற்போதைய பணிப்பாளர் சபைத் தலைவராக கல்லூரியின் பழைய மாணவரான நிந்தவூரைச் சேர்ந்த இத்ரீஸ் ஹஸன் ஸஹ்வி (BA (Hon), MA) மிகச் சிறப்பான தலைமைத்துவம் வழங்கி வருகின்றார்.

மார்க்கத்திற்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் சேவையாற்றும் சமூகப் பொறுப்புணர்வுள்ள நல்ல அறிஞர்களை, தலைவர்களை உருவாக்குவதே ஸஹ்வா அரபுக் கல்லூரியின் நோக்கமாகும். மார்க்க அறிவு, கற்ற மார்க்கத்தின் அடிப்படையில் இபாதத்களில் ஈடுபடும் சுய ஆர்வம், உலக அறிவு (Secular Education O/L, A/L)) தமிழுடன் அரபு, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை (எழுத்து மற்றும் பேச்சாற்றல்), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு, தொழிற் பயிற்சி, நல்லொழுக்கம், நல்ல மனப்பாங்கு, சமூக பொறுப்புணர்வு, ஏனைய சமயங்கள் பற்றிய அறிவு, நாடு, உலகம் பற்றிய பொது அறிவு, தலைமைத்துவ ஆளுமை, நிருவாகத் துறை மற்றும் பொதுப் போட்டிப் பரீட்சைகளை எதிர்கொள்வதற்கு தேவையான அடிப்படை அறிவு போன்ற தகுதிகளை மாணவர்களிடம் கொண்டு வருவதற்கு அவசியமான அடிப்படைகளை உள்வாங்கி எமது கல்விக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. சமயக் கல்வி, உலகக் கல்வி ஆகிய இரண்டு வகையான கல்விக்கும் சமனான முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இவ்விரு கல்விகளும் கட்டாயமாக்கப்பட்டு அவை சமமாக, முறையாக முன்னெடுக்கத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



நூலகம்

பாடசாலையில் எட்டாம் வகுப்புப் படித்து ஒன்பதாம் வகுப்புக்குத் தேறிய மாணவர்களை தகுதிகாண் பரீட்சை, நேர்முகத் தேர்வு என்பன போன்ற தேர்வு முறையூடாக மாணவர்கள்; தெரிவு செய்யப்படுவர். இங்கு கற்கை காலம் ஆறு வருடங்களாகும். மூன்று வருடங்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர (G.C.E. O/L) காலமாகவும் மூன்று வருடங்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரக் (G.C.E. A/L) காலமாகவும் இது காணப்படும். இங்கு மொழித் துறை (Language Unit) என்ற பிரிவு ஒரு தனித்துறையாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனூடாக மாணவர்களை தாய்மொழி தமிழுடன், சமய மொழி அரபு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதவும் வாசிக்கவும் சரளமாகப் பேசவும் பயிற்றுவிக்கப்படுகிறது.

கல்லூரியின் தற்போதைய அதிபராக, பதுளை அலுப்பொத்தயைச் சேர்ந்த, ஸஹ்வாவில் ஸ்தாபக மாணவர்களில் ஒருவராகக் கற்று, வெளிநாட்டில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஒரு கல்விமான் றிஸாத் சலீம் (ஸஹ்வி, றியாதி) அவர்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்றார்கள்.

கல்லூரி விரிவுரையாளர்களின் அடிப்படைக் கல்வித் தகுதியாக 'குறைந்தது ஒரு பல்கலைகழகத்தில் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்' என வரையறுக்கப்பட்டுள்ளது. எமது கல்லூரியின் விரிவுரையாளர்கள் அனைவரும் வெளிநாடு அல்லது உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்களாகும்.

ஸஹ்வா, தனது முதலாவது பட்டமளிப்பு விழாவை 1994 லும், இரண்டாவது பட்டமளிப்பு விழாவை 2003 லும் விமர்சையாக நடாத்தியது.2023.01.14 தனது மூன்றாவது பட்டமளிப்பு விழாவையும் அதனோடு இணைத்து ஸ்தாபக உறுப்பினர்கள், ஸ்தாபக தொண்டர்கள், ஸஹ்வாவிற்காக உழைத்த, பெருமை தேடிக் கொடுத்த ஸஹ்விகள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறி கௌரவிக்கும் விழாவினையும், 30 வருட நிறைவாக முத்து விழாவினையும் நடாத்தும் இத்தருணத்தில், கல்லூரியினது பௌதிக, கல்வி, அபிவிருத்தி செயற்பாடுகளின் பின்னணியில் ஊன்றுகோல்களாக நின்று உழைத்த, ஒத்துழைப்பும் பங்களிப்பும் செய்த அனைவருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக!

இதுவரை சுமார் 200 உலமாக்களை உருவாக்கி நாட்டிற்கும் சமூகத்திற்கும் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கும் இக்கல்லூரியிலிருந்து, இன்றைய தினம் 91 உலமாக்கள் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார்கள். அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றோம்.

ஒரு கல்லூரியை நடத்திச் செல்வதில் பௌதிக வளத் தேவையும் மிக இன்றியமையாததாகும். அதற்கமைய வகுப்பறை, தளபாடங்கள், விடுதி வசதிகள், கற்பித்தல் உபகரணங்கள், நூலக வசதி, கணினிகூட வசதிகள், மைதான வசதி, சமயலறை, உள்ளக பள்ளிவாயல், கற்றல் உபகரணங்கள், அன்றாடப் பாவனைப் பொருட்கள் என்பன அவசியமாகின்ற நிலையில் நிறைவான தேவைகளுடன் இக்கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரிக்கு நாமும் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நல்குவதன் மூலம் நிலையான ஸதக்கா செய்தவர்களாக மாற முடியும் என்பதோடு, ஈருலக வாழ்வின் ஈடேற்றத்திற்கும் அல்லாஹ் உதவுவான். நிரந்தர வருமான ஏற்பாடுகள் எதுவுமின்றி தனவந்தர்களினதும் நன்கொடையாளர்களினதும் உதவிகளை பெற்றுக் கொண்டும் அதிகம் எதிர்பார்த்துக் கொண்டும் சிறப்பான பணியாற்றிவருகின்ற இக்கல்லூரியின் உயர்ச்சிக்காக உதவிகளை நல்கி பிரார்த்திப்போமாக!



பணிப்பாளர் சபை (நிறைவேற்றுக் குழு)

தொகுப்பு
ஐ.ஏ.ஸிறாஜ்
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

தகவல்
பீ.முஹாஜிரீன்
உறுப்பினர்
பணிப்பாளர் சபை நிறைவேற்றுக்குழு



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்


1. தரப்பட்ட படத்துடன் தொடர்பு குறைந்த சொல்லைத் தெரிவு செய்க.



i. பலகை
ii. இரும்பு
iii. மண்

2. மகிழ்ச்சி, பொழுதுபோக்கு, உடற்பயிற்சி


i.  ii.  iii. 

3. 



i. 21 ii. 23 iii. 20

4. மகனை விட தந்தை நிறை கூடியவர் என்பது
i. எப்போதும் உண்மை ii. எப்போதும் பொய் iii. சிலவேளை உண்மை




5. கண்டியிலிருந்து காலை 6.45க்கு புறப்பட்ட புகையிரதம் 8 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் பயணித்து மட்டக்களப்பினை சென்றடைந்தது எனில் புகையிரதம் மட்டக்களப்பினை அடைந்த நேரம் என்ன?
i. மாலை 2 மணி 15 நிமிடங்கள்
ii. மாலை 3 மணி
iii. மாலை 3 மணி 15 நிமிடங்கள்

6. 
நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பகுதி?
i. 4/8
ii. 3/ 8
iii. 2/8

7. பிட்டு, நெல், அரிசி, மா இவற்றை சரியான முறையில் ஒழுங்குபடுத்தினால் பெற வேண்டிய விடையானது?
i. நெல், அரிசி, பிட்டு, மா ii. அரிசி, நெல், பிட்டு, மா
iii. நெல், அரிசி, மா, பிட்டு


8. 

வெற்றிடத்துக்கு வர வேண்டிய உரு?

i.  ii.  iii. 

9. 40m நீளமான நூல் ஒன்று சரி அரைவாசியாக மடிக்கப்பட்டது. அது மீண்டும் மடிக்கப்பட்டு வெட்டப்பட்டது எனில் பெறப்பட்ட துண்டுகள் எத்தனை?
i. 3 ii. 4 iii. 5

10. ஒரு சதுர வடிவ காணியின் ஒரு பக்க நீளம் 7m. சஸ்வின் அக்காணியை சுற்றி இரண்டு முறை ஓடினான். அவன் ஓடிய மொத்த தூரம் எவ்வளவு?
i. 52 m ii. 54 m iii. 56 m




11. மேலேயுள்ள தரவுக்கமைய ஒரு ஆப்பிள் பழத்தின் விலையென்ன?
i. ரூபாய் 30.00 ii. ரூபாய் 35.00 iii. ரூபாய். 65.00

12. கொடுக்கப்பட்ட தரவுக்கமைய ஐஸ்கிறீமின் நிறையென்ன?
i. 50g ii. 60g iii. 110g

13. 6 + 9 – 7 இதன் பெறுமதிக்கேற்ப அமையப்பெறுவது
i. 15 + 2 - 9 ii. 9 – 6 + 7 iii. 15 + 2 – 8

14. 5 பேருக்கு உணவு சமைக்க 1kg அரிசி தேவை எனில் 20 பேருக்கு உணவு சமைக்க தேவையான அரிசி எவ்வளவு?
i. 3 kg ii. 4 kg iii. 5 kg


15. எனக்கு 9 வயதாக இருக்கும் போது எனது அப்பாவின் வயது 36 ஆகும். அப்பாவிற்கு 42 வயது ஆகும் போது எனது வயது என்ன?
i. 13 ii. 14 iii. 15

16. 2kg 500g சீனியின் விலை ரூபாய் 1000.00 எனில் 500g சீனியின் விலையென்ன?
i. ரூபாய் 200.00 ii. ரூபாய் 300.00 iii. ரூபாய் 400.00

17. ஒரு கதிரையின் விலை ரூபாய் 1200.00 ஒரு மேசையின் விலை ரூபாய் 2500.00 எனில் இரண்டு கதிரைகளும் ஒரு மேசையும் வாங்க தேவையான பணம் எவ்வளவு?
i. ரூபாய் 4900.00 ii. ரூபாய் 4500.00 iii. ரூபாய் 5200.00

18. 2020ம் ஆண்டில் ஜனவரி தொடக்கம் மார்ச் வரை உள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 90 ii. 91 iii. 92


19. 2, 4, 3, 6, 4, 8, ………, ………… அடுத்து வர வேண்டிய இரண்டு இலக்கங்களும் முறையே
i. 6, 10 ii. 5, 11 iii. 5, 10




20. 



i. 23 ii. 28 iii. 30


21. தரன் காலை 10 மணிக்கு மைதானத்திற்கு சென்று இரண்டரை மணித்தியாலங்களுக்கு பின்னர் வீடு திரும்பினான். அவன் வீடு திரும்பிய நேரத்தினை நியம நேரமாக தருக.
i. 00 : 30 ii. 12 : 30 iii. 23 : 30




22. உணவு – பசி என்பது போல் நீர் - ……………..
i. குடித்தல் ii. பானம் iii. தாகம்

23. 


i.  ii.  iii. 

24. 
இதிலுள்ள முக்கோணங்களின் எண்ணிகை
i. 12
ii. 10
iii. 6

25. 
கடதாசியொன்றினை மடித்து படத்தில் காட்டியவாறு வெட்டினால் கிடைக்கும் உரு?


i.  ii.  iii. 

26. இலக்கம் ஒன்றிலிருந்து பத்துவரை எண்ணும் எண்களை தளவாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தோன்றும் எண்களின் எண்ணிக்கை
i. 1 ii. 2 iii. 3




27. 360 மாம்பழங்களில் 2/6 பங்கு விற்பனையாகியது எனில் மிகுதி உள்ள மாம்பழங்கள் எத்தனை?
i. 120 ii. 220 iii. 240

28. 


இலக்கம் ‘3’ க்கு எதிர்ப்பக்கம் உள்ள இலக்கம் யாது?
i. 6 ii. 5 iii. 4

29. 

அடுத்து வரும் உரு எது?

i.  ii.  iii. 

30. காலையில் கிழக்கு நோக்கி நடந்த கீதாவின் நிழல் விழும் திசை என்ன?
i. வடக்கு ii. மேற்கு iii. கிழக்கு

31. 20 முதல் 40 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகள் எத்தனை?
i. 10 ii. 11 iii. 12

32. 500ன் அரைவாசியுடன் 300 ன் அரைவாசியை கூட்டி 100ஐ கழித்தால் கிடைக்கும் விடை
i. 500 ii. 400 iii. 300

33. நாளை மறுநாள் புதன்கிழமை எனில் நேற்று என்ன கிழமை
i. ஞாயிறு ii. சனி iii. செவ்வாய்

34. 5 மனிதர்கள் 3 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை 3 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்
i. 4 ii. 5 iii. 6

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

35. 2019ம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டுக்குரியது
i. 21 ii. 20 iii. 19

36. 20 மாணவர்கள் 20 நிமிடத்தில் ஒரு Km ஓடுவார்கள். 40 மாணவர்கள் அதே தூரத்தை எத்தனை நிமிடத்தில் ஓடுவார்கள்
i. 20 நிமிடத்தில் ii. 40 நிமிடத்தில் iii. 80 நிமிடத்தில்

37. 420 மாம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
i. 100 ii. 120 iii. 105

38. எழுபதாயிரத்து எழுநூற்று நாற்பத்தொன்பது என்பதனை எண்ணில் எழுதினால்
i. 70749 ii. 77049 iii. 770049

39. மூன்று கால் மேசையைச் சுற்றி நான்கு காலுள்ள கதிரைகள் 8 உள்ளன. மொத்த தளபாடங்களின் கால்களின் எண்ணிக்கை யாது?
i. 32 ii. 34 iii. 35

40. 5*l* 500ml குளிர்பானத்தை 250 ml கொள்ளளவு கொண்ட எத்தனை போத்தல்களில் ஊற்றலாம்?
i. 20 ii. 22 iii. 24

## கடந்த வார (06.01.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

I.
1. தேயிலை, தென்னை, இறப்பர்
2. பச்சைக் கம்பளம் விரித்தாற் போல
3. அழகாக
4. பச்சை
5. செழிப்பு
6. i. தேசத்தின் ii. குன்று

**II.**
7. உழவர்கள் வயலை உழுதார்கள்
8. சிங்கங்கள் மானை துரத்தின
9. i. ரவி கடைக்குச் சென்று பால், பழம் வாங்கினான்.
ii. நாளை பாடசாலைக்கு வருவாயா?
10. i. ஒரு தொப்பி வியாபாரி மர நிழலில் இளைப்பாறினார்
ii. அக்கா அழகான பூக்களைக் கொண்டு மாலை கட்டினார்
iii. நீ நேற்று பாடத்தை வீட்டில் செய்தாயா?
11. i. பிழை ii. சரி iii. பிழை
12. வடலி
13. பிளிறும்
14. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
15. தொடங்கியது
16. i. சிப்பம் ii. வரிசை
17. போத்து
18. i. பூமி ii. பிளவு
19. i. குகுளா ii. மேசய
20. i. நீங்கள் வருகிறீர்களா
ii. எனது நாடு இலங்கை

**III.**
21. 4
22. ஒரு தடவை
23. 62m
24. ஏழாயிரத்து அறுநூற்று எண்பத்திரண்டு
25. X
26. ரூபாய் 600.00
27. 5/18
28. 87430
29. 5*l*

**IV.**
30. 3
31. 3
32. 1
33. 2
34. 2
35. 3
36. 2
37. 3
38. 2
39. 1
40. 3
41. 2
42. 3
43. 1
44. 2
45. 2
46. 1
47. 1
48. 3
49. 2
50. 1
51. 2
52. 3
53. 2
54. 1
55. 2
56. 3
57. 1
58. 3
59. 1

# கிழக்கின் குரல்



# வாழைச்சேனை - கல்முனை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு

### இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல்

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை மீன்பிடித் துறை முகத்திலும் கடற்கரையிலும் தொடர்ந்து இடம்பெற்று வரும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் வகையிலான கலந்துரையாடலொன்று, வாழைச்சேனையைச் சேர்ந்த மீனவர்களுக்கும் கல்முனையைச் சேர்ந்த மீனவர்களுக்கும் இடையில் நடைபெற்றது.

மாளிகைக்காடு அந்நூர் கலாசார மண்டபத்தில் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. எம்.றியாஸின் ஒருங்கமைப்பில் நேற்று முன்தினம் (11) மாலை இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, மேற்படி மீனவர்களின் முரண்பாடுகளுக்குத் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன.

படகு தரித்தல், மீன் விற்பனை, போதை ஒழிப்பு, மீனவர்களுடன் கொடுக்கல், வாங்கல், மீன் வியாபாரிகளுடன் சிறந்த உறவைப் பேணுதல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டதுடன், இவ்விடயங்களுக்கு இருதரப்புக் கலந்துரையாடல் மூலம் உடன்படிக்கையை ஏற்படுத்துவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன், இவ்விரு தரப்பினரின் பங்களிப்புடன் கண்காணிப்பு நிர்வாகக் குழுவை உருவாக்குவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும், வாழைச்சேனையைச் சேர்ந்த மீனவர்களுக்கும் கல்முனையைச் சேர்ந்த மீனவர்களுக்கும் இடையில் ஒற்றுமை மனப்பான்மையைப் பேணி, அவர்கள் கடற்றொழிலில் ஈடுபடும் பொறிமுறை தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# திருக்கோவிலில் 56 குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பு வசதி

**திருக்கோவில் தினகரன் நிருபர்**



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தின் 22 கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, குறைந்த வருமானத்தைக் கொண்ட 56 குடும்பங்களுக்கு, திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஊடாக இலவசமாக குடிநீர் இணைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

பாம்பவூண்டேஷன் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இக்குடிநீர் இணைப்புகள் வழங்கி வைக்கப்படவுள்ளதுடன், இவ்வேலைத்திட்டம் தொடர்பாக பயனாளிகளை தெளிவுபடுத்தும் கூட்டமானது, திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (11) அப்பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, மேற்படி குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இக்குடிநீர் இணைப்பு வசதி வழங்கப்படவுள்ளது.

# உப்புவெளி பண்ணைக்கு கிழக்கு ஆளுநர் விஜயம்



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

கிழக்கு மாகாண சபைக்கு சொந்தமான திருகோணமலை மாவட்டத்தின் உப்புவெளி கால்நடைப் பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாரிய உயிர்வாயுப் பிரிவுக்கான நிர்மாணப் பணிகளை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார்.

இப்பண்ணையை நிர்மாணிப்பதற்காக 32 மில்லியன் ரூபா செலவிடப்படுவதுடன், சுமார் 67 ஏக்கரில் அமையப்பெறும் இப்பண்ணையில் மின்சாரம் தயாரிக்கும் திறன் உள்ளது.

அது மட்டுமல்லாமல், அதிலிருந்து வெளிவரும் திரவ உரத்தை சந்தைக்கு விடுவதன் மூலம் பெருமளவு வருமானத்தை ஈட்டக்கூடிய வாய்ப்புக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பண்ணைக்கு விஜயம் செய்த ஆளுநர், ஜெர்மனியிலிருந்து கொண்டு வரப்பட்ட சில வகை ஆடுகளையும் பார்வையிட்டார்.

# சுவாமி விவேகானந்தரின் 160 வருட ஜனனதின நிகழ்வு



**வாச்சிக்குடா விசேட நிருபர்**

சுவாமி விவேகானந்தரின் 160ஆவது ஜனன தின நிகழ்வு, அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலையில் நேற்று (12) சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி பாடசாலையினுடைய சமயக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவரது திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன, அத்துடன், சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதன்போது, சுவாமி விவேகானந்தர் பற்றிய சிறப்புரையை அப்பாடசாலை மாணவியொருவர் நிகழ்த்தியதுடன், அம்மாணவிக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக ஓய்வுநிலை ஆசிரியர் க.கமலநாதன் உரையாற்றினார்.

# உள்ளூராட்சி தேர்தல்; ஒலுவிலில் முஷாரப் எம்.பி.யின் கூட்டம்

**சம்மாந்துறை கிழக்கு, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்**



அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவதென்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் அணியின் ஆலோசனைக் கூட்டம், ஒலுவில் களியோடை கடற்கரை பங்களாவில் நேற்று முன்தினம்(11) நடைபெற்றது. திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் போது, உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தனி அணியாக போட்டியிடுவதன் அவசியம் பற்றி தெளிவுபடுத்தப்பட்டதுடன், பிரதேச முக்கியஸ்தர்களின் கருத்துகளும் கேட்டறியப்பட்டன.

இதன்போது பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை தொகுதிகளிலுள்ள சபைகளில் பலமான அணியாக களம் இறங்குவதற்கு ஏகோபித்த தீர்மானமும் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எம். ஜெமீல், தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகங்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் வினைத்திறனுடன் செயற்படும் நிலையில் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கான பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களிலுள்ள கலை மன்றங்களுக்கு இவ்வாண்டிலிருந்து 3 வருடங்களுக்கு செயற்படும் வண்ணம் இச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (படம்: பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பொங்கல்

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



இம்முறை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பாரம்பரிய முறையில் தைப்பொங்கல் விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உழவர்களின் திருநாளாம் தைப் பொங்கலை எதிர்வரும் 15ஆம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந்தின் வழிகாட்டலின் கீழ் அலுவலக உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

பாரம்பரிய முறையில் பொங்கல் விழா நடைபெறுவதுடன் கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

# மாஞ்சோலைச்சேனையில் டெங்கு பரிசோதனை

**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலைச் சேனை கிராமத்திலுள்ள வீடுகளில் டெங்கு பரிசோதனை மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கை அப்பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் நேற்று (12) முன்னெடுக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலக அதிகாரிகளும் கிண்ணியா சுகாதார வைத்தியப் பணிமனை அதிகாரிகளும் இணைந்து இச்சோதனையை நடத்தினர். பெருகி வருகின்ற நுளம்புகளினால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையைத் தொடர்ந்து, கிண்ணியா பிரதேசத்தில் பல விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சிறுபிள்ளை கல்வியில் முக்கிய பங்கு வகிக்கும் முன்பள்ளிக்கல்வி

## மடவளை வை. எம். எம். ஏ. இன் முன்பள்ளிப் பாடசாலையின் 41 ஆம் ஆண்டின் வருடாந்த கலை விழா

மடவளை வை. எம். எம். ஏ முன்பள்ளிப் பாடசாலையின் 41 ஆவது கலை விழா மடவளை தேசிய பாடசாலையின் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபத்தில் மடவளை வை. எம். எம். ஏ. இன் தலைவர் ஏ. எல். எம். ரிஸாட் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜப்பான் ஒட்டோ லங்கா கம்பனி லிமிட்டட் நிறுவனத்தின் இயக்குனர் மடவளை முளவ்பர் முஹமட் ரிப்தி கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் பொருளாளர் நிவ்ராஸ், கண்டி மாவட்ட அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் பணிப்பாளர் இஹ்திசான் எம். ஹுஸைன்டீன், மடவளை வை. எம். எம். ஏ. இன் செயலாளர் ஹசன் பிராஸ், பொருளாளர் பீ. எம். ரஹீம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். இதில் விசேட அம்சமாக சிறார்களின் கலை விழாவைக் கண்டுகளிப்பதற்காக மண்டம் நிறைந்த பெற்றோர்கள் வருகை தந்திருந்தனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜப்பான் ஒட்டோ லங்கா கம்பனி லிமிட்டட் நிறுவனத்தின் இயக்குனர் மடவளை முளவ்பர் முஹமட் ரிப்தி உரையாற்றும் போது,...

வை. எம். எம். ஏ. இன் பணிகளை நான் நீண்ட காலமாக அறிந்திருக்கின்றேன். இவர்கள் மூலமாக நல்ல சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் நானும் எனது சகோதரர் அவர்களும் இவ்வாறான சமூப் பணிகள் புரியும் அமைப்புக்களுக்கு பல்வேறு வகையிலான உதவிகளைச் செய்து வருகின்றோம். குறிப்பாக இந்த இடத்தில் என்னிடம் இதற்கான ஒரு கட்டடம் தேவையென்ற கோரிக்கையை முன் வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றத் தயாராக இருக்கின்றேன் என்பதை உங்களுக்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜப்பான் நாட்டில் எமது நாட்டைச் சேர்ந்தவர்கள் குடும்பமாக வாழ்கின்றனர். அந்த நாட்டில் எமது பிள்ளைகள் அங்குள்ள பாடசாலைகளில் கற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அந்த வகையில் நான் ஒரு கட்டடத்தை வாங்கி ஒரு பாடசாலையை ஆரம்பித்துள்ளேன். அதில் நமது நாட்டைச் சேர்ந்தவர்கள் எமது பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகள் 100 பேர் கல்வி பயிலுகின்றனர். முதலாம் ஆண்டு தொடக்கம் ஆறு வரை வகுப்புகள் உள்ளன. அதற்கு மேல் அங்கு கற்க முடியாது. அதற்கு அந்த நாட்டுக் கல்விச் சட்டம் இடம்கொடுப்பதில்லை. அதில் ஒரு கலாசார நிலையமும் தொழுவதற்கான பள்ளிவாயலையும் எனது தந்தையின் பெயரில் அமைத்துக் கொடுத்துள்ளேன்.

### அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி

மடவளை வை. எம். எம். ஏ. 1944 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை 1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்க முன்னரே கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் கண்டியில் உதவி அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் கண்டி வை. எம். எம். ஏ யும் மடவளை வை. எம். எம். ஏயும் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வரலாறு இருக்கிறது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட மடவளை வை. எம். எம். ஏ இனால் உருவாக்கப்பட்ட மடவளை முன்பள்ளிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 41 வருட காலமாகும். மடவளை வை. எம். எம். ஏக்கு 76 வருடங்கள்.ஆனால் முன்பள்ளிப் பாடசாலைக்கு 41 வருட காலமாகும். இலங்கையின் முன்பள்ளிப் பாடசாலை உருவாக்கமானது 40 வருடங்களைக் கொண்ட வரலாறுதான் உள்ளன. 1982 இல் முன்பள்ளிப் பாடசாலை அறிமுகப்படுத்தப்பட்டு அது நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட்டாலும் மடவளை வை. எம். எம். ஏ. இன் முன்பள்ளிப்பாடசாலை ஏற்கெனவே உருவாக்கப்பட்டு விட்டது. சிலவேளை இந்தப் பாடசாலை இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலையாக இருக்கக் கூடும் என்ற கருத்துக்களும் உள்ளன.

**1982 இல் முன்பள்ளிப் பாடசாலை அறிமுகப்படுத்தப்பட்டு அது நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட்டாலும் மடவளை வை. எம். எம். ஏ. இன் முன்பள்ளி பாடசாலை ஏற்கெனவே உருவாக்கப்பட்டு விட்டது. சிலவேளை இந்தப் பாடசாலை இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலையாக இருக்கக் கூடும்....**











இப்பிரதேசத்தின் வை. எம். எம். ஏ இன் தலைவராக அதாவது 2015 ஆம் ஆண்டு வரையிலும் இரு தசாப்த காலமாக அகில இலங்கை மட்டத்தில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் முன்பள்ளிப் பாடசாலைகளுக்கான விருதுகளை தொடர்ந்து பெற்று வந்துள்ளது. 2022 ஆம் ஆண்டிலும் மடவளை முன்பள்ளிப் பாடசாலைக்குத் தான் வழங்கப்பட்டது.

மடவளை வை. எம். எம். ஏ. தொடர்ந்து பல விருகளைப் பெற்று பல சாதனைகளை நிலை நாட்டிவரும் அமைப்பின் கீழ் இயங்கக் கூடியவைதான் மடவளை வை. எம். எம். ஏ. முன்பள்ளிப் பாடசாலை. அதிலும் இரண்டு தசாப்த காலமாக தொடர்ந்து இப்பாடசாலை விருதுகளைப் பெற்று வந்துள்ளன. அது தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் அதே போன்று அரசாங்க பிரதேச சபையினால் நடத்தப்பட்ட தெரிவுகளில் இந்த மடவளை வை. எம். எம். ஏ.முன்பள்ளிப் பாடசாலை பல விருகளை பெற்றுள்ளது. இது வரையிலும் 5000 சிறார்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறியுள்ளனர். இதற்கென பழைய மாணவர் சங்கத்தைக் கூட உருவாக்கக் கூடிய வகையில் இந்த முன்பள்ளிப் பாடசாலை அமைந்துள்ளது. பல முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு இங்கு கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிறந்த பயிற்சிகளைப் பெற்ற ஆசிரியைகள் வேறு முன்பள்ளிப் பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர்.

இவை தவிர பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்பை மேற்கொள்ளும் வகையில் தையல் பயிற்சிகள் வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




கொரோனா தொற்றுக் காலத்தில் பிறந்த பிள்ளைகளே இங்கு கல்வி பயிலுகிறார்கள். குறிப்பாக 2018, 2019 களில் பிறந்த மழலைச் செல்வங்களே தற்போது இங்கு கல்வி பயின்று கொண்டிருக்கின்றனர். இப்பிள்ளைகள் பிறந்த காலத்திலே கொரோனா தொற்றின் சவால்களை எதிர்நோக்கினார்கள். கொரோனாவினால் நாம் எல்லோரும் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும். தாய் தந்தையராக இருந்தாலும் முகம் கவசம் அணிந்துதான் ஆக வேண்டும். ஒரு நெருக்கடியான காலத்தில் தாய் தந்தையர்களுடைய முகத்தை ஒழுங்காகப் பார்க்க முடியாத ஒரு இக்கட்டான சூழலில் சவால்களை எதிர்கொண்டு வளர்ந்த பிள்ளைகள் இங்கு கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர்.

கொரோனா கால கட்டத்தில் இணையக் கல்வி முறைக்கு பிள்ளைகள் பழக்கப்பட்டனர். தன் கரங்களில் விளையாட்டுப் பொருட்களை வைத்து விளையாட வேண்டி பருவத்தில் கையடக்க தொலைபேசியை பிள்ளைகள் கையில் கொடுத்து இணையக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தினர். இந்தத் துறையில் இருந்து விடுபடுதல் வேண்டும். ஏனென்றால் இந்தப் பிள்ளைகள் ஆளுமையிலும் அறிவுத் துறையிலும் பேச்சு திறனிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இது ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

சமூக சீரழிவை இலத்திரனியல் சாதனங்கள் ஏற்படுத்துகின்றன. நீலத் திரை என்று கூறப்படும் அதன் மூலம் பிள்ளைகள் நிறையப் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் துடிப்பாக இருப்பார்கள், பேசுவார்கள் ஆனால் அவர்களுடைய பேச்சுக்களில் தெளிவுத் தன்மை இருக்காது. ஒரு விடயத்தை திரும்ப திரும்பச் செய்வார்கள். எனவே தாய்மார்களுக்கு மிக முக்கியபொறுப்பு இருக்கிறது. பிள்ளைகள் வளர்க்கின்ற முறையில் மிக அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். தன் பிள்ளைகளுக்கு தாய் மொழியைக் கற்பிக்கின்ற முதல் ஆசிரியையாக தாய் இருந்தாலும் அத்தோடு முன்பள்ளி ஆசிரியைகளும் இணைந்து நமது நாட்டுக்கும் நமது சமூகத்திற்கும் தேவையான எமது பிள்ளைகளை நல்ல நற்பிரசைகளாக உருவாக்க முன்வருதல் வேண்டும்.

கல்வி என்பது பொதுவானது அதனைக் கற்றுக் கொள்ள வயது எல்லை என்பது கிடையாது. இக்கல்வியை தாயாராகிய நீங்களும் கற்று தன் பிள்ளைகளுக்கும் கொடுக்க வேண்டும். குறிப்பாக சிறார்களின் விடயத்தில் தாய்மார்களே தீவிர கவனம் செலுத்த வேண்டும். எனவே கல்வி, சமூகம் முன்னேற்றம் என்ற நோக்கில் மடவளையில் வை. எம். எம். ஏ. இன் பங்களிப்பானது அளப்பரியவை

மடவளை வை. எம். எம். ஏ இன் 41 ஆவது சிறார்களுடைய கலை விழாவில் மாணவச் சிறார்களுடைய கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக இருந்தது. இந்தப் பிள்ளைகள் தங்களுடைய பருவத்தில் அதிகளவு கலை உணர்வுகளையே விரும்புவார்கள். ஆசிரியைமார்களும் அதற்கு தேவையான வடிவங்களையும் முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

இந்தக் காலத்தில் தட்டிக் கொடுப்பவர்களை விட தட்டிக் கழித்து குழி பறிப்பவர்களாக இருப்பவர்களே அதிகம் இருக்கின்றார்கள். எனவே நாங்கள் இதில் கவனமாக இருத்தல் வேண்டும். தட்டிக் கொடுப்பதன் மூலம் தன் பிள்ளைகளுக்கு சாதகமான விளைவுகளை நாங்கள் எதிர்பார்க்கலாம். குழிபறிப்பவர்களின் மூலம் இந்தப் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதிலே பெற்றோர்கள் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். தன் பிள்ளை எதையும் செய்யலாம் என்ற மனநிலையை உருவாக்குதல் வேண்டும். அதுதான் முக்கியமான விடயம். நீங்களும் வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும் என்றால் தனது பிள்ளை தனது சொத்துக்கள் என்று இல்லாமல் சமூகத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்று செயற்படுங்கள் ஒத்துழைப்பாக இருங்கள் நீங்களும் வரலாற்றில் எழுதப்படுவீர்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்டப் பணிப்பாளர் இஹ்திசான் எம். ஹுஸைன்டீன்

முன்பள்ளிப் பாடசாலைகள் இன்று பரந்து பட்ட வளர்ச்சியைக் கண்டிருக்கின்றன. முன்பள்ளி ஆசிரியைகளின் கற்றல், கற்பித்தல் முறைகள் பிள்ளைகளின் உள மனப்பாங்குக்கு ஏற்ப கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இருப்பினும் இன்றைய கணிப்பொறி உலகில் மனித மென்பொருட்களாக மாறும் அபாயத்தில் இருப்பது போன்ற தோற்றம் ஏற்படுவதை மறைக்க முடிய வில்லை. அது தான் இலத்திரனியலின் பாவனை அதிகரிப்பு. அதில் இருந்து எங்கள் குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிக்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

40 வருடங்களாக செயற்பட்டு வருகின்ற எமது பாடசாலை சிறார்களுக்கான சிறந்த முன்பள்ளி அனுபவத்தை மாத்திரமன்றி பொறுமை, ஒழுக்கம், பண்பாடு போன்ற விருத்திகளிலும் கவனம் செலுத்தி வருகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்களை தன்வசம் கொண்டுள்ள இப்பாடசாலை 40 வருட அனுபவங்களையும் நவீன கால செயற் திட்டங்களையும் கலந்து சிறந்த ஒரு பாடத்திட்டத்தை வழங்குகின்றது.






இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவர் எமது வை. எம். எம். ஏ. மடவளை முன்பள்ளிப் பாடசாலைக்கு ஒரு நிரந்தரமாக ஒரு கட்டடத்தை நிர்மாணித்துத் தருவதற்கு வாக்குறுதி வழங்கிய சகோதரர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை மடவளை வை. எம். எம். ஏ. பேரவையின் 23 ஆம் ஆண்டு புதிய மாணவர் வித்தியாரம்ப நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை வை. எம். எம்.. ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, கௌரவ அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் மாத்தளை மாவட்ட பணிப்பாளர் பௌஸ் ஏ. காதர், சிறப்பு அதிதியாக அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கண்டி மாவட்ட பணிப்பாளர் இஹ்திசான் எம். ஹுஸைன்டீன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



**இக்பால் அலி**

ශ්‍රී ලංකා සීනි (පෞද්ගලික) සමාගම
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்
LANKA SUGAR COMPANY (PRIVATE) LIMITED

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
### சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு
### வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

**பெலவத்த சீனி தொழிற்சாலைக்கு குளிரூட்டும் கோபுரத்துக்கான கியர் குறைப்பான்களின் (Gear Reducers for the Cooling Tower) வழங்கலுக்கு சர்வதேச போட்டிரீதியான விலைமனு - PR-5015/5016**

இலங்கை, புத்தலவில் அமைந்துள்ள பெலவத்த சீனி தொழிற்சாலைக்காக குளிரூட்டும் கோபுரத்துக்கான கியர் குறைப்பான்களின் வழங்கலுக்கு ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கீழ் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் அனுப்பும் வழி மூலம் 12,500.00 இலங்கை ரூபா அல்லது 35 அமெரிக்க டொலர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 பெப்ரவரி 22 ஆம் திகதி வரை வேலை நாட்களில் இலங்கை நேரப்படி 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையதளம் ((www.Lankasugar.lk) அல்லது பெருந்தோட்ட அமைச்சின் இணையதளம் (www.plantationindustries.gov.lk) அல்லது வெளிவிவகார அமைச்சின் இணையதளத்தில் (www.mfa.gov.lk) இருந்து தரவிறக்கம் செய்ய முடியும் என்பதோடு விலைமனுவுடன் சேர்த்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| விபரம் | **LKR** வங்கி கணக்கு |
| வங்கியின் பெயர் | இலங்கை வங்கி |
| கிளை | மிலகிரிய |
| கணக்கின் பெயர் | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| கணக்கு இலக்கம் | 73927950 |
| Swift Code | BCEYLKLX |

2. தேவையான உருப்படிகள்:
   1. குளிரூட்டும் கோபுரத்துக்கான கியர் குறைப்பான்களின் (**Gear Reducers for the Cooling Tower**) வழங்கல் 02
3. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்களை 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி இலங்கை நேரப்படி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், கைகளால் கொண்டுவந்து சேர்ப்பதன் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பெலவத்த சீனித் தொழிற்சாலையின் குளிரூட்டும் கோபுரத்துக்கான கியர் குறைப்பான்களின் வழங்கலுக்கான கேள்விமனு" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
5. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்களை திறக்கும் திகதியில் இருந்து 119 நாட்கள் வரை செல்லுபடியானதாக 810.00 அமெரிக்க டொலர் அல்லது 300,000.00 இ.ரூபாவின் பணமாக்கக்கூடிய திரும்பப் பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 258 4184, கைபேசி +94 77 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04,**
**இலங்கை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### சுற்றாடல் அமைச்சு
### புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்

**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் உத்தேச ஆய்வுகூடத்திற்கு ஆய்வுகூடத் தளபாடங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்**

ஒப்பந்த இல. **PR/08/Q/84/21**

அன்புடையீர்,

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் உத்தேச ஆய்வுகூடத்திற்கு ஆய்வுகூடத் தளபாடங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதலுக்காக இதனையொத்த ஆய்வுகூடத் தளபாடங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதலில் நிபுணத்துவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரின் சார்பில் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் தலைவர் அழைக்கின்றார். இந்த வேலைக்கான மதிப்பீட்டுக் கிரயம் வெட் வரியின்றி 40.82 மில்லியன் ரூபாவாகும். வழங்கல் மற்றும் நிறுவுதலுக்கான காலம் 119 நாட்களாகும்.

01. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
    - ஆய்வுகூட தளபாடங்களை உற்பத்தி செய்பவர் குறைந்தபட்சம் பத்து (10) வருட அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதுடன் இதயையொத்த ஆய்வுகூட தளபாடங்கள் மற்றும் வழங்கப்படும் பொருட்களை தயாரிப்பதில் இலங்கையில் குறைந்தது ஏழு (07) வருடங்கள் நிரூபிக்கப்பட்ட சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - விலைமனுதாரர் இலங்கையில் இதேபோன்ற ஆய்வுகூட தளபாடங்களை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் என்பவற்றில் குறைந்தபட்சம் ஏழு (07) வருட அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதுடன் நவீன ஆய்வுகூட தளபாடங்களை நிறுவுதல் மற்றும் சிக்கலைத் தீர்ப்பதற்கான ஆய்வுகூட தளபாடங்கள் உற்பத்தி நிலையத்தில் பயிற்சி பெற்ற தகுதிவாய்ந்த தொழில்நுட்ப ஊழியர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
02. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கான தகுதித் தேவைப்பாடுகளில் உள்ளடங்குவன:
    - கடந்த ஏழு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட தளபாடங்கள் வழங்கல் மற்றும் நிறுவுதல் பணிகளின் சராசரி வருடாந்த மதிப்பு குறைந்தபட்சம் 40.0 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.
    - திரவ சொத்துக்கள் அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தேவைப்பாடு 15.0 மில்லியன் ரூபாவாகும்.
03. விலைக்கோரப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும் முடிவுறுத்துவதற்கும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்க உங்களையும் ஏனைய விலைமனுதாரர்களையும் இப்போது நாம் அழைக்கிறோம்.
04. விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பெறுகை உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
05. 2023-01-13ஆம் திகதி முதல் 2023-02-01ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் நிதிப் பிரிவிற்கு மீளளிக்கப்படாத எட்டாயிரம் ரூபாவை (ரூபா 8,000.00) செலுத்திய மற்றுச் சீட்டுடன் நிறுவனக் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
06. விலைமனு ஆவணங்களை 2023-01-13ஆம் திகதி முதல் பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பெறுகை, உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் பெற்றுக்கொள்ளலாம்.
07. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
08. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் 500,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
09. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம், இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
10. விலைமனுக்களை 2023-02-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதன் பின் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.
11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-01-18ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் வேலைதளத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**

### மாநகர சபை - குருநாகல்

## பாவனைக்குட்படுத்தாத பொருட்களுக்கான ஏல விற்பனை

குருநாகல் மாநகர சபையானது பின்வரும் பாவனைக்குட்படுத்தாத பொருட்களை பகிரங்க ஏல விற்பனை செய்வதற்கு தீர்மானித்துள்ளது. **இந்நிகழ்வானது 2023 ஜனவரி 27ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** மாநகர சபை குளத்தைச் சுற்றியுள்ள களஞ்சியசாலை வளாகத்தில் நடாத்தப்படும்.

கம்பிரஷர் இயந்திரங்கள், இரும்பு அலுமாரிகள், மின் உபகரணங்கள் மற்றும் மோட்டார்கள், கண்ணாடியுடைய /பிட்டிங்ஸ் கதவு, யன்னல்கள், செப்புக்கம்பிகள், டயர் ரியுப், சிவிலிங் மின் விசிறிகள் போன்ற பொருட்கள் விற்பனை செய்யப்படும்.

ஏலம் தொடர்பான விபரப் பட்டியலானது குருநாகல் பொது நூலகம், மாநகர சபை முன்னாள் காரியாலயம், மற்றும் வடமேல் மாகாண சபை பிரதான செயலாளர் காரியாலயம் ஆகிய இடங்களிலுள்ள அறிவித்தல் பலகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கும். ஏல விற்பனை தொடர்பான இறுதி முடிவினை மாநகர சபையே மேற்கொள்ளும். மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் **தொ.பே 037 4941869**

நகர சபை ஆணையாளர்,
மாநகர சபை,
குருநாகல்.
2023.01.13

CSIAP — THE WORLD BANK

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
### கமத்தொழில் அமைச்சு
### செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம்
### வடமேல் மாகாணம்
### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

**(தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)**

1. இலங்கை சனநாயக சோசலிசகுடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து – உலக வங்கி – 125 மில். அஜடொ இற்கு நிகரான கடனொன்றை கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட ஆகுசெலவிற்காக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வமேமா கீழ்மட்ட செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக வட மேல் மாகாண செயற்றிட்ட பிரதி பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலையின் விளக்கம் | இடைநிகழ்வுகள் மற்றும் பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (மில்லியனில்) | CIDA பதிவு மற்றும் விஷேடத்துவம் | விலை மனுவின் செல்லுபடியாகும் காலம் | விலைமனுப் பிணையின் பெறுமதி (இ.ரூபாவில்) மற்றும் செல்லுபடியாகும் காலப்பகுதி | மீளளிக்கப் படாத கட்டணம் (இ.ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| LK-MOA-309676-CW-RFB/NWP/DPDO/Machinery Yard(07) 2022/28 | வட மேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் கறுவளபஸ்வெவ பிசெ பிரிவில் தப்போவ ஏஎஸ்சி மற்றும் புளியங்குளம் ஏஎஸ்சி, வனாத்தவில்லுவ பிசெ பிரிவில் லனாத்தவில்லுவ ஏஎஸ்சி மற்றும் நவகத்தேகம ஏஎஸ்சி நவகத்தேகம பிசெ பிரிவில் இயந்திராதி திறந்தவெளி நிர்மாணம். CSIAP | 21.56 | கட்டிடம் மற்றும் நிர்மாணத்தில் சி-5 அல்லது மேற்பட்டது | 2023 மே 14 ஆம் திகதி வரையும் | 300,000.00 2023 ஜூன் 11 ஆம் திகதி வரையும் | 9,000.00 |

3. மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்திற்கு எந்தவொரு அரச உரிமையுள்ள தொழில்முயற்சியும் (சபை, கூட்டுத்தாபனம், பணியகம் போன்றவை) விலைமனுவை சமர்ப்பிப்பதாயின், அவர்கள் அவர்களின் விலைமனுவுடன் உலக வங்கியிடமிருந்து 3.23 (b) என்ற ஷரத்தின் தொடர்பில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியையுடையவர்களென ''ஆட்சேபனை இல்லை'' என்ற கடிதத்தையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். இல்லாவிடின், அவர்களின் விலைமனுவானது பதிலிறுக்கப்படாத விலைமனு என எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும். மேலும், சித்திகரமான விலைமனுதாரர் மேலேயுள்ள அட்டவணையின் விஷேடத்துவத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள தரத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுதாரர் ஒன்றிற்கு மேற்பட்ட ஒப்பந்தத்திற்கு விலைமனுவை சமர்ப்பிக்கலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்களின் நிதியியல் மற்றும் ஏனைய ஆற்றல் எல்லைகளுக்கமைவாகவே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை குருநாகல், யக்காபிட்டிய வீடமைப்புத்துறை, மிஹிந்து மாவத்தை, 51 ஆம் இலக்கத்திலுள்ள வட மேல் மாகாண செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட செயற்றிட்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 037-2227950, மின்னஞ்சல் - dpdcslapnwp@gmail.com) **2023** சனவரி 13 ஆம் திகதியிலிருந்து 2023 பெப்ருவரி 03 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. 2023 சனவரி 13 ஆம் திகதியிலிருந்து 2023 பெப்ருவரி 3 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்திய பின்னர் (தொகைக்காக மேலேயுள்ள அட்டவணையை தயவு செய்து பார்வையிடவும்) மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு தலைப்புக் கடிதத்தின் மூலப் பிரதியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.
7. மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 2023 சனவரி 17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வளமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே வேலைத்தளங்களை உரித்தான அலுவலர்களின் உதவியுடன் பரீட்சிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள விதிக்கப்பட்ட உருமாதிரியில் அமைந்தவாறான நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதத்துடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறிந்துரைக்கப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு உத்தரவாதமில்லாத எந்தவொரு விலைனுவும் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அவரது முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்படல் வேண்டும். அதன் பின்னர் அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் வேலையின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2023 பெப்ருவரி 3 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் இல. 51, மிஹிந்து மாவத்தை, யக்காபிட்டிய வீடமைப்புத்துறை, குருநாகல் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
12. 2023 பெப்ருவரி 3 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல் மூடப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள், அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும்.


**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர் (வட மேல் மாகாணம்),**
**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம்,**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**இல.: 51, மிஹிந்து மாவத்தை,**
**யக்காபிட்டிய வீடமைப்புத்துறை, குருநாகல்.**

திகதி: 2023.01.13

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

106



**கார்கள் விற்பனைக்கு**

WP CBH-0592 Renault KIWID, 2018, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினானஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 002564

107

**டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

SG GL - 0186 Toyota Corona, 1998, Car கூடிய விலைக் கோரிக்கைக்கு வெ லிபல் பினானஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 002570

WPKW-68 77 Toyota, 2 011 - Car கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினானஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 002574

WP KP-1 292 Toyota, 2 010 Car கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினானஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 002573

113

**சுசூகி கார்கள் விற்பனைக்கு**

WP CBF - 5321 Suzuki Wagon R. 2017 Car. கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினானஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 002569

117



**வேன்கள் விற்பனைக்கு**

SPGB - 7232 Toyota Townace, 1997 கூடிய வி லைக் கோரிக்கைக்கு வெலிபல் பினானஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 002571


119



**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

SGJG-4367 Toyota Toyoace, 1999, Lorries கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னா ன ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 002575

122



**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

SG YL-1222 TVS King, 2011, Three wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னா னஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 002578

YI-3809 Bajaj, 2011, NAWAN-4240 Bajaj, 2013, SP YK-09 25 Bajaj, 2011, SP QS-354 0 Bajaj, 2009, WP AAW-3511, Bajaj-2015, ABJ-98 5 9 Bajaj 2015 T h reewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னா னஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 002581

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.


Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to. classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

எனது இல:- KDS/TUM/04/01/06/01/03/31

கண்டி மாவட்டத்தில், தும்பனே பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் சந்தயா மத்துமதேவி சந்திரசேக்கர குணரத்ன ஆகிய நான், காணி சுவீகரித்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் காணும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணம் நாற்பத்து நான்கு இலட்சத்து முப்பத்து ஓராயிரத்து முந்நூற்றி நாற்பத்து மூன்று ரூபாய் (ரூ. 4,431,343.00)) இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக் கொள்வதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DLA 0003/20 கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

**எஸ்.எம்.சீ. குணரத்ன**
**பிரதேச செயலாளர்,**
**தும்பனே**

**2022.08.19 திகதி**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தும்பனே**

**உப அட்டவணை**

காணியின் பெயர் : கராபுவத்தை அல்லது துங்காலே வத்தை
வரைபட இல. : 131/35/32
துண்டு இல. : 827
விஸ்தீரணம் : 0.1147 இன் 6/7 இன் உரிமை
எல்லைகள் : வடக்கு : துண்டு இல. 830, 829 மற்றும் 828
கிழக்கு : துண்டு இல. 829, 828, 820 மற்றும் 821
தெற்கு : துண்டு இல. 826, 825 மற்றும் 834
மேற்கு: துண்டு இல. 834 மற்றும் 830

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல:- KDS/TUM/04/01/06/01/04/02/05**

கண்டி மாவட்டத்தின், தும்பனே பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் சந்தயா மத்துமதேவி சந்திரசேக்கர குணரத்ன ஆகிய நான் காணி சுவீகரித்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் காணும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணம் ஒரு இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து முந்நூறு ரூபாய் (ரூ. 129,300.00) இக்காணியின் உரிமைகோருபவர்கள் பெற்றுக்கொள்வதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DLA 00035/19 கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

**எஸ்.எம்.சீ. குணரத்ன,**
**பிரதேச செயலாளர்,**
**தும்பனே.**

**2022.08.19 திகதி**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தும்பனே.**

**உப அட்டவணை**

காணியின் பெயர் :- மெதகொடவத்தை, நாகஸ்வத்தை, கவுடெல்ல.
வரைபட இல. :- 162/09/09
துண்டு இல. :- 212
விஸ்தீரணம் :- 0.4679 ஹெக்டயார் இன் 4.31 பர்ச்சஸ்
எல்லைகள் :-
***வடக்கு*** : 207 மற்றும் 211ஆவது காணித் துண்டு
***கிழக்கு*** : 211 மற்றும் 215ஆவது காணித் துண்டு
***தெற்கு*** : 215, 214 மற்றும் 213ஆவது காணித் துண்டு
***மேற்கு*** : 214, 213 மற்றும் 335ஆவது காணித் துண்டு மற்றும் இ.கி.வ. 198 (மெதகொட)

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல:- KDS/TUM/04/01/06/01/02/23**

கண்டி மாவட்டத்தின், தும்பனே பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் சந்தயா மத்துமதேவி சந்திரசேக்கர குணரத்ன ஆகிய நான் காணி சுவீகரித்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் காணும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணம் ஒரு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து அறுநூற்றி எழுபத்து ஐந்து ரூபாய் (ரூ. 186,675.000) இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக்கொள்வதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DLA 00002/20 கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

**எஸ்.எம்.சீ. குணரத்ன,**
**பிரதேச செயலாளர்,**
**தும்பனே**

**2022.08.19**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தும்பனே.**

**உப அட்டவணை**

காணியின் பெயர் :- பெட்வர்த் எஸ்டேட், கல்கருமுதுனே வத்தை புப்பிலியே பரண வத்துயாய, கும்பலன்னே கும்புர, விச்சிஹேனேவத்தை, உடகமயாயகே வத்தை
வரைபட இல. :- 192/04/04
துண்டு :- 334
விஸ்தீரணம் :- 24.89 பேர்ச்சஸ்
எல்லைகள் :-
***வடக்கு*** : 335, 317 மற்றும் 325ஆவது காணித் துண்டு
***கிழக்கு*** : 325, 326, 69 மற்றும் 333ஆவது காணித் துண்டு
***தெற்கு*** : 326, 69, 333 மற்றும் 336 ஆவது காணித் துண்டு
***மேற்கு*** : 336 மற்றும் 335ஆவது காணித் துண்டு

### உள்ளூராட்சித் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

## 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்)சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நாகராசா மணிவண்ணன் ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 66(இ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் நகர சபை மற்றும் கோறளைப்பற்று பிரதேச சபை அம்பாறை மாவட்டத்திலுள்ள நாவிதன்வெளி பிரதேச சபைகளில் வெற்றிடமாகியுள்ள தவிசாளர் பதவிக்கு புதிய தவிசாளர்களை தெரிவு செய்வதற்கான கூட்டமானது கீழ்வரும் அட்டவணைக்கு அமைவாக கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் இக்கூட்டங்கள் தொடர்பான அறிவித்தல் என்னால் 2314/09 ஆம் இலக்க 2023.01.10 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையில் (அதி விசேடம்) விடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

| உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | கூட்டம் நடாத்தப்படும் திகதி மற்றும் நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| கோறளைப்பற்று பிரதேச சபை | 2023.01.24 காலை 09.00 மணி | கோறளைப்பற்று பிரதேச சபை சபா மண்டபம் |
| ஏறாவூர் நகர சபை | 2023.01.24 காலை 11.00 மணி | ஏறாவூர் நகர சபை சபா மண்டபம் |
| நாவிதன்வெளி பிரதேச சபை | 2023.01.24 மதியம் 03.00 மணி | நாவிதன்வெளி பிரதேச சபை சபா மண்டபம் |

**நா.மணிவண்ணன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்.**

## கேள்வி கோரல் அழைப்பு

### மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் வடமேல் மாகாணம் சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் வாகனத் தரிப்பிடங்களைக் குத்தகைக்கு விடுதல் – 2023

மாரவில, தம்பதெனியா, கல்கமுவ மற்றும் நிக்கவரெட்டிய போன்ற ஆதார வைத்தியசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் வாகனத்தரிப்பிடங்களை குத்தகைக்கு விடுவதற்காக, 2023.01.27 அன்று மு.ப.11 மணிவரை வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கேள்விக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். 2023.01.26 வரை வாரவேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பின்வரும் முகவரியில் நேரில் சமுகமளித்து வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து படிவக்கட்டணமாக ரூபா.10,000/- ஐச் செலுத்தி இதற்கான கேள்விப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| ஆதார வைத்தியசாலையின் பெயர் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சேவைகள் | குத்தகைகாலம் |
|---|---|---|
| தம்பதெனியா | சிற்றுண்டிச்சாலை | 2023.02.15 முதல் 2023.12.31 வரை |
| தம்பதெனியா | வாகனத்தரிப்பிடம் | 2023.07.15 முதல் 2024.07.14 வரை |
| நிக்கவரட்டிய | வாகனத்தரிப்பிடம் | 2023.07.15 முதல் 2024.07.14 வரை |
| கல்கமுவ | சிற்றுண்டிச்சாலை | 2023.02.15 முதல் 2023.12.31 வரை |
| மாரவில | சிற்றுண்டிச்சாலை | 2023.07.15 முதல் 2024.07.14 வரை |

02. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்

இரண்டு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் தபாலுறைகளில் சேர்த்து மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் ஒருறையில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் சேவையின் பெயர் மற்றும் வைத்தியசாலையின் பெயரைக் குறிப்பிட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது இவ்வலுவலகத்தின் பிரதான கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். 2023.01.27 அன்று மு.ப.11.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு அன்றைய தினம் மு.ப.11.05 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில், கேள்விதாரர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு,**
**வடமேல் மாகாண சுகாதார சேவைகள்**
**திணைக்களம் - வயம்ப**

**2023.01.12**

### வ/ப ஆணமடுவ பலநோக்கு கூட்டுறவு சங்கம்

## 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட முழுமையான வாக்காளர் பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தல்

வ/ப ஆணமடுவ பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர் பெயர்பட்டியல் 2023.01.20 முதல் 2023.02.03 வரை பின்வரும் இடங்களில் காட்சிப்படுத்தப்படும். அதன் பிரகாரம் 2021.12.31 ஆம் திகதி வரை அங்கத்துவம் பெற்றுள்ள அனைத்து அங்கத்தவர்களினதும் பெயர்கள் அப்பெயர்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அதில் உங்கள் பெயர், அங்கத்துவ இலக்கம், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்றவை பிழைகளின்றி பதியப்பட்டுள்ளனவா எனப் பரிசீலனை செய்து, அதில் ஏதேனும் திருத்தங்கள், முறையீடுகள் அல்லது எதிர்ப்புகள் இருப்பின், அவற்றை எழுத்து மூலம், செயலாளர், வ/ப, ஆணமடுவ பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஆணமடுவ என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் ஒப்படைக்கலாம். அவை 2023.01.20 முதல் 2023.02.03 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அக்காலப்பகுதியில் திருத்தங்கள், முறையீடுகள் மற்றும் எதிர்ப்புக்கள் ஏதும் முன்வைக்கப்படாவிடின், அப் பெயர்பட்டியலானது, பிழைகள் அற்ற ஆவணமெனக் கணிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அங்கத்தவர் பெயர்பட்டியல் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்**

**சில்லறை கிளைகளின் பெயர்கள்**

➢ மதவக்குளம் பிரதேச அங்கத்தவர் பெயர் பட்டியல் மதவக்குளம் கிராமிய வங்கிக் கிளையில்
➢ கல்குளிய அங்கத்தவர் பெயர் பட்டியல், கல்குளிய கோப்சிட்டி வர்த்தகக் கிளையில்
➢ கொட்டுக்கச்சிய 2A மற்றும் புராணகம அங்கத்தவர் பொயர்பட்டியல் கொட்டுக்கச்சிய கிராமியவங்கி கிளையில்
➢ ஆண்டிகம பிரதேச அங்கத்தவர் பெயர்பட்டியல் ஆட்டிகம கிராமிய வங்கிக்கிளையில்
➢ முதலக்குளிய மற்றும் உப்பலவத்தை பிரதேச பெயர்பட்டியல், உப்பலவத்தை கிராமிய வங்கி கிளையில்
➢ செம்புக்குளிய மற்றும் மஹகும்புக்கடவல பிரதேச பெயர் பட்டியல், மஹகும்புக்கடவல கோப்சிட்டி வர்த்தக கிளையில்
➢ சியம்பளாகஸ்ஹேன மற்றும் வடத்த பிரதேச அங்கத்தவர் பெயர்பட்டியல் வடத்த கிராமிய வங்கிக் கிளையில்
➢ கிவுள மற்றும் கல்குளம போன்ற பிரதேச பெயர்பட்டியல் கல்குளம கிராமிய வங்கிக் கிளையில்
➢ 06 கம்மாயை மற்றும் கொய்லாண்டிகம பெயர்பட்டியல் கொய்லாண்டிகம கிராமிய வங்கிக் கிளையில்
➢ 07 கம்மாயை (மெருங்கொட) மஹஉஸ்வெவ A, தல்கஸ்வெவ மற்றும் மஹஉஸ்வெவ B போன்ற பிரதேச பெயர்பட்டியல் மெருங்கொட கிராமிய வங்கிக் கிளையில்
➢ திவுல்வெவ, வல்பாளுவ, பரமாகந்தகம, தோணிகல, வடிகமங்காவ, கொதலகெமியாவ மற்றும் ஆணமடுவ பிரதேச பெயர் பட்டியல் ஆணமடுவ கோப்சிட்டி வர்த்தக நிலையத்தில் காட்சிப்படுத்தப்படும்.
➢ பரணன்கட்டுவ பெயர்பட்டியல், பரணன்கட்டுவ கிராமிய வங்கிக் கிளையில் காட்சிப்படுத்தப்படும்.

சங்கத்தின் அனைத்து பிரதேச அங்கத்தவர் பெய்பட்டியல்களின் பிரதிகளைப் பரிசீலனை செய்து கொள்வதற்காக, சங்கத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக www.membercoop.net என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் மூலமும் இதனைப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

**செயலாளர்**
**வ/ப. ஆணமடுவ பலநோக்கு கூட்டுறவு சங்கம்,**
**ஆணமடுவ.**
**தொ.பே: 0322263225**
**2023.01.11**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையின் பின்வரும் சேவை ஒப்பந்தத்திற்காக பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | சேவை ஒப்பந்தம் | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | மீளளிக்கப் படும் வைப்பு / வங்கிப் பிணை (ரூபா) |
|---|---|---|---|
| 01 | சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் | 3,500.00 | 30,000.00 |
| 02 | Renovation of Incinerator Roof and Waste Storage Building Roof | 2,000.00 | 10,000.00 |

பெறுகை மாதிரிப் படிவங்களை 2023-01-16ஆம் திகதி முதல் 2023-02-03ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் ஹம்பாந்தோட்டை புதிய மாவட்ட பொது வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம். உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2023-02-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் சமர்ப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

விண்ணப்பதாரர்கள் தமது விலைகளைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகை விடயத்தைக் குறிப்பிட்டு, தலைவர், பிராந்திய பெறுகைக் குழு மாவட்ட பொது வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். மேற்படி செயற்பாடுகள் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இல. 047-2256417

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**ஹம்பாந்தோட்டை.**

## தொம்பே பிரதேச சபை

## பாவிக்கமுடியாத வாகனங்களை பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்தல்

தொம்பே பிரதேச சபையினால் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்வரும் வாகனங்களை இருக்கும் நிலையிலேயே 2023-02-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொம்பே பிரதேச சபையின் பழைய அலுவலக இடப்பரப்பில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| தொ. இல. | வாகனப் பதிவிலக்கம் | வாகன வகை |
|---|---|---|
| 01 | RD 6540 | டிராக்டர் |
| 02 | 49-4354 | டிராக்டர் |
| 03 | 78-0307 | கை டிராக்டர் |
| 04 | இலக்கமற்ற டிராக்ட் டிரெயிலர் | டிரெயிலர் |

சமர்ப்பிக்கப்படும் விலைக்குப் புறம்பாக 1% முத்திரைக் கட்டணம் அறவிடப்படும்.

வாகன ஏலவிற்பனையின் பின் தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கு இயைபான தொகையை அன்றைய தினமே தொம்பே பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திற்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் 3 நாட்களுக்குள் வாகன ஒப்படைத்தல் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து வாகனத்தை அலுவலக இடப்பரப்பிலிருந்து அப்புறப்படுத்திக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வாகனங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு 2023-01-25, 26, 27ஆம் திகதிகளில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வாகனத்திற்குப் பொறுப்பான அலுவலரைச் சந்தித்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

விசாரணை - 0332269260 - வாகனப் பொறுப்பு அலுவலர்

**தலைவர்,**
**தொம்பே பிரதேச சபை,**
**கிரிந்திவெல.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்

### புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் உத்தேச ஆய்வுகூடத்திற்கு புகை தடுப்புகளை (Fume Hoods) வழங்குதல் மற்றும் நிறுவுதல்

### ஒப்பந்த இல. PR/08/Q/84-I/21

01. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் உத்தேச ஆய்வுகூடத்திற்கு புகை தடுப்புகளை (Fume Hoods) வழங்குதல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரின் சார்பில் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் தலைவர் அழைக்கின்றார் என்பதுடன் இதன் மதிப்பீட்டுக் கிரயம் வெட் வரியின்றி ஏழு மில்லியன் இல. ரூபாவாகும். ஒப்பந்தக் காலம் 120 நாட்களாகும்.

இந்த வேலைகள் பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பணியின் நோக்கமானது விபரக்குறிப்புகள் மற்றும் தரநிலைகளுடன் பொருந்தக்கூடிய இரண்டு எண்ணிக்கையான புகை கப்போர்டுகளை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரித்தல் என்பனவாகும். புகை கப்போர்டிலிருந்து வெறியேற்றும் குழாய் MVAC contactor உடன் நிறுவப்பட்டுள்ள வெளியேற்றும் குழாய் முறைமையுடன் இணைக்கப்படல் வேண்டும்.

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

- புகை தடுப்புகளை (Fume Hoods) உற்பத்தி செய்பவர் குறைந்தபட்சம் பத்து (10) வருட காலம் வடிவமைப்பு அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதுடன் இதனையொத்த புகை தடுப்புகளை மற்றும் வழங்கப்படும் பொருட்களை தயாரிப்பதில் இலங்கையில் குறைந்தது ஏழு (07) வருடங்கள் நிரூபிக்கப்பட்ட சேவைப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரர் இலங்கையில் இதேபோன்ற புகை தடுப்புகளை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் என்பவற்றில் குறைந்தபட்சம் ஏழு (07) வருட அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதுடன் நவீன ஆய்வுகூட தளபாடங்களை நிறுவுதல் மற்றும் சிக்கலைத் தீர்ப்பதற்கான புகை தடுப்பு உற்பத்தி நிலையத்தில் பயிற்சி பெற்ற தகுதிவாய்ந்த தொழில்நுட்ப ஊழியர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். என்பதுடன் 2023-01-13ஆம் திகதி முதல் 2023-02-01ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரையில் பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) எனும் முகவரியில் (தொலைபேசி: 011 2887821/23) விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-01-13ஆம் திகதி முதல் 2023-02-01ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவைப் செலுத்துவதன் பேரில் பிட்டகோட்டே, இல. 569, எப்பிட்டமுல்ல வீதி, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

06. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ஒன்றில் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக 2023-02-02ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமூகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று பின்வரும் இடம், நேரம் மற்றும் திகதிகளில் இடம்பெறும்:

திகதி: 2023-01-18 நேரம்: மு.ப. 10.30
இடம்: கேட்போர் கூடம், 1ஆம் தளம்,
புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,
இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,
பிட்டகோட்டே.

08. சகல விலைமனுக்களுடனும் நிபந்தனையற்ற மற்றும் கோரிக்கை பிணை முறி வடிவில் 100,000.00 (ஒரு இலட்சம் இலங்கை ரூபா) இல. ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. விலைமனுக்கள் 2023-05-04ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்கள்)

10. விலைக்கோரல் பிணை முறிகள் 2023-06-01ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்கள்)

மேற்கூறப்பட்ட முகவரியானது:
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569, எப்பிட்டமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**
**011 2887821/23**

# அறிவித்தல்

## கொழும்பு மாநகர சபை
## மாநகர பொருளாளர் திணைக்களம்

## வரிப்பணம் செலுத்தாமையின் காரணமாக சபைக்கு சுவீகரித்துக்கொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட சொத்துக்கள்

கொழும்பு மாநகர சபைக்கு அறவிட்டுக்கொள்ள வேண்டிய வரிப்பணத்தினைச் செலுத்தாத மற்றும் வரிப்பணம் செலுத்துமாறு வழங்கப்பட்டுள்ள அறிவித்தல்களுக்கு முறையான ஒத்துழைப்பு வழங்காத சொத்துக்களை சபைக்கு சுவீகரித்துக்கொண்டு நிலுவையான வரிப்பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்காக தெரிவுசெய்யப்பட்ட மருதானை, பாமன்கடை மேற்கு, கொம்பனித்தெரு, தெமட்டகொடை, கொட்டாஞ்சேனை கிழக்கு, கிருலப்பனை, மாளிகாவத்தை கிழக்கு, புதுக்கடை மேற்கு மற்றும் ஹவ்லொக் டவுன் ஆகிய பிரிவுகளுக்குரிய சொத்துக்களின் அட்டவணை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தச் சொத்துக்களின் தற்போதைய அனைத்து வரிப்பண நிலுவைப் பணத்தினையும் 2023 ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக செலுத்திமுடிக்குமாறு சொத்து உரிமையாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

**ஜே.எம்.பத்ராணி ஜயவர்தன**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை**

**கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

1. மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பாக அறவிட வேண்டிய நிலுவைப் பணத்தினை செலுத்துவதற்கு முன்னர் இந்த அலுவலகத்திற்கு சமூகமளித்து கணக்காளர் (வரிப்பணம்) அவர்களைச் சந்தித்து உரிய விபரங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றேன்.
2. 2021.03.31 ஆம் திகதியில் காணப்படும் நிலுவை மீதிக்குரிய அனைத்து கொடுப்பனவுகளும் குறைக்கப்பட்டுள்ளது. அதற்குறிய இற்றைப்படுத்தப்படாத கொடுப்பனவுகள் காணப்படுமாயின் கணக்காளரை சந்தித்து திருத்திக்கொள்ளமுடியும்.
3. நிலுவை மீதிகளைக் காட்டுகின்ற சொத்துக்களுக்குரிய வரிப்பணத்தினை தளர்த்துதல், குறைத்தல்/ கூட்டுதல் ஆகிய அனைத்தையும் ஒப்பிட்டு 2021.03.31 ஆம் திகதியன்றிலுள்ள மீதி கணக்கிடப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த ஒப்பிடல்களுடன் இணங்காதுவிடின் உரிய உறுதிப்படுத்தக் கூடியவாறான ஆவணங்களுடன் கணக்காளர் (வரிப்பணம்) அவர்களைச் சந்தித்து திருத்திக்கொள்ளமுடியும். தொலைபேசி இலக்கம் 011 2693136

| வீதி/பாதை | வரிப்பணம் இலக்கம் |
|---|---|
| **மருதானை** | |
| எஸ்.மஹிந்த ஹிமி மாவத்தை | 105 2/1 |
| எஸ்.மஹிந்த ஹிமி மாவத்தை | 105 1/1 |
| எஸ்.மஹிந்த ஹிமி மாவத்தை | 73 / 3 A |
| எஸ்.மஹிந்த ஹிமி மாவத்தை | 105 |
| அபேகுணரத்ன மாவத்தை | 87 |
| கே.டி.டேவிட் அவனியு | 17 |
| மருதானை வீதி | 524 3/1 |
| மருதானை வீதி | 524 1/1 |
| மருதானை வீதி | 600 |
| மருதானை வீதி | 586 /10 |
| மருதானை வீதி | 512 |
| மருதானை வீதி | 259 |
| பியதாஸ சிறிசேன மாவத்தை | 39 |
| பத்தேகம விமலவங்ஷ மாவத்தை | 72 1/1 |
| பத்தேகம விமலவங்ஷ மாவத்தை | 72 |
| பத்தேகம விமலவங்ஷ மாவத்தை | 7 |
| பத்தேகம விமலவங்ஷ மாவத்தை | 46 |
| பத்தேகம விமலவங்ஷ மாவத்தை | 15 |
| பத்தேகம விமலவங்ஷ மாவத்தை | 125 |
| பத்தேகம விமலவங்ஷ மாவத்தை | 108 |
| டி.பீ.ஜாயா வீதி | 77 |
| டி.பீ.ஜாயா வீதி | 71 |
| **பாமன்கடை மேற்கு** | |
| 37 ஆம் ஒழுங்கை | 87 |
| காலி வீதி | 327 |
| காலி வீதி | 339A |
| காலி வீதி | 339 |
| டபி.ஏ.சில்வா மாவத்தை | 168 |
| டபி.ஏ.சில்வா மாவத்தை | 201 |
| பெரேரா ஒழுங்கை | 22 |
| மெனிங் பிளேஸ் | 72/2 |
| ஹம்டன் ஒழுங்கை | 30/7 |
| ஹம்டன் ஒழுங்கை | 32 |
| **கொம்பனித்தெரு** | |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 88 3/2 |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 88 3/1 |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 80 |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 94 |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 92 |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 78 |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 74 |
| ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை | 104 |
| குமரன் ரத்னம் வீதி | 68 |
| குமரன் ரத்னம் வீதி | 66 |
| குமரன் ரத்னம் வீதி | 62 |
| குமரன் ரத்னம் வீதி | 42 |
| குமரன் ரத்னம் வீதி | 40 |
| குமரன் ரத்னம் வீதி | 134 |
| குமரன் ரத்னம் வீதி | 132 /11 |
| குமரன் ரத்னம் வீதி | 132 /1 |
| குமரன் ரத்னம் வீதி | 124 |
| மலே வீதி | 72 A |
| மலே வீதி | 66 |
| மலே வீதி | 59 |
| மலே வீதி | 57 1/2 |
| மலே வீதி | 57 |
| மலே வீதி | 157 |
| மலே வீதி | 141 |
| மஸ்ஜிதுல் ஜமீஹ் வீதி | 16 |
| சேர் ஹென்றி த மெல் மாவத்தை | 7 A |
| சேர் ஹென்றி த மெல் மாவத்தை | 45 |
| சேர் ஹென்றி த மெல் மாவத்தை | 26 |
| சேர் ஹென்றி த மெல் மாவத்தை | 12 |
| **தெமட்டகொடை** | |
| ஆராமய பிளேஸ் | 98 |
| ஆராமய வீதி | 114/1 |
| டனிஸ்டர் த சில்வா மாவத்தை | 658/1 |
| டனிஸ்டர் த சில்வா மாவத்தை | 658/27 A |
| டனிஸ்டர் த சில்வா மாவத்தை | 658/26 A |
| டனிஸ்டர் த சில்வா மாவத்தை | 658 |
| ஞானவிமல மாவத்தை | 75 / 1 A |
| கொலொன்னாவை வீதி | 201 |
| கொலொன்னாவை வீதி | 101 |
| கொலொன்னாவை வீதி | 57 |
| கொலொன்னாவை வீதி | 94 |
| கொலொன்னாவை வீதி | 103 |
| கொலொன்னாவை வீதி | 114 |
| கொலொன்னாவை வீதி | 96 |
| கொலொன்னாவை வீதி | 211 |
| கொலொன்னாவை வீதி | 89 |
| கொலொன்னாவை வீதி | 99 |

| வீதி/பாதை | வரிப்பணம் இலக்கம் |
|---|---|
| கொலொன்னாவை வீதி | 120 |
| கொலொன்னாவை வீதி | 236 |
| மஹவெல ஒழுங்கை | 37 |
| ஸ்ரீ தர்மராம வீதி | 151 B |
| ஸ்ரீ தர்மராம வீதி | 158 |
| ஸ்ரீ தர்மராம வீதி | 156 |
| ஸ்ரீ தர்மராம வீதி | 127/108 |
| ஸ்ரீ தர்மராம வீதி | 85 |
| ஸ்ரீ தர்மராம வீதி | 154 |
| **கொட்டாஞ்சேனை கிழக்கு** | |
| கே.பி.கிறிஸ்டி பெரேரா மாவத்தை | 279 1/1 |
| கே.பி.கிறிஸ்டி பெரேரா மாவத்தை | 279 2/1 |
| கே.பி.கிறிஸ்ட் பெரேரா மாவத்தை | 279 3/1 |
| கே.பி.கிறிஸ்ட் பெரேரா மாவத்தை | 257 |
| கே.சிறில் சீ பெரேரா மாவத்தை | 25 |
| கே.சிறில் சீ பெரேரா மாவத்தை | 99 |
| கே.சிறில் சீ பெரேரா மாவத்தை | 2 C |
| கே.சிறில் சீ பெரேரா மாவத்தை | 121 |
| கே.சிறில் சீ பெரேரா மாவத்தை | 29 |
| ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை | 231 |
| ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை | 237 |
| ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை | 260 |
| ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை | 379/1 |
| ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை | 375 |
| கொட்டாஞ்சேனை வீதி | 164 |
| புனித.பெனடிக்ட் வீதி | 2/1 |
| மேபீல்ட் வீதி | 59 |
| மேபீல்ட் வீதி | 59 1/1 |
| **கிருலப்பனை** | |
| அவிசாவெல வீதி | 95 |
| அவிசாவெல வீதி | 99 1/1 |
| அவிசாவெல வீதி | 99 |
| அவிசாவெல வீதி | 101 |
| விஜய குமாரதுங்க மாவத்தை | 173 2/1 |
| விஜய குமாரதுங்க மாவத்தை | 236/3 |
| **மாளிகாவத்தை கிழக்கு** | |
| தெமட்டகொடை வீதி | 465 |
| தெமட்டகொடை வீதி | 561 |
| மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதி | 146 |
| மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதி | 204 |
| மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதி | 242 |
| ஸ்ரீ சத்தாராம மாவத்தை | 223 /6 |
| ஸ்ரீ சத்தாராம மாவத்தை | 103 1/1 |
| **புதுக்கடை மேற்கு** | |
| மிஹிந்து மாவத்தை | 161 |
| ஹல்ஸ்ட்ரொப் தெரு | 156 |
| ஹல்ஸ்ட்ரொப் தெரு | 120 |
| ஹல்ஸ்ட்ரொப் தெரு | 64 1/1 |
| ஹல்ஸ்ட்ரொப் தெரு | 44 |
| ஹல்ஸ்ட்ரொப் தெரு | 39 |
| ஹல்ஸ்ட்ரொப் தெரு | 156 3/1 |
| ஹல்ஸ்ட்ரொப் தெரு | 188 |
| பீர் சயிபு வீதி | 95 1/2 |
| பீர் சயிபு வீதி | 95 3/2 |
| பீர் சயிபு வீதி | 95 3/1 |
| பீர் சயிபு வீதி | 77 |
| பீர் சயிபு வீதி | 64/14 |
| புனித செபஸ்டியன் மாவத்தை | 140 |
| வேல்ல வீதி | 301 C |
| வேல்ல வீதி | 282/17 C |
| **ஹவ்லொக் டவுன்** | |
| பம்பலபிட்டி வீதி | 302 |
| பம்பலபிட்டி வீதி | 399 |
| பம்பலபிட்டி வீதி | 399 1/1 |
| த பொன்சேகா வீதி | 17 |
| டிக்மன்ஸ் ஒழுங்கை | 6 |
| லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை | 32 C |
| ஹவ்லொக் வீதி | 153 |
| ஹவ்லொக் வீதி | 157 |
| ஹவ்லொக் வீதி | 166 |
| ஹவ்லொக் வீதி | 292 B |
| ஹவ்லொக் வீதி | 292 /B 1/1 |
| ஹவ்லொக் வீதி | 292 B 3/1 |
| ஹவ்லொக் வீதி | 138 B |
| லோரன்ஸ் வீதி | 52 3/1 |
| ரிஜ்வே பிளேஸ் | 34 A |
| முருத்தெட்டுவே ஆனந்த ஹிமி மாவத்தை | 102 |
| முருத்தெட்டுவே ஆனந்த ஹிமி மாவத்தை | 116 /12 |

**Purewin Auto Wheels (Pvt) Ltd.**
**Vehicle No. Model :- Biz 5XXX : TVS NTORQ**
மேற்படி வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள் 070-3152016
**பியோவின் ஓட்டோ வீல்ஸ்,**
இல. 19/A, விஜய வீதி, கம்பஹா.

**Repeat Your ad For Better Offers**

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை - வட மத்திய மாகாணம்

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

இவ் அதிகார சபைக்கு 2023ஆம் ஆண்டில் பின்வரும் பண்டங்கள் சேவைகள் மற்றும் தொழில் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. வழங்கல் பண்டங்களின் தொகுதிகள்

1. அனைத்து அளவுகளிலும் கருங்கல் வழங்கல் (½", ¾", 1½", 6x9" ABC கல் (கலப்பு கல்) கற்தூள்)
2. ஆற்று மணல்/ கழுவிய மணல் வழங்கல்
3. மண், சரளைக்கற்களை வழங்கல்
4. முன்கலவை கொங்கிறீட் வழங்கல்
5. அஸ்போல்ட் கொங்கிறீட் வழங்கல்
6. தார் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகள் (இமல்ஷன்) வழங்கல்
7. வீதிப் பராமரிப்புக் கருவிகளை மற்றும் உபகரணங்களை வழங்கல் (மண்வெட்டி, வீல்பரோ போன்றவை)
8. நிர்மாணத்துறை மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்கல் (நெடுஞ்சாலை நிர்மாணம் தொடர்பான)
9. கட்டிடப் பொருட்களை வழங்கல் (சீமெந்து, உருக்குக்கம்பி, வர்ணப்பூச்சுக்கள் மற்றும் ஏனைய கட்டிடப் பொருட்கள்)
10. இலகுரக வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் உதிரிப்பாகங்களை வழங்கல்
11. ஹியூம் குழாய்களை வழங்கல்
12. முன்வார்ப்பு கொங்கிறீட் (Pre cast) உருப்படிகளை வழங்கல்.
13. உள்ளக இணைப்பு (Interlocking) கல் வழங்கல்

### 02. சேவை வழங்கல் தொகுதி

14. வாடகை அடிப்படையில் கெப் வானங்களை (Single Cab) வழங்கல்
15. வாடகை அடிப்படையில் லொறிகள்/ டிப்பர் வாகனங்களை வழங்கல்
16. வீதி அபிவிருத்தி இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கல் உ+ம்: மோட்டர் கிரேடர், பெக்கோ லோடர், வீதி தகர்ப்பு, கொங்கிறீட் கலவை இயந்திரங்கள் போன்றவை.)
17. வீதி சமிக்ஞைகள் மற்றும் பெயர்ப்பலகைகளைத் தயாரித்து வழங்கல்
18. தர்மோ பிளாஸ்டிக் வீதி அடையாளமிடல்.

### 03. தொழில் சேவைகளை வழங்கல்

19. அஸ்போல்ட் (கார்பட் கலவையை) வழங்கி பரத்துதல்.
20. அளவை உபகரணங்களை - திருத்தம் செய்தல்

### 04. பதிவுகளிற்கான நிபந்தனைகள்

1. வழங்கல் தொகுதி ஒன்றிற்காக விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 1000.00 என்பதுடன், அதனைக் காசாக அல்லது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளரின் கணக்கு இலக்கம்: 0001472049 இற்கு கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் அதிகார சபையின் பிரதான அலுவலகத்தில் அல்லது பின்வரும் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
   - ❖ அநுராதபுரம் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - 025-2235101
   - ❖ ஹொரவப் பொத்தானை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்- 025-2278408
   - ❖ மரதன்கடவல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - 025-2264202
   - ❖ நொச்சியாகம நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - 025-2257815
   - ❖ மின்னேரிய நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - 027-2246208
   - ❖ மனம்பிட்டிய நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் - 027-2051011
2. ஒவ்வொரு பண்டம் மற்றும் சேவை வழங்கல் தொகுதிகளிற்காக தனித்தனியான விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி 2023 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் 5இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனுப்பலாம்.
3. மேற்படி தினத்தின் பின்னர் வருடத்தில் புதிய பதிவுகளிற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 2000.00 எனக்கணிப்பிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. வட மத்திய மாகாண சபையின் கீழ் மேற்படி தொகுதி ஒன்றிற்காக 2023ஆம் ஆண்டில் பதிவு செய்து கொண்டுள்ள நபர்கள் இருப்பின், அவர்கள் மீண்டும் அதிகார சபையில் பதிவு கொள்ளத் தேவை இல்லை.
5. உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2023 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் ஒப்படைத்தல் மேற்கொள்ளலாம். விண்ணப்பங்களை அடக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023ஆம் ஆண்டு' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.
6. போதுமான வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளாத விடத்து, பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிற்கு மேலதிகமாக திறந்த விலைமனுக் கோரும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**வட மத்திய மாகாணம்.**

**தொலைபேசி: 025-2222505**

it's what you want
www.adz.lk

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல:- KDS/TUM/04/01/06/01/3/65**

கண்டி மாவடடத்தில், தும்பனே பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் சந்தயா மத்துமதேவி சந்திரசேக்கர குணரத்ன ஆகிய நான் காணி சுவீகரித்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் காணும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணம் நான்கு இலட்சத்து முற்பத்து ஆறாயிரம் ரூபாய் (ரூ. 436,000.00) இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக் கொள்வதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DLA 00034/19 கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

**எஸ்.எம்.சீ. குணரத்ன**
**பிரதேச செயலாளர்,**
**தும்பனே**

**22.08.19 திகதி**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தும்பனே**

**உப அட்டவணை**

காணியின் பெயர் : கராபுவத்தை அல்லது துங்காலே வத்தை, ஹிட்டிகஹதென்ன, பலிகலப்பிட்டிய மற்றும் அஸ்வெத்தும
வரைபட இல. : 131/35/32
துண்டு இல. : 963
விஸ்தீரணம் : 0.0175 ஹெக்டயார்
எல்லைகள் : வடக்கு : 962ஆவது காணித் துண்டு
கிழக்கு : 846ஆவது காணித் துண்டு
தெற்கு : 846ஆவது காணித் துண்டு
மேற்கு: 962ஆவது காணித் துண்டு

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல:- KDS/TUM/04/01/06/01/5/1/27**

கண்டி மாவட்டத்தில், தும்பனே பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் சந்தயா மத்துமதேவி சந்திரசேக்கர குணரத்ன ஆகிய நான், காணி சுவீகரித்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் காணும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணம் ஆயிரம் ரூபாய் (ரூ. 186,675.00) இக்காணியின் உரிமைகோருபவர்கள் பெற்றுக்கொள்வதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DLA 00014/20 கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

**எஸ்.எம்.சீ. குணரத்ன,**
**பிரதேச செயலாளர்,**
**தும்பனே**

**2022.08.19 திகதி**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தும்பனே.**

**உப அட்டவணை**

காணியின் பெயர் :- நாகாவ, பிடியே கும்புர, போகஹ கும்புர, கலுகலவத்தை கொட்டனேகொட, கலுகல
வரைபட இல. :- 162/10/10
துண்டு இல. :- 349
விஸ்தீரணம் :- 0.0013 ஹெக்டயார்
எல்லைகள் :-
***வடக்கு*** : 348 மற்றும் 350ஆவது காணித் துண்டு
***கிழக்கு*** : 350, 48 மற்றும் 44ஆவது காணித் துண்டு
***தெற்கு*** : 48 மற்றும் 44ஆவது காணித் துண்டு
***மேற்கு*** : 44 மற்றும் 348 ஆவது காணித் துண்டு

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல:- KDS/TUM/04/01/06/01/4/2/8**

கண்டி மாவட்டத்தில், தும்பனே பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் சந்தயா மத்துமதேவி சந்திரசேக்கர குணரத்ன ஆகிய நான் காணி சுவீகரித்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் காணும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குரிய நஷ்டஈட்டு பணம் ஒரு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய் (ரூ. 112,250.00) இக்காணியின் உரிமை கோருபவர்கள் பெற்றுக்கொள்வதற்கு கண்டி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் DLA 00039/19 கீழ் பற்று வைக்கப்பட்டுள்ளது.

**எஸ்.எம்.சீ. குணரத்ன,**
**பிரதேச செயலாளர்,**
**தும்பனே**

**2022.08.19 திகதி**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**தும்பனே.**

**உப அட்டவணை**

காணியின் பெயர் :- மெதகொடவத்தை, நாகஸ்ஹேன வத்தை, கடுடெல்ல, ஹப்புகஹகனத்தஹேன
வரைபட இல. :- 162/09/09
துண்டு இல. :- 227
விஸ்தீரணம் :- 0.2025 ஹெக்டயார் இன் பர்ச்சஸ் 29.63
எல்லைகள் :-
***வடக்கு*** : துண்டு இல. 830, 829 மற்றும் 828
***கிழக்கு*** : 829, 828, 820 மற்றும் 821
***தெற்கு*** : துண்டு இல. 826, 825 மற்றும் 834
***மேற்கு*** : 834 மற்றும் 830

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
## 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: DIV/MW/LND/3/1/2-17

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/2/2015/PT/86

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியினை அரசாங்கம் எடுத்துக் கொள்ள எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2022.09.30ஆம் திகதிய 2229/70ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : வடமேல் மாகாணம் |
| மாவட்டம் | : குருணாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : மாவத்தகம |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல 646 வாடியகொட |
| கிராமம் | : வாடியகொட |
| ஆரம்ப வரைபட இல. | : இ.கி.வ. 1099 |
| காணியின் பெயர் | : மடமேவத்தை |
| மொத்த விஸ்தீரணம் | : 0.0632 ஹெக்டயார் |

**எம்.எஸ். ஜானக**
**பிரதேச செயலாளர்/ காணி எடுத்தற் உத்தியோகத்தர் மாவத்தகம.**

**2023.01 மாதம் 09ஆம் திகதி**
**மாவத்தகம பிரதேச செயலகம்.**


## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 064 -5XXX | TOYOTA | CE90 | 1990 |
| KI -3XXX | KIA | SPECTRA 1.6HB | 2001 |
| KI -1XXX | HONDA | BDBA-GD8 | 2006 |
| **ஜீப்** | | | |
| CAO -5XXX | NISSAN | DAA-HT32 XTRAIL | 2015 |
| **லொறி** | | | |
| PR -3XXX | TATA | ACE | 2011 |
| PT -1XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PU -7XXX | TATA | ACE EX | 2012 |
| DAE -4XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2016 |
| **கான்கிரீட் கலவை டிரக்** | | | |
| ZA -8XXX | NISSAN DIESEL | BDG-PK36C CONDOR | 2007 |
| **டிப்பர்** | | | |
| LE -6XXX | LANKA ASHOK LEYLAND | COMET TIPPER | 2007 |
| **வேன்** | | | |
| PA -7XXX | TOYOTA | KF-CR52V | 2002 |
| PB -4XXX | MICRO | MPV III | 2007 |
| PI -6XXX | SUZUKI | HBD-DA64V EVERY | 2015 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HC -7XXX | BAJAJ | AUTO RE2STROKE | 2003 |
| JV -6XXX | BAJAJ | AUTO RE 2STROCK | 2004 |
| QB -3XXX | BAJAJ | AUTO RE 2 STROCK | 2005 |
| QH -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QJ -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QP -0XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| YE -6XXX | BAJAJ | AR RE 200 | 2010 |
| YH -2XXX | BAJAJ | RE 205 | 2010 |
| YN -5XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YO -7XXX | BAJAJ | RE-205 | 2011 |
| YR -8XXX | BAJAJ | RE 205 | 2011 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 ஜனவரி 13ஆம், 16ஆம், 17ஆம், மற்றும் 18ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 ஜனவரி 18ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

www.skillsads.com

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**


### இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கேள்விக்கு முன்னரான கூட்டத்தை பிற்போடுதல்
### (Pre Bid Meeting Postpone Note)

2023 ஜனவரி 02ம் திகதி தினமின, டெயிலிநியூஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகள் மூன்றிலும் ஆரம்ப பத்திரிகை அறிவித்தல் பிரசுரமாகியதுடன், அதன் கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023 ஜனவரி 17ம் திகதி மு.ப. 10.45 இற்கு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

தெற்கு அதிவேக வீதியின் பாலடுவ முதல் பெதிகம வரையான பகுதியில் மற்றும் பெதிகம முதல் பரவாகும்புக்க வரையான பகுதியில் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுதல் சார்பாக தொழிலாளர்களை வழங்குதல் சார்பாக விலைமனுக்கள் கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால், வீதி அபிவிருத்தி அதிகார சபை சார்பாக தெற்கு அதிவேக வீதி பகுதியில் கீழே காணப்படும் செயற்றிட்டங்களுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுவதுடன் அதற்காக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த கேள்விக்கு முன்னரான கூட்டத்துடன் சம்பந்தப்பட்ட திகதி மற்றும் நேரம் கீழ்க்காணுமாறு அமையும்

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | கேள்விக்கு முன்னரான கூட்டம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த திகதி மற்றும் நேரம் | பிற்போடப்பட்ட கேள்விக்கு முன்னரான கூட்டம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 01. RDA/ EOM&M/ MNT/ ESEP/ SP/2022/49 | தெற்கு அதிவேக வீதியில் பாலடுவ முதல் பெரிகம வரையான பகுதியில் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுவதற்காக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் | 2023.01.16 பி.ப. 13.45 | **2023.01.17 மு.ப. 10.45** |
| 01. RDA/ EOM&M/ MNT/ ESEP/ SP/2022/50 | தெற்கு அதிவேக வீதியில் பெதிகம முதல் பரவாகும்புக்க வரையான பகுதியில் பராமரிப்பு விடயங்களை நிறைவேற்றுவதற்காக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் | | |

மேற்படி ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்ட கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.01.17 மு.ப. 10.45 மணிக்கு பெறுகைப் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 04ஆம் மாடி, மகநெகும மஹமெதுர இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரியில் நடைபெறும்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**01ம் மாடி, மஹநெகும மஹமெதுர,**
**இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த,**
**பத்தரமுல்ல.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கைபோக்குவரத்து சபை

### இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு தேவைப்படும் இயந்திராதிகள் (நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பயிற்சி அடங்கலானது) மற்றும் ஏனைய அம்சங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கான விலைமனு.

**PROCUREMENT No.: SLTB/TS/GEN/AM/02-II/2022**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2023.02.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிவரையும் 2 மாதங்களுள் வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புக்களுக்கு ஒத்திருக்கும் வகையில் இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு தேவைப்படும் இயந்திராதிகள் (நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பயிற்சி அடங்கலானது மற்றும் ஏனைய அம்சங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக பதிவு பெற்ற இயந்திராதிகளின் வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை போக்குவரத்துசபையின் சார்பாக இபோச உயர் மட்ட பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துசபையின் பெறுகை குழுவின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் கீழே வழங்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணத்தை/ கட்டணங்களை செலுத்திய பின்னர், 2023.01.13 ஆம் திகதியிலிருந்து 2023.02.02 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கப்படும்.

| இல. | அம்சம் | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் | விலைமனுப் பிணை |
|---|---|---|---|
| 01 | Tyre Buffing Machines | 2000.00 | 50,000.00 |
| 02 | Tyre Building Machines | 2000.00 | 50,000.00 |
| 03-06 | Curing Rims, Curing Tubes, Curing Flaps, Curing Envelopes (should be suitable for 295/80 R 22.5, 12R 22.5, 10R 22.5 tyres) | 3000.00 | 75,000.00 |

2. விலைமனுக்கள் 2023.06.04 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் அம்சங்களுக்கு மேலே குறிப்பிட்டவாறு விலைமனுப்பிணையுடன்/பிணைகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2023.07.05 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் இபோச இனால் சமர்ப்பிக்கப்படும் முதலாவது எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் மாற்ற இயலாததும் நிபந்தனையின்றி ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதும் இலங்கை மத்தியவங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் பதிவுபெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற காப்புறுதி முகவரான்மையொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
4. விலைமனுதாரரொருவரினால் சமர்ப்பிக்கப்படும் அம்சங்களின் மொத்த பெறுமதியானது 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின், பின்வருவது பிரயோகப்படுத்தப்படும்.
   (அ) எந்தவொரு விலைமனுதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரது சார்பாக செயற்படும் எந்தவொரு நபரும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னதாக கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை ''சமாகம் மெதுர'' பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் விலைமனுதாரர்கள் தம்மை விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னர் உடனடியாகவும் பெறுகையை வழங்குவதற்கு முன்னராகவும் விலைமனுக்களை விலைமனுதாரர்கள் பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்களின் பிரகாரம் பதிவுச் சான்றிதழை அவ்வாறான விலைமனுதாரர் சமர்ப்பிக்காவிடின், பெறுகையானது எந்தவொரு விலைமனுதாரருக்கும் வழங்கப்படமாட்டாது.
5. விலைமனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பம் வைக்கப்பட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இந்த அலுவலகத்தில் இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply & Delivery of Machinery (including Installation, Commissioning & Training) and other items required for SLTB Ampara Tyre Factory"** என குறிப்பிடப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கோரல் **2023.02.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு** மூடப்பட்டு அதன் பின்னர் அவைகள் உடனடியாகவே கொழும்பு-05, கிருளவீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபை, கேள்வி பிரிவில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**200, கிருளவீதி, கொழும்பு-05.**
**விசாரணைகள்: செயலாளர், பெறுகைகுழு**
**தொலைபேசி: 011 7706110 மற்றும் 0771056110. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457**

**பின்வருவனவற்றையும் தயவு செய்து கவனிக்கவும்:**

**இபோச இன் அனைத்து பெறுகை செயற்பாடுகளின் தகவலுக்காக https://sltb.lk மற்றும் https://promise.lk என்ற இணையத்தை தயவு செய்து பார்வையிடவும்.**

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
**பிரதேச அபிவிருத்தி வங்கி**
RDB Pradeshiya Sanwardhana Bank

**1990ம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4ம் பிரிவின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.**

பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2021 நவம்பர் மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற 2021/12 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடன்படுனர் என அழைக்கப்படும் பன்னிபிட்டிய, ஹய்லெவல் வீதி, இலக்கம் 362, எனும் முகவரியில் வசிக்கும் அமரசிங்ஹ ஆரச்சிலாகே சுவர்னா பெரேரா (தேசிய அடையாள அட்டை இலக்கம் 194783010010) சுமித் அமரசிரி பெரேரா பாலசூரிய (தேசிய அடையாள அட்டை இலக்கம் 850524432V) சஜீவ வர்ணசிரி பெரேரா பாலசூரிய (தேசிய அடையாள அட்டை இலக்கம் 832463914V) சிதத் ஜயசிரி பெரேரா பாலசூரிய (தேசிய அடையாள அட்டை இலக்கம் 912260879V) ஆகியோரினால் எமது ஹோமாகம கிளையில் பெற்றுள்ள கடன் தொகையான ரூபா 20 மில்லியன் அதாவது 2017.09.12 திகதி திரு.சீ.டீ.மாரசிங்ஹ நொத்தாரிசு அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 8575 இலக்க ஈட்டு முறிக்கான ரூபா 17,721,000/= கடன் தொகை மற்றும் 8573 ஈட்டு முறிக்கான ரூபா 2,279,000/= கடன் தொகை கைவிடப்பட்டுள்ளதால் கீழ் காணும் 8575,8573 எனும் ஈட்டுமுறிகளின் கீழ் 2021.08.06 திகதி பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வருமதியாகவுள்ள மொத்த தொகையான (கடன் மீதி சேர்க்கப்பட்ட) ரூபா 17,253,242.77, (ரூபாய் ஒரு கோடி எழுபத்திரண்டு இலட்சத்து ஐம்பத்தி மூவாயிரத்து இருநூற்றி நாற்பத்திரண்டு சதம் எழுபத்தேழு) மற்றும் அத்திகதிக்கு வருமதியாகவுள்ள வட்டி ரூபா 5,672,554.78 (ஐம்பத்தாறு இலட்சத்து எழுபத்தி இரண்டாயிரத்து ஐநூற்றி ஐம்பத்தி நாலு சதம் எழுபத்தெட்டு)மற்றும் அத் திகதிக்கு வருமதியாகவுள்ள தாமத கட்டணம் ரூபா 84,153.03 (எண்பத்தி நாலாயிரத்து நூற்றி ஐம்பத்தி மூன்று சதம் மூன்று) உடன் முழுத் தொகை 23,009,950.58 (இரண்டு கோடி முப்பது இலட்சத்து ஒன்பதாயிரத்து தொளாயிரத்து ஐம்பது சதம் ஐம்பத்தெட்டு) அத்துடன் 2021.08.06 திகதி தொடக்கம் ஏலவிற்பனை திகதி வரை 23% வட்டி வீதத்தின் கீழ் அறவிடப்பட வேண்டிய வட்டி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, விளம்பரக் கட்டணம் உட்பட ஏலவிற்பனைச் செலவுடன் மேலும் சட்டரீதியான செலவுகள் வங்கிக்கு வருமதியாக இருப்பின் அவற்றையும் சேர்த்து ஏதாவது கொடுப்பனவுகள் அறவிடப்பட்டிருப்பின் அவற்றினை கழித்து அறவிடுவதற்காக கடனாளிகளினால் இலக்கம் 8575,8573 ஆகிய ஈட்டு முறிகளினால் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படல் வேண்டும். இவ்வாதனம் ஏலத்தில் விற்பனை செய்யும் அதிகாரம் இலக்கம் 200, 2ஆம் மாடி, ஹல்ப்டொர்ப் வீதி, கொழும்பு 12 என்ற அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர் திரு எல். பீ. சேனாநாயக்க அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**8575 ஈட்டு முறி அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளேயில், பல்லே பற்றில் மஹரகம நகர சபை அதிகாரத்திற்குட்பட்ட மஹரகம பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 530 மஹரகம கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள பன்னிபிட்டிய எனும் கிராமத்தில் காணப்படும் மிகஹதெனிய எனும் காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஏச். ஏ. டீ. பிரேமரத்ன அவர்களால் 2012.04.05 திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 6174 வரைபடத்தில் துண்டு இலக்கம் 2 பீ எனும் (ஏ 0 ரூ 0 பர் 12) விஸ்தீரணம் கொண்ட காணியின் எல்லைகளான

வடக்கே - ஹய்லெவல் வீதி
கிழக்கே - லேக் ஹவுஸ் லிமிடட் ஆதனம்
தெற்கே - இலக்கம் 2 எப் எனும் காணித்துண்டு
மேற்கே - இலக்கம் 2 எப் மற்றும் 2 சீ எனும் காணித் துண்டுகள்

அதிகாரம் பெற்ற நில அளவையானர் திரு. ஏச். ஏ. டீ. பிரேமரத்ன அவர்களால் 2012.04.05 திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 6174 வரைபடத்தில் துண்டு இலக்கம் 2 டீ எனும் (ஏ 0 ரூ 0 பர் 21.25) விஸ்தீரணம் கொண்ட காணியின் எல்லைகளான

வடக்கே - ஹய்லெவல் வீதி மற்றும் ஆர் அமரசிங்ஹ உரிமைகோரும் இலக்கம் 235 வரைபடத்தின் பீ எனும் காணி துண்டு
கிழக்கே - இலக்கம் 2 சீ எனும் காணித்துண்டு
தெற்கே - இலக்கம் 2 ஈ எனும் காணித்துண்டு
மேற்கே - ஆர் அமரசிங்ஹ உரிமைகோரும் இலக்கம் 235 வரைபடத்தின் பீ எனும் காணித் துண்டு மற்றும் ரஞ்சன் ஜே பெரியப்பெரும மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஏச். ஏ. டீ. பிரேமரத்ன அவர்களால் 2012.04.05 திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 6174 வரைபடத்தில் துண்டு இலக்கம் 2 எப் எனும் (ஏ 0 ரூ 1 பர் 14.75) விஸ்தீரணம் கொண்ட காணிக்கு எல்லைகளான

வடக்கே - இலக்கம் 2 சீ மற்றும் 2 ஈ எனும் காணித்துண்டுகள்
கிழக்கே - இலக்கம் 2 சீ எனும் காணித்துண்டு மற்றும் லேக் ஹவுஸ் லிமிடட் நிறுவனத்துக்கு சொந்தமான ஆதனம்
தெற்கே - பெரியப் பெரும சீ கரோலிஸ் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி
மேற்கே - ரஞ்சன் ஜே பெரியப் பெரும மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி மற்றும் இலக்கம் 2 ஈ எனும் காணித்துண்டு

மேற்படி பன்னிபிட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள மீகஹதெனிய என்ற காணிக்கு நில அளவையானர் திரு. ஏச்.ஏ. டீ. பிரேமரத்ன அவர்களால் 2012.04.05 திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 6174 வரைபடத்தில் இலக்கம் 2 சீ காணி துண்டின் எல்லைகளான

வடக்கே - ஹைலெவல் வீதி
கிழக்கே - இலக்கம் 2 பீ எனும் காணித்துண்டு
தெற்கே - இலக்கம் 2 எப் எனும் காணித்துண்டு
மேற்கே - இலக்கம் 2 ஈ மற்றும் 2 டீ எனும் காணித்துண்டுகள்

எல்லைகளான மூன்று தசம் ஏழு பர்சஸ் (ஏ 0 ரூ 0 பர் 3.70) ஆகிய ஹெக்டேயர் 0.00936 விஸ்தீரணம் கொண்ட காணிக்கு பொது வழி உரித்துடைய எல்லைக்குள் காணப்படும் காணி கட்டிடங்கள் மற்றும் அனைத்து விடயங்களும் ஆகும்.

**8573 ஈட்டு முறி அட்டவணை**

அதிகாரம் பெற்ற நில அளவையானர் திரு. ஏச் ஏ டீ பிரேமரத்ன அவர்களால் 2012.04.05 திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 6174 வரைபடத்தில் துண்டு இலக்கம் 2 ஈ எனும் (ஏ 0 ரூ 0 பர் 12) விஸ்தீரணம் கொண்ட காணிக்கு எல்லைகளான

வடக்கே - இலக்கம் 2 டீ எனும் காணித்துண்டு
கிழக்கே - இலக்கம் 2 சீ மற்றும் 2 எப் எனும் காணித்துண்டுகள்
தெற்கே - இலக்கம் 2 எப் எனும் காணித்துண்டு
மேற்கே - ரஞ்சன் ஜே. பெரியப்பெரும மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி மற்றும் அதனுள் உள்ளடங்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்து விடயங்கள்

அதிகாரம் பெற்ற நில அளவையானர் திரு. ஏச். ஏ. டீ. பிரேமரத்ன அவர்களால் 2012.04.05 திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 6174 வரைபடத்தில் துண்டு இலக்கம் 2 சீ எனும் கொண்ட காணிக்கு எல்லைகளான

வடக்கே - ஹய்லெவல் வீதி
கிழக்கே - இலக்கம் 2 பீ எனும் காணித்துண்டு
தெற்கே - இலக்கம் 2 எப் எனும் காணித்துண்டு
மேற்கே - இலக்கம் 2 ஈ மற்றும் 2டீ

எல்லைகளாகக் கொண்ட மூன்று தசம் ஏழு பர்சஸ் (ஏ 0 ரூ 0 பர் 3.70) ஆகிய விஸ்தீரணம் கொண்ட காணிக்கு பொது வழி உரித்துடையதாகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**பணிப்பாளர் சபை செயலாளர்,**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**பிரதான அலுவலகம்,**
**இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி**
**தொலைபேசி இலக்கம் : 0112035454**

# டில்ஷான் மதுஷங்க, பத்துமுக்கு காயம்: கன்னிப் போட்டியில் ஆடினார் நுவனிது



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க மற்றும் பத்தும் நிசங்க காயத்திற்கு உள்ளாகி இருப்பதால் இந்தியாவுக்கு எதிராக நேற்று (12) நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் அவர்கள் ஆடவில்லை.

இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியின்போதே மதுசங்கவின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் பாதியிலேயே மைதானத்தில் இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவரது காயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட எம்.ஆர்.ஐ மற்றும் எக்ஸ்ரே சோதனைகளில் அவரது காயம் இன்னும் குணமடையவில்லை என்று உறுதியான நிலையிலேயே நேற்றைய போட்டியில் இருந்து விடுவிக்கப்பட்டார். கொல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் மதுஷங்கவின் இடத்திற்கு லஹிரு குமார அழைக்கப்பட்டார்.

முதல் ஒருநாள் போட்டியில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்கவின் முதுகுப் பகுதியில் உபாதை ஏற்பட்டுள்ளது. அவருக்கு பதில் 23 வயதான நுவனிது பெர்னாண்டோ தனது கன்னி ஒருநாள் போட்டியில் ஆடுவதற்கு வாய்ப்புப் பெற்றார்.

இதன்மூலம் அவர் இலங்கைக்காக ஒருநாள் வரம் பெற்ற 207ஆவது வீரராக பதிவானார். இது அவரது முதல் சர்வதேச போட்டியாகவும் இருந்தது.

இதேவேளை முதலாவது ஒருநாள் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது பந்து பட்டதில் உதட்டில் காயம் ஏற்பட்ட சாமிக்க கருணாரத்னவுக்கு மூன்று தையல் போடப்பட்டுள்ளது.

என்றாலும் அந்தக் காயம் தீவிரம் இல்லாததால் அவர் முதல் போட்டியில் ஆடிய நிலையில் நேற்றைய போட்டியிலும் களமிறங்கினார். முன்னதாக அண்மையில் நடந்த லங்கா பிரிமியர் லீக் தொடரின்போதும் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது கருணாரத்னவின் வாயில் பந்து பட்டு பற்களை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானுடனான போட்டிகளை கைவிட்டது ஆஸி. கிரிக்கெட்



தலிபான்களின் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து அவுஸ்திரேலிய அணி விலகியுள்ளது.

ஐ.சி.சி சுப்பர் லீக்கின் அங்கமாக அவுஸ்திரேலிய அணி வரும் மார்ச் மாதம் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவிருந்தது.

எனினும் அவுஸ்திரேலிய அரசு உட்பட தரப்புகளுடன் ஆலோசனையை பெற்ற பின் இந்தத் தொடரில் பங்கேற்காமல் இருக்க தீர்மானித்ததாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னர் தலிபான்களின் பெண்கள் மீதான ஒடுக்குமுறையை காரணம் காட்டி கடந்த 2021 நவம்பரில் ஹோர்பாட்டில் நடைபெறவிருந்து ஆப்கானுடனான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியையும் அவுஸ்திரேலியா ரத்துச் செய்தது.

இந்தத் தொடரில் இருந்து விலகுவதால் அவுஸ்திரேலிய அணி உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் 30 புள்ளிகளை ஆப்கானிஸ்தானிடம் இழக்கவுள்ளது. எனினும் அந்த அணி இந்தியாவில் வரும் ஒக்டோபரில் நடைபெறவுள்ள 50 ஓவர் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற்றிருப்பதோடு ஆப்கானும் ஏற்கனவே தகுதியை உறுதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர் போட்டி நாளை ஆரம்பம்

**றுசைக் பாறுக்**

இலங்கை மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர் சங்கம் ஒழுங்கு செய்துள்ள 36ஆவது வருடாந்த மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி நாளை (14) மற்றும் நாளை மறுதினம் (15) வெளிநாட்டு விளையாட்டு வீரர்களின் பங்கேற்புடன் கொழும்பு சுகததாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் மெய்வல்லுனர் விளையாட்டு வீரர்கள் கடந்த காலங்களில் சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு இந்த மெய்வல்லுநர் போட்டி பங்களிப்புச் செய்துள்ளது. இதில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 750க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

நாளைக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் விழா, ஜனவரி 15ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நிறைவடைய இருப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் முஹிசீன் ஆரிப் தெரிவித்தார்.

# அநுராதபுரம் ஸாஹிராவின் கிரிக்கெட் போட்டி நாளை

**அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்**

அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை (14) மற்றும் நாளைமறுதினம் (15) ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்களை ஒன்று சேர்த்தல் மற்றும் பாடசாலையின் விளையாட்டுத்துறையை கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக இச்சுற்றுப் போட்டி நடத்தப்படுகிறது. அணிக்கு ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் அணிகள் பங்கு பற்றும் இப்போட்டி நிகழ்ச்சிகளில் 21 வயதுக்கு மேற்பட்ட அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரியின் மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

# தனுஷ்க குணதிலக்க வழக்கு பெப்ரவரி 23க்கு ஒத்திவைப்பு



பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க மீதான வழங்கு விசாரணை வரும் பெப்ரவரி 23ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பொலிஸாரின் ஆதாரங்களை இறுதி செய்ய முடியுமாகியுள்ளது.

குணதிலக்க மீதான வழக்கு விசாரணை சிட்னி டௌனிங் சென்டர் நீதிமன்றத்தில் நேற்று (12) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அது அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்க அவுஸ்திரேலியா சென்றிருந்த 31 வயது குணதிலக்க, பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதல் நடத்தியதாக கடந்த நவம்பர் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நவம்பர் 17 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் குணதிலக்கவின் பிணை நிபந்தனைகளான இரவில் வெளியே செல்லத் தடை உட்பட கடும் கட்டுப்பாடுகள் தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

வழக்கு விசாரணையின் போது தனுஷ்க குணதிலக்க நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் சார்பில் அவரது சட்டத்தரணி ஆஜரானார். சட்டத்தரணி ஆஜராகியதால், பெப்ரவரி மாதமும் குணதிலக்க நீதிமன்றத்தில் ஆஜராவதில் விலகுக் அளிக்கப்பட்டுள்ளது.

# பயிற்சிப் போட்டியில் இலங்கைக்கு வெற்றி



19 வயதுக்கு உட்பட்ட மகளிர் டி20 உலகக் கிண்ண போட்டியில் இலங்கை அணி தனது இரண்டாவது பயிற்சிப் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நாளை (14) ஆரம்பமாகவுள்ள மகளிர் இளையோர் டி20 உலகக் கிண்ணத்திற்காக இலங்கை அணி கடந்த புதன்கிழமை ஸ்கொட்லாந்தை பயிற்சிப் போட்டியில் சந்தித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஸ்கொட்லாந்து அணி 16.3 ஓவர்களில் 87 ஓட்டங்களுக்கே சுருண்டது. தெவ்மி விஹாங்க 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை அணி 18.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 91 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. இதன்போது விஷ்மி குணரத்ன ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களை பெற்றார்.

19 வயதுக்கு உட்பட்ட டி20 மகளிர் உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் நாளை (14) ஐக்கிய அமெரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# இரு இருமல் மருந்துகளை கைவிடுவதற்கு அறிவுறுத்து



உஸ்பகிஸ்தானில் 19 உயிரிழப்புகளுடன் தொடர்புபட்ட இந்தியாவின் மரியான் பயோடெக் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் இரு இருமல் மருந்துகளை பயன்படுத்த வேண்டாம் என உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

Ambronol மற்றும் DOK1 Max என்ற இந்த இரு இருமல் மருந்துகளிலும் நச்சுப் பொருளான எத்திலீன் கிளைக்கோல் இரசாயனம் இருப்பது உஸ்பகிஸ்தான் சுகாதார அமைச்சு நடத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த மருந்துகள் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு பயன்படுத்த உகந்ததல்ல என்று குறிப்பிட்டிருக்கும் உலக சுகாதார அமைப்பு, இவைகளின் பயன்பாட்டை கைவிடும்படி உலக நாடுகளை கேட்டுக் கொண்டுள்ளது. எனினும் உஸ்பகிஸ்தானில் இடம்பெற்ற மரணங்களை அடுத்து உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் செயல்படும் மரியான் பயோடெக் நிறுவனத்தின் உற்பத்தியை இந்திய சுகாதார அமைச்சு இடைநிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# காரில் மோதி ஐவரை கொன்ற ஆடவர் கைது



சீனாவின் குவான்சுவில் பாதசாரிகள் மீது கார் வண்டியை செலுத்தி ஐவரை கொன்று மேலும் 17 பேருக்கு காயம் ஏற்படுத்திய சம்பவத்தில் ஆடவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் பொதுமக்களிடையே பெரும் கோபத்தை ஏற்படுத்தி இருப்பதோடு அந்த ஆடவர் வேண்டுமென்றே இதனைச் செய்ததாக குற்றம்சாட்டப்படுகிறது.

இந்த விபத்துக்குப் பின்னர் அந்த ஆடவர் கார் வண்டியில் இருந்து இறங்கி பணத் தாள்களை வீசி எறியும் காட்சி அடங்கிய வீடியோக்கள் இணையத்தில் பரவியுள்ளன. 22 வயது ஆடவரை கைது செய்த பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

19 மில்லியன் மக்கள் வசிக்கும் இந்தத் தெற்கு நகரில் கடந்த புதன்கிழமை (11) பரபரப்பான மாலை நேரத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# ஆப்கானில் தற்கொலை தாக்குதல்: 20 பேர் பலி



ஆப்கான் தலைநகர் காபுலில் வெளியுறவு அமைச்சுக் கட்டத்திற்கு வெளியில் கடந்த புதனன்று (11) இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தற்கொலைதாரி வெளியுறவு அமைச்சுக்குள் நுழைய முயன்றபோதும் அது தோல்வி அடைந்திருப்பதாக தலிபான்களால் நடத்தப்படும் தொடர்பாடல் அமைச்சின் அதிகாரியான உஸ்தாத் பரீதுன் தெரிவித்துள்ளார். எனினும் பொலிஸ் தரப்பில் ஐவரே இந்தத் தாக்குதலில் உயிரிழந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாமிய அரசுக் குழுவின் உள்ளூர் பிரிவு இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளது.

கடந்த ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய தலிபான்கள் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தியதாகக் கூறியபோதும் இஸ்லாமிய அரசு குழு உரிமை கோரும் பல குண்டு வெடிப்புகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

# கொவிட் தகவலை தரும்படி சீனாவிடம் சுகாதார அமைப்பு மீண்டும் வலியுறுத்து



கொவிட் தொற்று பரவல் பற்றிய தகவல்களை தரும்படி உலக சுகாதார அமைப்பு சீனாவை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி இருப்பதோடு கொரோனா தொற்றின் புதிய திரிபுக்கு எதிராக போராடி வரும் அமெரிக்காவின் வெளிப்படைத் தன்மையை பாராட்டியுள்ளது.

தற்போதைய கொவிட் சம்பவங்களது அதிகரிப்பின் உண்மையான அளவை சீனாவின் உத்தியோகபூர் தரவுகள் காண்பிப்பதில்லை என்பது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு தொடர்ச்சியாக கவலை வெளியிட்டு வருகிறது.

“சீனாவில் உயிரிழப்புகள் இன்னும் குறைவாகவே பதிவு செய்யப்படுவதாக உலக சுகாதார அமைப்பு நம்புகிறது” என்று அந்த அமைப்பின் அவசரநிலைகளுக்கான பணிப்பாளர் மைக்கல் ரியான் கடந்த புதனன்று (11) செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மறுபுறம் அமெரிக்காவில் ஒமிக்ரோன் உப திரிபான எக்ஸ்.பி.பி. 1.5 வேகமாகப் பரவிவரும் நிலையில் அந்நாட்டு நிர்வாகம் ஒத்துழைப்புடன் செயற்படுவது பற்றி பாராட்டியுள்ளார்.

“தரவுகள் மற்றும் அந்த தரவுகளின் தாக்கங்கள் தொடர்பில் உலக சுகாதார அமைப்புடன் அமெரிக்கா மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு வருகிறது” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

எக்ஸ்.பி.பி. 1.5 தற்போது 38 நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதோடு வேகமாக பரவுவது உறுதியாகியுள்ளது. அது முந்தைய நோய்த் தொற்றுக்கான எதிர்ப்புச் சக்தி அல்லது தடுப்பூசியின் திறனை பலவீனப்படுத்தி செயற்படுவதாக நம்பப்படுகிறது.

சீனா கடந்த மூன்று ஆண்டுகளாக செயற்படுத்தி வந்த கண்டிப்பான கொவிட் கட்டுப்பாடுகளை தளர்த்திய நிலையிலேயே அங்கு நோய்த் தொற்று தீவிரமாக பரவ ஆரம்பித்துள்ளது. அங்கு மருத்துவமனைகள் நிரம்பி வருவதோடு தகன கூடங்களும் நிரம்பி இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் உத்தியோகபூர்வ தரவுகளின்படி சீனாவில் கடந்த மாதம் தொடக்கம் 37 பேரே நோய்த் தொற்றினால் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# மஸ்க் அதிக சொத்துகளை இழந்து கின்னஸ் சாதனை



இலோன் மஸ்க் உலகிலேயே மிக அதிகமான அளவு சொத்துகளை இழந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

2021ஆம் ஆண்டு நவம்பர் முதல் கடந்த ஆண்டு டிசம்பர் வரை அவர் 165 பில்லியன் டொலர் இழந்திருப்பதாகக் கின்னஸ் உலக சாதனை அதன் இணையத்தளத்தில் தெரிவித்தது.

அவருக்கு ஏற்பட்ட இழப்பு இன்னும் அதிகம் இருக்கலாம் என்று சிலர் கூறுவதாகக் கின்னஸ் குறிப்பிட்டது.

மஸ்க் ட்விட்டர் நிறுவனத்தை வாங்கிய பின்னர் அவர் டெஸ்லா நிறுவனத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை என்று முதலீட்டாளர்களிடையே அக்கறை நிலவி வருவதாக பி.பி.சி செய்தி நிறுவனம் கூறியது. டெஸ்லா நிறுவனத்தின் பங்கு விலைகளும் சரிந்துள்ளன. இதற்கு முன்னர் 2000ஆம் ஆண்டு ஜப்பானைச் சேர்ந்த மசயோஷி சன் 58.6 பில்லியன் டொலரை இழந்து கின்னஸ் சாதனை படைத்திருந்தார். மஸ்க்கின் சொத்து மதிப்பு தற்போது சுமார் 178 பில்லியன் டொலர் என்று போர்பஸ் குறிப்பிட்டது.

# 4 வகையான டைனசோர் எச்சங்கள் கண்டுபிடிப்பு



நான்கு வகை டைனசோர்களின் எச்சங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சிலியின் லாஸ் சைனாஸ் பள்ளத்தாக்கில் அவை கண்டுபிடிக்கப்பட்டன. 4 வகை டைனசோர்களின் பற்கள், மண்டை ஓட்டு எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.

அவை சிறிய விலங்குகளைச் சாப்பிட்டு வந்ததாகவும் பெரிய கால்நகங்கள், சிறிய பற்கள், பெரிய கைகால்களைக் கொண்டிருந்ததாகவும் ஆய்வாளர்கள் கூறினர்.

சுமார் 66 முதல் 75 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் அவை வாழ்ந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். அவை இதற்கு முன் அவ்விடத்தில் அடையாளம் காணாத டைனசோர் வகைகளின் எச்சங்கள் என ஆராய்ச்சியாளர்கள் கூறினர். அதில் மெகாராப்டோர் வகை டைனசோரின் எச்சங்களும் அடங்கும். லாஸ் சைனாஸ் பள்ளத்தாக்கில் எப்போதும் புதைபடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் வழக்கத்துக்கு மாறானவற்றைக் கண்டுபிடித்ததில் ஆய்வாளர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.